பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 239 ஆடி 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 26 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
BBA
(Bachelor of Business Administration)
Leading to MBA
BLC CAMPUS
0777 174 443
www.blccampus.edu.lk


# இனியும் தமிழர் ஏமாறத் தயாரில்லை
# உச்சபட்ச அதிகாரப் பகிர்வு வேண்டும்

## சபையில் சம்பந்தன் இடித்துரைப்பு

கொழும்பு, ஜூலை 26

'உச்சபட்ச அதிகாரப் பகிர்வு தமிழர்களுக்கு வழங்கப்படவேண்டும். எமது மக்களை நீங்கள் தொடர்ந்து ஏமாற்ற முடியாது. இனிமேல் ஏமாறவும் எமது மக்கள் தயாரில்லை.' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அத்துடன், இலங்கையில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாற்றையும் அவர் சபையில் பட்டியலிட்டார்.

19



## சிங்களவர்கள் தமிழர்களின் விரோதிகள்

### கூட்டமைப்பினுடைய பரப்புரை இதுவாம்

கொழும்பு, ஜூலை 26

சிங்களவர்கள் தமிழ் மக்களின் விரோதிகள் என்ற பரப்புரையையே தமிழ் தேசிய கூட்டமைப்பு மேற்கொண்டுவருகின்றது. அத்துடன் அரசின் பங்காளியாக இருந்துகொண்டு வாக்களித்த மக்களை ஏமாற்றுவதற்கே அரசுக்கு எதிராக செயற்பட்டுவருகின்றது

19

## முழு மருத்துவ, சுகாதாரத் தேவைகளை வடக்கில் சிலவருடங்களில் பெறமுடியும்

### அமைச்சர் ராஜித யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

மருத்துவம் மற்றும் சுகாதாரத் தேவைகளை முழுமையாக நிறைவுசெய்யும் இடமாக ஒருசில வருடங்களில் வடக்கு மாகாணம் திகழும் என்று கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் அமைக்கப்பட்ட செம்பிறை மீள்வாழ்வு சிச்சை நிலையத்தைக் கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் பல்வேறு சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. இருதய அறுவைச் சிச்சைப் பிரிவு சிறப்பாக உள்ளது. மாங்குளத்

19

## கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அரசின் அடிவருடிகள் அல்லர்!

### அரசியல் தீர்வே முக்கியம் என சபையில் விளாசினார் செல்வம்.

கொழும்பு, ஜூலை 26

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசுக்குக்கு ஆதரவு வழங்குகின்றார்கள் என்பதற்காக அவர்களை அரசின் அடிவருடிகள் என எவரும் எடைபோடக்கூடாது.' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்

19

see more news in
newuthayan.com

## ஷாபி பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, ஜூலை 26

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்த குருணாகல் போதனா மருத்துவமனையின் மகப்பேற்று மருத்துவர் சேகு சிஹாப்தீன் ஷாபி இரண்டு மாதங்களின் பின்னர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட் டார்.

19

## தெரிவுக்குழு முன்னிலையில் ஓகஸ்ட் 6இல் ரணில் சாட்சியம்

கொழும்பு, ஜூலை 26

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் அடுத்த மாதம் 6ஆம் திகதி சாட்சியமளிக்க வருமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அன்றையதினம் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளார்.

19

## குளவி கொட்டியதில் முதியவர் உயிரிழப்பு

### ஊரெழு அம்மன் ஆலயத்தின் மூன்றாம் திருவிழாவில் சோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஊரெழு அம்மன் ஆலயத்தின் தேர் முட்டியிலிருந்த குளவிக் கூடு கலைந்து அதிலிருந்த குளவி கொட்டியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. ஊரெழுவைச்

19

## குடாநாட்டில் நேற்றிரவு கடும் மழை

யாழ். ஜூலை 26

யாழ்ப்பாணக்குடாநாட்டில் நேற்று இரவு கடும் மழை பெய்தது. யாழ்ப்பாணம்

19

### ஒட்டுசுட்டான்

## அலகரை கோவிலில் கும்பல் அட்டூழியம்!

முல்லைத்தீவு, ஜூலை 26

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் அலகரை முருகன் ஆலயத்துக்குள் புகுந்த கும்பல் திருவிழாவைக் குழப்பி, ஆலய ஒலிபெருக்கிகளை அடித்துச் சேதப்படுத்தி அங்கு நின்றவர்களையும் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இது பற்றி ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கு அறிவித்தும் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பக்தர்கள்

19

## வைரவர் கோவிலை இடித்தழித்து விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன

### இனந்தெரியாத கும்பல் அடாவடி

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணத்தில் வைரவர் ஆலயம் ஒன்று இனம் தெரியாத கும்பல் ஒன்றால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. வைரவர் சிலை உள்ளிட்ட விக்கிரகங்களையும் அந்தக் கும்பல் திருடிச் சென்றுள்ளது என்று அந்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டு வந்த அயலவரான முதியவர் ஒருவர் தெரிவித்தார்.

19





அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கி

வங்கியென்றால் அது அனைவருக்கும் ஏற்ற வங்கியாக இருக்கவேண்டும். சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்பு, கிரடிட் காட், லீசிங், வீட்டுக் கடன், தனிப்பட்ட கடன், வேர்ச்சுவல் வொலட், வியாபார நிதிச் சேவைகள் உட்பட அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்கும் வங்கிதான் DFCC வங்கி.

DFCC வங்கி

# ஆடி மாத ராசி பலன்களில் எந்த ராசிக்கு நன்மை, தீமை




## மேடம்

எதிலும் முதலிடத்தைப் பிடிக்க விரும்புபவர்களே! முயற்சிகளிலிருந்து பின் வாங்காதவர்களே!
முற்போக்குச் சிந்தனையால் சுற்றியிருப்பவர்களை கவர்பவர்களே! சுக்கிரனும், புதனும் சாதகமான வீடுகளில் செல்வதால் சமயோஜித புத்தியாலும், சாதுர்யமான பேச்சாலும் சாதித்துக் காட்டுவீர்கள். தடைகளெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக விலகும்.
எதிர்பார்த்த தொகையும் கைக்கு வரும். தன்னிச்சையாகச் சில முக்கிய முடிவுகளும் எடுப்பீர்கள். பழைய பிரச்சினைகளைத் தீர்க்க வழி வகை பிறக்கும். மனைவி வழியில் உதவிகள் உண்டு. அக்கம்பக்கம் வீட்டாருடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் விலகும். புது வாகனம் வாங்குவீர்கள். வீடு கட்டுவதற்கு சி.எம்.டி.ஏ அப்ரூவல்லெல்லாம் கிடைக்கும். ஓகஸ்ட் 9ஆம் திகதி வரை ராசி நாதன் ராசிக்கு 4ஆம் வீட்டில் வலுவாக இருப்பதால் உடன் பிறந்தோர் உறுதுணையாக இருப்பார்கள்.
சகோதரியின் திருமணத்தை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். அயல் நாட்டு வாய்ப்புகள் தேடி வரும். அரைகுறையாக நின்று போன பல வேலைகளை இனி ஒவ்வொன்றாக முடிப்பீர்கள்.
உங்கள் பூர்வ புண்யாதிபதி சூரியன் பகை வீட்டில் நிற்பதால் பிள்ளைகளால் அலைச்சல், டென்ஷன் இருக்கும். கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். தந்தைவழி உறவினர்கள் வகையில் அலைச்சலும், மன உளைச்சலும் வந்துப் போகும்.
குருபகவானும் 8இல் நிற்பதால் வேலைச்சுமை அதிகரிக்கும். பயணங்களும் அடுத்தடுத்து இருக்கும். தவிர்க்கமுடியாத செலவுகளும் அதிகமாகும். அரசியல் வாதிகளே! கட்சி மேல்மட்டத்தை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**பெண்களே!** பெற்றோருடன் கலந்தாலோசித்து வருங்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.
மாணவர்கள் வகுப்பறையில் ஆசிரியர் பாராட்டும் படி நடந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிரடி இலாபம் உண்டு. பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். பங்குதாரர்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். உத்யோகத்தில் உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். சக ஊழியர்களின் நிறைக் குறைகளைச் சுட்டிக் காட்டுவீர்கள். மேலதிகாரி உங்களை நம்பி சில ரகசியப் பொறுப்புகளை ஒப்படைப்பார். 9ஆம் வீட்டில் கேதுவும், சனியும் அமர்ந்திருப்பதால் புதிய பொறுப்புகள் கிடைக்கும். என்றாலும் வேலைச் சுமை இருந்து கொண்டேயிருக்கும்.
கலைத்துறையினர்களே! அயல்நாட்டு தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து வாய்ப்புகள் வரும்.


## இடபம்



போராடும் குணம் உடையவர்களே! கலைக்கண்ணோட்டத்துடன் எல்லாவற்றையும் காண்பவர்களே! பிரிந்து கிடப்பவர்களை ஒன்று திரட்டும் சக்தி உடையவர்களே! உங்களின் ராசி நாதனான சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால் தடைகளையும் தாண்டி நீங்கள் முன்னேறுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் பழைய சிக்கல்களுக்கு தீர்வு காண்பீர்கள்.
புதுமுகங்கள் அறிமுகமாவார்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை கூடி வரும். வாகனப் பழுதை சரி செய்வீர்கள். உங்களுடைய தனபூர்வ புண்யாதிபதியான புதன் சாதகமாக இருப்பதால் பணவரவு உண்டு. கைமாற்றாக வாங்கியிருந்ததையும் தந்து முடிப்பீர்கள்.
பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். புத்துணர்ச்சி ததும்பும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த கடனை அடைப்பீர்கள்.
வீண் அலைச்சல், எதிர்ப்புகள் விலகும். தடைபட்ட பல வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.
குருபகவான் 7ஆம் வீட்டில் நிற்பதால் நீண்ட நாட்களாக தடைப்பட்டு வந்த திருமணம் கூடி வரும். திடீர் பணவரவு உண்டு.
கணவன் மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். சிலருக்கு குழந்தை பாக்யம் கிடைக்கும். சூரியன் 3இல் நிற்பதால் ஆதாயம் உண்டு. எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். என்றாலும் வாகனம் கொஞ்சம் பழுதாகும். அரசியல்வாதிகளே! பொதுக்கூட்டம், போராட்டங்களில் முன்னிலை வகிப்பீர்கள்.

**பெண்களே!**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத வேலைகள் முடியும். மாணவர்களே! கல்யாணம், திருவிழா என்று அலையாமல் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். கெட்ட நண்பர்களிடமிருந்து விடுபடுவீர்கள்.
அஷ்டமத்துச் சனி தொடர்வதால் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். அலுவலகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். சக ஊழியர்களுடன் விட்டுக் கொடுத்துப் போங்கள். மற்றவர்களின் குறைகளில் கவனம் செலுத்த வேண்டாம். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.
கலைத்துறையினர்களே! மூத்த கலைஞர்களின் வழிகாட்டல் மூலம் வெற்றியடைவீர்கள்.





# அதிகாலையில் காணும் கனவு குறித்து நீங்கள் அறியாத மர்மங்கள்..!

அதிகாலையில் கனவு கண்டால் பலிக்கும் என்கிறது சாஸ்திரம். நல்ல கனவாக இருந்தால் மகிழ்ச்சி, கெட்ட கனவாக இருந்தால் அதன் கடுமையினை குறைக்க பரிகாரம் செய்யலாம்.
கெட்டகனவு கண்டவர்கள் அதை பற்றி யாரிடமும் சொல்லகூடாது. அன்று பசுவுக்கு புல், பழம், கீரை கொடுக்க வேண்டும்.
அதன் முன் நின்று, தான் கண்ட கனசை மனதுக்குள் சொல்ல வேண்டும்.
உங்கள் கனவு நல்ல கனவா..? கெட்ட கனவா..? தெரிந்துகொள்ள…?
நாம் காணும் ஒவ்வொரு கனவுகளுக்கும், ஒவ்வொரு பலன்கள் உண்டு. அதிலும், நாம் கண்ட கனவுகளின் நேரத்தை பொருத்து அதன் பயன்கள் அமையுமாம்.

**நற்பலன் தரும் கனவுகள்:**

- விவசாயிகள் உழுவதைப்போல் கனவு கண்டால், சேமிப்பு பெருகும்.
- வானவில்லை கனவில் கண்டால் பணம், செல்வாக்கு அதிகரிக்கும். பதவி உயர்வு கிடைக்கும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட நட்சத்திரங்களை கனவில் கண்டால் பதவி உயர்வு நிச்சயம் உண்டு.
- ஆசிரியர் பாடம் நடத்துவதைப் போல் கனவு கண்டால் நாம் நினைத்தது எல்லாம் நிறைவேறும்.
- கனவில் நிலவை கண்டால் தம்பதிகளிடையே அன்பு பெருகும்.
- திருமணமாகாதோர் பாம்பு கடித்து ரத்தம் வருவது போல் கனவு கண்டால், சீக்கிரம் திருமணம் நிகழும். திருமணமானோருக்கு செல்வம் வந்து சேரும்.
- இறந்தவர்களின் சடலத்தைக் கனவில் கண்டால் சுபநிகழ்ச்சிகள் நடக்கும்.
- சிறு குழந்தைகளை கனவில் கண்டால் நோயிலிருந்து விடுதலை கிடைக்கும்.
- நண்பன் இறந்ததாக கனவு கண்டால் நண்பனின் ஆயுள் கூடும்.
- உயரத்தில் இருந்து விழுவது போல் கனவு கண்டால் பணம், பாராட்டு குவியும்.
- தெய்வங்களை கனவில் கண்டால் புதையல் கிடைக்கும்.
- திருமண கோலத்தை கனவில் கண்டால், சமூகத்தில் நன்மதிப்பு உயரும்.
- தற்கொலை செய்து கொள்வதை போல் கனவு கண்டால் நொருங்கி வந்த ஆபத்துகள் நீங்கி, நன்மை பிறக்கும்.
- ஆமை,மீன், தவளை போன்ற நீர்வாழ் உயிரினங்களை கனவில் கண்டால் கவலைகள் பறந்து போகும். மனதிலே நிம்மதி பிறக்கும்.
- கர்ப்பிணியை கனவில் கண்டால் பொருள் வந்து சேரும், நலம் அதிகரிக்கும்.
- இறந்தவருடன் பேசுவதைப் போன்று கனவு கண்டால் அதிகாரம் ,பதவி, லாபம் நிச்சயம் கூடி வரும்.
- மாமிசம் உண்பது போல் கனவு கண்டால் பெரிய அதிர்ஷ்டம் தேடி வரும்.
- மயில்,வானம் பாடியை கனவில் கண்டால் தம்பதிகளிடையே நெருக்கம் அதிகரிக்கும்.
- கழுதை,குதிரையை கனவில் கண்டால் வழக்குகள் சாதகமாக முடியும்.
- மலத்தை மிதிப்பதை போல் கனவில் கண்டால் சுபச்செலவுகள் ஏற்படும்.
- வாத்து,குயிலை கனவில் கண்டால் எம் முயற்சிகள் எளிதில் வெற்றி பெறும்.

# தனுசுக்கு ஜோடியாகும் மலையாள நடிகை




கார்த்திக் சுப்புராஜ் ரஜினியை வைத்து 'பேட்ட' படம் இயக்குவதற்கு முன்பே தனுசுடன் இணைந்து ஒரு படம் எடுப்பதாகப் பேச்சு நடத்தப்பட்டது. ரஜினி படத்துக்காக கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில், தனுஷ் நடிக்கும் படம் தள்ளிப் போனது. இப்போது அதற்கான பணிகள் தொடங்கி உள்ளன. வெளிநாடுகளை மையமாகக் கொண்டு தாதாக்கள் படமாக உருவாகும் இந்தப் படத்தில் தற்போது ஐஸ்வர்யா லட்சுமி இணைந்துள்ளார்.

மலையாளத்தில் இவர் கதாநாயகியாக வலம் வருகிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு ஓகஸ்ட் மாதம் லண்டனில் தொடங்க உள்ளது. 'பேட்ட' படத்துக்கு ஒளிப்பதிவு செய்த திருநாவுக்கரசு ஒளிப்பதிவாளராகப் பணியாற்ற உள்ளார்.

## இது புதுசு



கத்திகளை இலகுவாகக் கூர்மைப்படுத்தக் கூடிய கருவி அறிமுகமாகியுள்ளது. இவை 900 ரூபாவிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## விஞ்ஞான வளர்ச்சி



சமையலறையில் வேலை செய்துகொண்டிருந்த மனைவி, உதவிக்குக் கணவனை அழைத்தார்....

பலமுறை அழைத்தும் பதில் இல்லை. உள்ளே சென்று பார்த்தால்...,படுக்கையில் அலுவலகக் கோப்புகள், மடிக்கணினி இரண்டும் மடியில் கிடக்க அசந்து தூங்கிக்கொண்டிருந்தார்.

இடுப்பில் செருகியிருந்த தன் கைபேசியை எடுத்துப் பார்த்தவாறே கணவனின் அருகில் சென்றார்...
அடுத்த நொடி.
பெரும் சத்தம்.
அறை விழுந்த கன்னத்தைப் பிடித்தபடி திருதிருவென விழித்த கணவனிடம் தன் கைபேசியின் "Whatsapp"பக்கத்தை மனைவி காட்டினார்.
கணவன் பெயருக்குக் கீழே,
"last seen 1 minute ago" என்றிருந்தது.

இதுதான் குவாட்டர் பைனல்...



பணிந்து செல்வதால் கோழை என்று எண்ணி விடாதே...



என் பலத்தை காண்பிக்க நீ தகுதியானவன் இல்லை என்று அர்த்தம்..!

பாத்துவாடா மகனே, சாக்கடைய எவனோ திறந்து வச்சிருக்கான்...



## சிந்தனைத் துளிகள்



புத்தகங்கள் இல்லாத வீடு உயிரில்லாத உடலைப் போன்றது.
பென்னெட்.

உதவியின் மதிப்பு உதவுகின்றவனின் மதிப்பு அளவேயாகும்.
டென்னிசன்.

சில சமயங்களில் இழப்பதுதான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
ஹெர்பர்ட்.

விரைவில் புகழ் பெற்றவன் பெயரைக் காப்பாற்றிக் கொள்வது பெரிய பாரம்தான்.
வால்டேர்.

அமைதி நிறைந்த அடிமைத்தனத்தை விட ஆபத்துடன் கூடிய சுதந்திரமே மேலானது.
ரூசோ.

ஆசைகளைத் திருப்தி செய்வதில் அல்ல, மட்டுப்படுத்துவதில்தான் அமைதி உள்ளது.
ஹீபர்.

சரியானது எது என்று உணர்ந்த பின்பும் அதைச் செய்யாமல் இருப்பதுதான் கோழைத்தனம்.
கன்பூசியஸ்.

சுறுசுறுப்புக்கு எல்லா வேலைகளும் எளிது. சோம்பலுக்கு எல்லாமே கடினம்.
ஆரோன்பர்.

எங்கெல்லாம் கட்டுப்பாடு அதிகமாகிறதோ, அங்கெல்லாம் கள்ளத்தனம் தானாகவே குடியேறி விடும்.
பிராங்க்ளின்.

## எமது பாதை, எமது பயணம்



அச்சம் இருக்குமிடத்தில்
முன்னேற்றப் பாதை தடைபடும்!
விடாமுயற்சி இருக்குமிடத்தில்
தோல்விகள் பறந்தோடும்!
நம்பிக்கை இருக்குமிடத்தில்
புதிய சிந்தனைகள் பல தோன்றும்!
வியர்வைத்துளிகள் சிந்துமிடத்தில்
வாழ்வு இனிதாக அமையும்!
முயற்சியை வில்லாக ஏந்தி
தன்னம்பிக்கையை அம்பாகத் தொடுத்து
தடைகளை விரட்டிப் பயணம் செய்தால்
வெற்றிப்பாதை கண்முன் தெரியும்

## பெயர் மாற்றம்

குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழையில் வசிக்கும் **வயிரவன் இரத்தினதுரை** ஆகிய எனது பெயரை இன்றிலிருந்து **வயிரவன் இராசன்** எனப் பெயர்மாற்றம் செய்யப்படுகின்றது என்பதை தெரியப்படுத்துகின்றேன்.

**வயிரவன் இராசன்**

## S.K. Broking Ds/ NAL/ 1442


**வீடு,காணி விற்பனைக்கு உண்டு**

**K.K.S** வீதி மருதனார்மடம் சந்திக்கும் சமுத்திர திருமண மண்டபத்திற்கும் இடையில் 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. மற்றும் கோப்பாய் இராச வீதியில் 8 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பு **ஆறு லட்சம் மட்டும்.(600,000)**

தொடர்பு
**077 461 3884, 077 193 3490**

## எங்கள் குடும்பத் தந்தையின் 10 ஆம் ஆண்டு நினைவுத் திருவஞ்சலி

அமரர்
**சின்னப்பு நாகமணி**



பிறப்பு
10.05.1927

இறப்பு
16.07.2009

திதி:- நவமி

ஆண்டுகள் பத்தானதோ?
பரிதவிக்கின்றோம் ஐயா!
நீங்கள் விழிகள் மூடிய நாளிலிருந்து
எங்கள் விழிகள் கண்ணீர் சிந்துகின்றன
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்

எம் அருகில் இருப்பதையே உணர்கின்றோம்
உங்கள் புன்னகை, பாசம், அக்கறை
என்றும் எம்மை வழி நடத்தும்
எங்கள் நெஞ்சத்தில் என்றும் தெய்வமாய்
குடியிருப்பீர்கள்

"தந்தை காலடி எமது கோயில்"

நவாலி தெற்கு,
கலையரசு வீதி, மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.09.1939 | 25.07.2019 |

## செல்வி இராஜகுலதேவி அபிமன்னசிங்கம்

உடுவில் சித்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் உடுவில் வேதாரணியர் வளவினை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் ஆங்கில மொழி ஆசிரியை செல்வி இராஜகுலதேவி அபிமன்னசிங்கம் நேற்று (25 ஜூலை 2019) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ICU வில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான உடுவில் சித்தாவத்தையைச் சேர்ந்த முன்னாள் பொலிஸ் விதானையும், விதானையுமான வெற்றிவேலு அபிமன்னசிங்கத்தினதும் உடுவில் வேதாரணியர் வளவினைச் சேர்ந்த கந்தையா குலமணியினதும் மூத்த மகளும் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் மாணிக்கசோதியினதும் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கத்தினதும், பொறியியலாளர் சித்தாவத்தை உதய குமாரினதும் மூத்த சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை (26 ஜூலை 2019) அன்று காலை 11 மணிக்கு அன்னாரின் வீட்டிலிருந்து (செல்வி சாந்தா அபிமன்னசிங்கத்தின் வீடு, உடுவில் வலி தெற்கு பிரதேச செயலகத்திற்கு அருகில்) பூவோடை மயானத்திற்கு (இணுவில் இரயில் நிலையத்திற்கு அருகில்) எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

**தகவல்:**
**செல்வி சாந்தா அபிமன்னசிங்கம்**
**(ஜனாதிபதி சட்டத்தரணி)**
**உடுவில்**

## மரண அறிவித்தல்

## நாகலிங்கம் கணேசப்பெருமாள்



காரைநகர் களபூமி, திக்கரையைப் பிறப்பிடமாகவும், பொன்னாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கணேசப்பெருமாள் 24.07.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், இராமலிங்கம் - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், வாலாம்பிகையின் அன்புக் கணவரும், மயில்வாகனம் (பிரான்ஸ் - காரை அபிவிருத்திச்சபை முன்னாள் தலைவர்), ரஞ்சனாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நீலாம்பிகை (பிரான்ஸ்), இராசலிங்கம் (காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் (காரைநகர்), செல்லத்துரை (ஜேர்மனி) மற்றும் பரமேஸ்வரி (காரைநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வானை (காரைநகர்), செல்வநாயகி (ஜேர்மனி), காலஞ்சென்ற சபாரத்தினம் (காரைநகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பகீரதன், பகீப்பிரியா, டிலக்சன் (பாபு), ஆதிகேஷன், சிறிராம், அபிராமி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் காரைநகர் களபூமி தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன்னாவளை, களபூமி,**
**காரைநகர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0212251861, மயில்வாகனம் (பிரான்ஸ்) - 0033612922685,**
**பகீரதன் (இலங்கை) - 0094779662417,**
**பாபு (இலங்கை) - 0717749826**



| வைத்துள் | தெய்வத்துள் |
|---|---|
| 18.01.1935 | 23.07.2019 |

## சதாசிவம் பொன்னம்பலம்

(Siva's Cafe; - யாழ். ஆஸ்பத்திரி வீதி, லிங்கம் ஸ்ரோர், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம் - முன்னாள் உரிமையாளர்)

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தில் வசித்தவரும் பிரம்ரன், கனடாவை வதிவிடமாகக் கொண்டவருமான சதாசிவம் பொன்னம்பலம் 23.07.2019 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - காமாட்சி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற புங்குடுதீவைச் சேர்ந்த கனகாம்பிகை சதாசிவம் அவர்களின் அன்புத் துணைவரும், மனோகரி, காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, சிவரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அருணன் (Mr. Digital Photo Lab), நித்தியலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, செல்லத்துரை மற்றும் ஞானாம்பாள் (இலங்கை), ராசம்மா (இலங்கை), கனகம்மா (இலங்கை), பரமலிங்கம் (டுபாய்), பாலசிங்கம் (இலங்கை, முன்னாள் கிழக்கு மாகாண பிரதம செயலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், முத்துலட்சுமி (கனடா), காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, மதியாபரணம், தேவராசா மற்றும் அருமைநாயகம் (இலங்கை), சிவசக்தி (டுபாய்), அன்னலட்சுமி (இலங்கை), பத்மநாதன் (இலங்கை), பத்மநிதி (கனடா), சபாநாதன் (UK), சிறிநாதன் (சுவிஸ்), தயாநிதி (டென்மார்க்), ராசநாதன் (கனடா), சிவாநிதி (கனடா), செல்வநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அர்ச்சனா - உதயபாலன், கீர்த்தனா மற்றும் ரிஷிபனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27.07.2019 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 9 மணிவரையும் 737, Dundas St.East, Mississaugatpy அமைந்துள்ள St . John's Dixie Chapel & Cemetery இல் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்பு அதே இடத்தில் 28.07.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 10.30 மணிவரை ஈமக்கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளிற்கு:** மனோகரி - 905 654 0066
அருணன் - 416 543 5149
செல்வன் - 647 206 9374

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



# மூன்று வழி !

முன்னொரு காலத்தில் குடகு மலையை வீரநிலவன் என்ற அரசன் ஆண்டு வந்தான. ஒருமுறை அவன் வேட்டையாடக் காட்டுக்குத் தனியே சென்றான். நிறைய விலங்குகளை வேட்டையாடினான். களைப்பு அடைந்த அவனுக்குத் தாகம் எடுத்தது.

எங்கே தண்ணீர் கிடைக்கும் என்று நாலா பக்கமும் பார்த்தான். தொலைவில் இருந்த குடிசை ஒன்று கண்ணில் பட்டது. அங்கே சென்றான் அவன். அந்தக் குடிசைக்கு வெளியே வேடுவப் பெண் ஒருத்தி அமர்ந்து இருந்தாள். சிறுவர்களாக இருந்த தன் மகன்களுக்கு அவள் உணவு ஊட்டிக் கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்து அவன்,"அம்மா! தாகமாக உள்ளது. தண்ணீர் தாருங்கள்!" என்று கேட்டான். வந்தவர் அரசர் என்பதை அறிந்து கொண்டாள் அவள். தண்ணீர் கொண்டு வருவதற்காகக் குடிசைக்குள் சென்றாள். அந்தச் சிறுவர்களைப் பார்த்தான் அவன். நல்ல உடல் நலத்துடன் கொழு கொழுவென்று இருந்தனர். என்ன சாப்பிடுகின்றனர் என்று கவனித்தான். குரக்கன் கூழ் என்பது தெரிந்தது. "இந்தச் சிறுவர்கள் கூழை உண்டு இவ்வளவு வலிமையுடன் விளங்குகிறார்களே. எம் மகனும் இவர்களைப் போன்ற சிறுவன்தான். வேளை தவறாமல் சத்துள்ள உணவைச் சாப்பிடுகிறான். அவனைக் கவனித்துக் கொள்ள அரண்மனை மருத்துவர்கள் உள்ளனர். இருந்தும் அவன் நோஞ்சானாக உள்ளான். ஏதேனும் நோயினால் அடிக்கடி துன்பப்படுகிறான். இவர்கள் நல்ல உடல்நலத்துடன் விளங்க என்ன காரணமாக இருக்கும்," என்று சிந்தித்தான் அரசன். அப்போது அவள் தண்ணீர்ப் பாத்திரத்துடன் வெளியே வந்தாள். "அரசே! தண்ணீர் குடியுங்கள்," என்று பாத்திரத்தை நீட்டினாள். அவனும் தண்ணீர் குடித்தான்.

தனது சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள நினைத்த அவன், "அம்மா! உமது மகன்கள் கூழைக் குடித்தே நல்ல உடல்நலத்துடன் காட்சி தருகின்றனர். இளவரசனுக்கும் இவர்கள் வயதுதான். ஆனால், அவன் இவர்களைப் போல உடல் நலத்துடன் விளங்கவில்லை. அடிக்கடி ஏதேனும் நோயால் துன்பப்படுகிறான். உடல் நலத்துடன் இவர்கள் விளங்க என்ன காரணம்?" என்று கேட்டான். "அரசே! என் மகன்கள் உடல் நலத்தோடு விளக்க மூன்று வழிமுறைகளைப் பின்பற்றுகிறேன். முதலாவது அவர்கள் பசி எடுத்த பின்னரே உண்ண வேண்டும். இரண்டாவது உணவு நேரம் தவிர மற்ற நேரங்களில் எதையும் சாப்பிடக் கூடாது. மூன்றாவது தேவையான அளவே உண்ண வேண்டும். அதிகமாக உண்ணக் கூடாது. இந்த மூன்று வழிமுறைகளையும் யார் பின்பற்றி னால் நல்ல உடல்நலத்துடன் விளங்குவர்!" என்றாள் அவள்.

அவளுக்கு நன்றி சொல்லிவிட்டு அரண்மனை திரும்பினான் அரசன். முரசு அடிப்பவனை அழைத்தான். வேடுவப் பெண் சொன்ன மூன்று வழிமுறைகளையும் அவனிடம் சொன்னான்.

"நம் நாட்டு மக்கள் உண்ணும் போது இவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். இதை நாடெங்கும் தெரிவி!" என்றான். முரசு அடிப்பவனும் இந்தச் செய்தியை நாடெங்கும் தெரிவித்தான். அந்நாட்டு மக்கள் அந்த மூன்று வழிமுறைகளையும் பின்பற்றினர். அவர்கள் எல்லாரும் நல்ல உடல்நலத்தோடு வாழ்ந்தனர். இளவரசனும் உடல் நலம் தேறினான்.

## கண்ணீர் அஞ்சலி

மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினரும் வெள்ளிவிழா நாயகனும் சேமிப்பாளருமான

**க.க. யோகநாதன்**

**(உரிமையளர், சரவணபவன் ஆபரண மாளிகை -சாவகச்சேரி)**

அவர்கள் 24.07.2019 அன்று காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## கண்ணீர் அஞ்சலி


கடந்த 24.07.2019 புதன்கிழமை இறைபதமடைந்த **வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் அப்புக்குட்டி கிருபாகரன்** அவர்களின் அன்புத் தாயார்

**நாகம்மா அப்புக்குட்டி**

அவர்களின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 06.10.1972 — இறப்பு 25.07.2019

### சண்முகராசா செந்தில்குமார் (ரவி)

வவுனியாவை பிறப்பிடமாகவும் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா செந்தில்குமார் (ரவி) 25.07.2019 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் பராசக்தி தம்பதிகளின் பாசமிகு மகனும் பிறேமவதனி (வதனி) அவர்களின் அன்பு கண்வரும் அனோஜன், ஜோதிகா ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### நல்லதம்பி வசந்தநாயகம்

மண்டைதீவை பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி வசந்தநாயகம் நேற்று (25.07.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், சுகந்தினியின் அன்புக் கணவரும், திலீபன் (கனடா), டுசாந்தன், விதுலன், துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேகலாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

**T.P: 0777 146818**

## மரண அறிவித்தல்கள்

### கோணன் துரைராசா (வவி)



தோற்றம் 20.07.1951 — மறைவு 23.07.2019

2 ஆம் குறுக்கு வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கலைவாணி வீதி, சித்தன்கேணியை நீண்டகால வசிப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, வடலியடைப்பில் தற்போது வாழ்ந்துவந்தவருமான கோணன் துரைராசா 23.07.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோணன் - முத்தம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற பூதன் கமலாதேவி மற்றும் இராசேந்திரம் கனகம்மா, கோணன் செல்லத்துரை (ஆனந்தம் - கனடா), கோணன் குணரத்தினம் (வேவி), தேவராசா சறோயினிதேவி, ஸ்ரீதாஸ் வசந்தாதேவி, உதயகுமார் மஞ்சுளாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், துஸ்யந்தன் (சுவிஸ்), துசாந்தி, சுயந்தி (நிசு - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லதா (சுவிஸ்), ஜெகானந்தன் (ஜெகன் - சைக்கிள் கடை உரிமையாளர்), சாந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், கியூரி, கஜந்த், மிசா, இனியவர்சி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி வீதி,**
**வடலியடைப்பு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 440 9601, +41 76 4132 006, 077 726 3304**



பிறப்பு 08.05.1950 — இறப்பு 24.07.2019

### திருமதி இந்திராணி ஐயாத்துரை

யாழ். கரவெட்டி, கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி ஐயாத்துரை 24.07.2019 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - பசுபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், பிரதீபன் (லண்டன்), ஜெயதீபன் (லண்டன்), ஜெயபிரபா (லண்டன்), குலதீபன் ஆகியோரின் தாயும், தவசோபனா (லண்டன்), நிஷாந்தினி (லண்டன்), சிறீகாந்தன் (லண்டன்), காலஞ்சென்ற பிருந்தா (தாதிய உத்தியோகத்தர் .பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், திவிக்கா, றெஸ்னா, றெஜிக்கா, தனுஜன், ஆருஜன், தசானா, சுஜீவன் (லண்டன்), குயின்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2019) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரணவாய் தெற்கு பூவரசந்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"ஜெயபவனம்"**
**கரணவாய் தெற்கு, கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 722 9208**

(c23037) (13.17)

## TRADE FINANCE & INVESTMENTS PLC

(Licensed by the Monetary Board Of the Central Bank of Sri Lanka Under the Finance Business Act No 42 of 2011)

No.459, Union Place, Colombo 02. ☎ +94 -(0)112 688 421 / +94 -(0)112 688 422 / +94 -(0)112 698 818

+94 -(0)112 699 226 info@tfil.lk www.tfil.lk

**பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு**
**கிளிநொச்சிக் கிளையில்**

| Model | Reg Number | Condition |
|---|---|---|
| RAY | NPBGT-6548 | Running |
| PUL | NP BGC-1495 | Running |
| CDL | NP BFE-1872 | Running |
| LET | NPBGG-4044 | Running |
| PUL | NPBHF-1012 | Running |
| APA | NP BGI 8553 | Running |
| LET | NPBGK-1305 | Running |
| PLE | NP BEI- 1013 | Running |
| STR | NP BGF-1488 | Running |
| GIX | NPBGP-6558 | Running |
| APA | NPBGV-9928 | Running |
| CDL | NP BDK-5963 | Running |
| RAY | NPBHJ-4062 | Running |
| GLAMOUR | NP BFU- 9057 | Running |
| ACI | NP BFS-0449 | Running |
| DRM | NP BGC-1939 | Running |
| FAZER | NPBGN-7148 | Running |
| APA | NP BFV-1656 | Running |
| RAY | NPBGZ-2302 | Running |
| ACA | NP BFM-8200 | Running |
| FZS | NP BEV- 1353 | Running |
| AUTO | NPYF 3677 | Running |
| PLN | NPBGZ-9665 | Running |
| AUTO | NP YI-8097 | Running |
| CDL | NPBGZ-7778 | Running |
| GIX | NPBGL-9895 | Running |
| FZS | NP BFY-6798 | Running |
| CDL | NPBHH-6553 | Running |
| DIO 3 | NP BEY-8716 | Running |

வேலை நாட்களில் கிளிநொச்சி கிளையில் பார்வையிடலாம்
08.30 am - 5.30pm பணம் செலுத்தியவுடன் அனைத்து
ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
நிபந்தனைக்கு உட்பட்டது.
மேலதிக விபரங்களுக்கு - 077 212 5848, 077 166 1648, 021 228 0110



**வேலையாள் தேவை**

வீட்டு வேலை செய்வதற்கு ஆள் தேவை. (பெண்கள் மட்டும்) (AKN759) (11.17)

077 639 0032, 076 430 9652





## சில நாடுகளின் தனிச்சிறப்புகள்

1. உலகில் மிக பழமையான நாடாளுமன்ற உள்ள நாடு - ஐஸ்லாந்து.
2. ஆட்சி மாற்றம் இல்லாத நாடு - மெக்சிக்கோ.
3. கண்ணாடித் தொழிலுக்குப் பெயர் பெற்ற நாடு - பெல்ஜியம்.
4. பத்திரிகை வெளிவராத நாடு - திபெத்.
5. உலகிலேயே அரச தலைவர் ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு - சுவிட்சர்லாந்து
6. கடல் மட்டத்துக்கு கீழே உள்ள நாடு - டென்மார்க்.
7. உலகிலேயே வெப்பமான இடம் அசீசீயா இருக்கும் நாடு - லிபியா.
8. உலகிலேயே குளிர்ந்த இடமான சைபீரியா இருக்கும் நாடு - ரஷ்யா.
9. திரை அரங்குகளே இல்லாத நாடு - பூட்டான்.
10. ஒரு நாட்டின் பரப்பளவுக்குள் அமைந்து இருக்கும் இன்னுமொரு நாடு - லெசதோ (ஆபிரிக்கா).
11. உலக மக்கள் அமைதியாக வாழ்வதற்கு உகந்த நாடு - நோர்வே.
12. உலகில் தட்டையான, சமதளமான நாடு - மாலைதீவு.
13. ஆண்டுதோறும் பூமியில் புதைந்து வரும் நாடு - நெதர்லாந்து.
14. கண்டமாக இருக்கும் ஒரே நாடு - ஆஸ்திரேலியா.
15. மைனா பறவையின் தாய்நாடு - இந்தியா.


# மணிவிழா வாழ்த்து




ஸ்கந்தப் பெருமானின் திருப்பாதம்
வலம்வந்து நிதம் பார்போற்றும்
பரமேஸ்வரன் துணைவியாய் நிலைத்தவரே!
வான்புகழ் பெற்று என்றும் வானதியாய்
ஓடிவந்து ஸ்கந்தாவின் நூலகத்தை
வளங்கொழிக்க வைத்தவரே!

நூற்றாண்டு கடந்த பாடசாலையின்
நூலகத்தை மூன்று தசாப்தங்கள்
முடியாட்சி புரிந்தவரே! நின்வதனம்
காணாத நூல்கள் தாம் இங்குண்டோ?

தனக்குவமையில்லாத் தயாளகுணப்
பேரணங்கே!
நின் உயர்ந்த சேவைக்காய் என்றுமே
ஸ்கந்தாவின் வரலாற்றுப் பக்கத்தில்
உமக்கென ஓர் இடமுண்டு என்பதால்
எல்லோர் மனதிலும் நிறைந்துள்ளீர்
நின் சேவை தனக்காய் பரமனருள்
பெற்றுயர்ந்த பரமேஸ்வரனோடு
வற்றாத வானதியாய் வாழ்வில் என்றும்
ஸ்கந்தன் அருள்பெற்று நிறைவுடன் வாழ்க..

## திருமதி வானதி பரமேஸ்வரன்


எமது கல்லூரியில் சேவைக்காலம்:-
1988.02.01 - 1993.12.30
2003.01.01 - இன்றுவரை

எமது கல்லூரியில் நூலகப் பொறுப்பாளராக சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி. வா.பரமேஸ்வரன் அவர்களை வாழ்த்துவதில் கல்லூரிச் சமூகம் பெருமையடைகிறது.

**வாழ்த்துவோர்:-**
**கல்விசார், கல்விசாரா**
**நலன்புரிக்கழகம்.**

**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**கந்தரோடை, சுன்னாகம்.**

## வழி காட்டுவோம்



# விளையாட்டுக்கள்




விளையாட்டுக்கள் வெற்றி, தோல்விகளை நிச்சயிப்பதற்காக நடத்தப்படுவதில்லை. ஆனால் வெற்றி தோல்விகளுக்கும் மேலான தான மனிதப் பண்புகளை வளர்க்கும் சிறந்த அனுபவங்களை அவை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கமும் அவற்றிடையே உண்டு.

உற்சாகமாக விளையாட்டில் பங்கு கொள்ளுதல் என்பது ஓர் உயரிய செயற்பாடாகும். அதன்போது ஏனைய விளையாட்டு வீரர்களை மதித்தல், வீரர்களின் செயற்பாடுகளுக்கு விளையாட்டு நிபந்தனைகளை மீறி இடையூறு செய்யாதிருத்தல், நடுவர்களின் தீர்ப்புகளை நியாயபூர்வமாக ஏற்றுக்கொள்தல் என்பனவும் அவற்றுள் சிலவாகும்.

வீரர்கள் ஒவ்வொருவரும் ஒருவரோடு ஒருவர் புரிந்துணர்வோடு விளையாட்டில் ஈடுபடுதல், எதிரணி வீரர்களுக்கு மதிப்பளித்தல் ஆகிய நற்பண்புகள் வீரர்களிடத்தில் பெருகுதல் அவசியமாகும். நாம் வெற்றிகளைப் பெற்று எதிரணியினரைத் தாழ்த்தவோ தோல்விகளைக் கண்டு உளம் சோர்ந்துவிடுதலோ எமது விளையாட்டுப் பண்புகளுக்கு ஏற்றதல்ல.

எனவே நற்பண்புகளை வளர்க்கத் தூண்டும் விளையாட்டுக்களின் வெற்றி, தோல்விகள் யாவும் எம்மை நல்வழிப்படுத்தி ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுக்களில் பங்குகொள்வோம். விளையாட்டின் பெருமைகளை உலகத்துக்கு உணர்த்துவோம்.




# கழுதைப்புலி

கழுதைப்புலி மிகவும் திறமைசாலி. இவற்றின் மோப்ப சக்தியும், சப்தமும் சிறப்புத் தன்மை கொண்டது. இவைகளின் வாய்ப்பகுதி, எலும்புகளை நொறுக்குமளவு பலம் வாய்ந்தது. கழுத்துப் பகுதியும் வலிமையானது. இவற்றின் வாலின் அசைவைக் கொண்டே இவை எந்த மனநிலையில் உள்ளது என்று புரிந்து கொள்ளலாம். வால் நிமிர்ந்து, சிலிர்த்து காணப்பட்டால், எதற்கும் தயாராக இருப்பதாய் அர்த்தம்.

பின்னங்கால்களுக்கிடையே வாலை இருக்கி வைத்து ஓடினால் பயத்தில் இருக்கிறது என்று அர்த்தம். இரவு நேரத்தில் வேட்டையை ஆரம்பிக்கும். வரிகுதிரையைதான் பெருமளவு வேட்டையாடும். வரிகுதிரை கூட்டத்தைத் தாக்க முற்படும் போது, எந்த வரிகுதிரை பலவீனமானது என்பதை தீர்மானித்த பின்புதான் வேட்டையாடும். மூன்று, நான்கு கழுதைப்புலிகள் சேர்ந்துதான் வேட்டையாடும்.

ஒரு கழுதைப்புலி, வரிக்குதிரையின் காலை கடிக்கும், இன்னொன்று அதன் மென்னியை கவ்வும். இப்படி ஒவ்வொரு உறுப்பாக தாக்கிய பின், அந்த வரிகுதிரை துடித்துப்போய் கீழே விழும். அதைக் கண்டு கழுதைப்புலிகள் ஆட்டம் ஆடி, கூச்சலிட்டு இரையை உண்ணும்.

## யானைகளை அவற்றின் நிழலுருவங்களுடன் இணையுங்கள்





## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
### திருநெல்வேலி, யாழ்ப்பாணம்



*Top up Degree*
*- Fast Track Degree Programme*
*2019/2020 (One·Year)*

- BA in English
- B.sc in Psychology
- B.sc in Nursing
- B.sc in Engineering
- BA in Tamil
- BA in Education
- BA in Fine Arts
- B.sc in Computer Science
- BBA in Management

**தகைமைகள்**

01. க.பொ.த (சா/த), (உ/த) தகைமைகள்
02. NVQ, HND அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

குறிப்பு :
❯Diploma in Research Methodology, Diploma in SPSS, e-views விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

❯அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினை பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்

ஆரம்பம் : 03.08.2019

UGC Approved

- ★ G.C.E(O/L) ➡ Foundation Diploma ➡ Degree
- ★ Classes ones a week- 3 Hours
- ★ Smart Class room/online Education
- ★ Every Each Year Convocation

Register
SMS your Name + Address & Course name to 077 602 1794 to get more details/Discount

தொடர்புகட்கு -
முகாமைத்துவ நிர்வாக சபை
தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
021 450 8489, 077 602 1794
*Email - degreeinfo08@ gmail.com*



# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## சந்திரகுமார் பிரேமறதி

மலர்வு
31.03.1975

உதிர்வு
08.11.2012



திதி:– 26.07.2019

எம் குடும்ப பாச விளக்காய் ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை நாம் எண்ணாத நாளில்லையம்மா!

என்றும் நினைவில் – குடும்பத்தினர்.

சுதுமலை தெற்கு,
அண்ணாமலை வீதி,
மானிப்பாய்.

சந்திரகுமார் - கணவர்
டக்ஸன் - மகன், கஜீபன் - மகன்,
அபிராம் - மகன்



## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னையா சின்னப்பிள்ளை



தோற்றம் 23.06.1932 மறைவு 25.07.2019

சுழிபுரம் மேற்கு ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்டகாலஞ்சென்றமாரிமுத்து பொன்னையாவின் மனைவி சின்னப்பிள்ளை நேற்று (25.07.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார்துரைசிங்கம் (இளைப்பாறிய மின்சாரசபை ஊழியர், வட்டுக்கோட்டை), தங்கச்சியம்மா, இராமலிங்கம் (விரிவுரையாளர், சினேக் கம்பஸ், மருதனார்மடம்), கனகலிங்கம், காலஞ்சென்ற தர்மலிங்கம், கற்பகம், நல்லம்மா, குமாரலிங்கம், தேவிகா, பரமலிங்கம், றோகினி ஆகியோரின் தாயாரும் ஈஸ்வரி, அப்புத்துரை, குகவேணி (வைத்தியர், காரைநகர் வைத்தியசாலை), நகுலாம்பிகை (ஆசிரியை), விஜயராணி, சிவலிங்கம், சிவஞானம், செல்வநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சுகந்தினி, நடேசரத்தினம் ஆகியோரின் மாமியும் தங்கம், நடேசு, காலஞ்சென்ற ஆறுமுகம் சரவணைமுத்து இலட்சுமி ஆகியோரின் சகோதரியும் இராகவன், கிருசா,கலைச்செல்வி (ஆசிரியர்), சிறிதரன் (கோட்டக்கல்வி அலுவலகம் சங்கானை), சிவகுமார், அஞ்சுகன் (மொஸ்கோ அணு ஆராய்ச்சி பல்கலைக்கழகம்) , கஜேந்தினி (ஆசிரியர்), கணராஜ், காத்ஜாஜினி, கஜானி, லவன், சோபிதன், பிரியதர்சினி, சங்கீதா, பவித்திரா,ஜயத்திரா, முறளிதரன்,துளசினி (விவசாயத்திணைக்களம், வவுனியா), ஞானகரன் (ஆசிரியர்), அமலதரன், சிந்துஜா, சுகன்ஜா, ஐஸ்வர்யா, அக்ஷரன், சங்கவி, யாகவி ஆகியோரின் பேர்த்தியும் ஆதவன், நிலவன், சுதர்மன், கீர்த்தனா, கணாதீபன், அபிநயா, சிவனவஸ்ணன், அக்ஷயன், சனாதனி, நிலானி, பிரகஸ்தனா, மகிபன், அபிஷாமினி, பிரகாசியா, ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2019) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகபுளியந்துறைஇந்துமயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 134 2687 தகவல்: குடும்பத்தினர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## குப்பைத் தொட்டியாக மாறுமா இலங்கை?

பிரிட்டனில் இருந்து மீள் சுழற்சிக்கு எனக்கூறி எடுத்துவரப்பட்ட 100 கொள்கலன்களில் மனிதக்கழிவுகள் இருக்கலாம் என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளதை அடுத்து அது தொடர்பான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. கொழும்பு மற்றும் இங்கிலாந்து அரசுகள் அது தொடர்பான விசாரணைகளைத் தொடக்கியுள்ளன என்று வரும் செய்திகளின் பின்னணியில் மூன்றாம் உலக வளர்ந்துவரும் நாடுகள் வளர்ந்த நாடுகளின் கழிவுத் தொட்டிகளாக மாற்றப்படுகின்றனவா என்கிற அச்சத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு நாடுகள் பலவற்றில் இருந்தும் வளர்ந்து வரும் நாடுகளுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களில் புதிய வரவாக இந்த மீள்சுழற்சிக்குரிய பொருள்கள் இருக்கின்றன. அங்கே ஒருதடவை பயன்படுத்திவிட்டுத் தூக்கி வீசப்படும் பொருள்கள் மீள்சுழற்சிக்காக என்கிற பெயரில் வளர்ந்து வரும் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

சுற்றுச்சூழல் விடயத்தில் அதிக அக்கறை செலுத்திவரும் மேற்கு நாடுக்ள் தமது நாடுகளில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களுக்குக் கடும் கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படக்கூடிய பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்குகளின் பயன்பாட்டையே அவை ஊக்குவிக்கின்றன. இதனால் அங்குள்ள பெரு வணிக நிறுவனங்கள் தாம் பயன்படுத்தும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் மீள்சுழற்சிக்குரி யவை என்று மக்களுக்கு வெளிப்படுத்தித் தம்மை சுற்றுச்சூழலில் அக்கறையுள்ளவர்களாகக் காட்டி மக்களிடம் தமது வியா பாரத்தைப் பெருக்கிக் கொள்கின்றன.

இந்த நிறுவனங்கள் செய்யும் பரப்புரையை நம்பி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கொண்ட மக்களும்கூட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை அல்லது அவற்றில் அடைக்கப்பட்ட பொருள்களைத் தாராளமாக வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், மீள்சுழற்சிக்குரியவை என்று மேற்கு நாடுகளில் பரப்புரைக்கப்படும் பல பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்குகள் அந்தந்த நாடுகளில் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படாமல் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு மீள்சுழற்சி என்கிற பெயரில் அனுப்பப்படுகின்றன.

சட்டம் ஒழுங்கு மற்றும் நிர்வாகத்தில் பல்வேறு குறைபாடுகளையும் கொண்ட ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் வந்து குவியும் இந்தப் பொருள்கள் உண்மையிலேயே மீள்சுழற்சிக்கு உட்டுத்தப்படுகின்றனவா என்கிற கேள்விக்குப் பதில் இல்லை என்பதுதான். மீள்சுழற்சிக்கு என்று இந்தப் பொருள்களை இறக்குமதி செய்யும் பல நிறுவனங்கள் அவற்றை மீள்சுழற்சி செய்யாமல் வெறும் குப்பைகளாகவே ஆங்காங்கே குவித்து வைத்திருக்கின்றன என்பது பல ஆய்வுகளில் வெளிப்பட்டிருக்கின்றது.


மீள்சுழற்சிக்குரிய மெத்தைகள் என்கிற பெயரில் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட கொள்கலன்களில் மனிதக் கழிவுகளும் சேர்த்தே எடுத்துவரப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகம், வளர்ந்து வரும் நாடுகளை வளர்ந்த நாடுகளின் வணிகப் பெருநிறுவனங்கள் குப்பைத்தொட்டிகளாக மாற்றிவருகின்றன என்கிற குற்றச்சாட்டை வலுப்படுத்துவதற்கான உறுதியான ஆதாரங்களில் ஒன்று.

இதுபோன்றே பிரிட்டனில் இருந்து தருவிக்கப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பைகள் மலேசியாவில் குப்பை மேடுகளாகக் குவிக்கப்பட்டு மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படாமல் சுற்றுச்சூழலுக்கு அச்சுறுதலாகப் போடப்பட்டிருந்தமை குறித்த ஆவணப்படம் ஒன்று அண்மையில் வெளியாகி இருந்தது.

இவ்வாறு மேற்கு நாடுகளின் குப்பைத்தொட்டிகளாக வளர்ந்துவரும் நாடுகள் மாற்றப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இலங்கை அத்தகைய குப்பைத் தொட்டியாக மாற்றமடைவது தடுக்கப்பட வேண்டும் மீள்சுழற்சிக்குரிய பொருள்களை அந்தந்த நாடுகளே மீள்சுழற்சி செய்யவேண்டும். தமது நாடுகளில் மீள்சுழற்சி செய்ய முடியாத பொருள்களை மீள்சுழற்சி என்கிற பெயரில் வளர்ந்து வரும் நாடுகளில் குப்பைகளாகக் கொட்டுவதை மேற்கு நாடுகளும் நிறுத்தவேண்டும். தத்தமது நாடுகளில் சேரும் குப்பைகளை, குறிப்பாக உக்காத குப்பைகளை முகாமை செய்வதற்கே திணறிவரும் இலங்கை போன்ற வளர்ந்துவரும் நாடுகளையே குப்பைத்தொட்டிகளாக மாற்றிவிடக்கூடிய இத்தகைய மீள்சுழற்சித் திட்டங்கள் அடியோடு நிறுத்தப்பட வேண்டும். அத்தகைய பொருள்களை இறக்குமதி செய்வதற்கு குறிப்பாக மீள்சுழற்சி என்ற பெயரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதற்கு முழுமையான தடை விதிக்கப்பட வேண்டும்.

# பேராயர் தமது கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

இந்துமதி



இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும், இங்கு வாழ்கின்ற அனைவரும் நீரியல் சிங்களவர் என்கின்ற ஒன்றிணைய வேண்டும் எனவும் தெரிவித்திருக்கிறார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித். ஏற்கனவே இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு எனவும் இந்த நாடு சிங்களவர்களுக்கே உரித்தானதெனவும் ஞானசார தேரர் கூறியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

### நல்வழிப் படுத்துவதே கடமை

மதத்தின் வழியாக மக்களை நல்வழிப்படுத்திச் சரியான பாதையைக் காண்பிக்க வேண்டியது மதப் பெரியார்களின் பிரதான கடமையாகும். மத ரீதியான பிளவுகளையும் இனத்தின் பேரிலான குழப்பங்களையும் ஏற்படுத்துவதிலிருந்து இவர்கள் விலகியிருத்தல் வேண்டும்.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் எல்லாமே தலைகீழாக இடம்பெறுகின்றன. இந்து ஆலயங்களை இடித்துவிட்டுப் பௌத்த விகாரைகளை அமைக்கின்ற பணிகளை பௌத்த தேரர்களே முன்னின்று நடத்தி வருகின்றார்கள். இவர்கள் இனவாதக் கருத்துக்களையும் உதிர்க்கின்றனர். இத்தகையவர்கள் இறைபணி செய்வதற்குத் தகுதியானவர்கள் அல்ல.

மதத்தின் வழியாக மக்களை நல்வழிப்படுத்திச் சரியான பாதையைக் காண்பிக்க வேண்டியது மதப் பெரியார்களின் பிரதான கடமையாகும். மத ரீதியான பிளவுகளையும் இனத்தின் பேரிலான குழப்பங்களையும் ஏற்படுத்துவதிலிருந்து இவர்கள் விலகியிருத்தல் வேண்டும். ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் எல்லாமே தலைகீழாக இடம்பெறுகின்றன. இந்து ஆலயங்களை இடித்துவிட்டு பௌத்த விகாரைகளை அமைக்கின்ற பணிகளை பௌத்ததேரர்களே முன்னின்று நடத்தி வருகின்றார்கள். இவர்கள் இனவாதக் கருத்துக்களையும் உதிர்க்கின்றனர். இத்தகையவர்கள் இறைபணி செய்வதற்குத் தகுதியான வர்கள் அல்ல.

தற்போது பேராயர் மல்கம் ரஞ்சித் இலங்கை ஒரு பௌத்த நாடு என்றும் நாட்டு மக்கள் அனைவருமே சிங்களவர்களாக ஒன்றிணைய வேண்டும் எனவும் கூறியிருக்கிறார் ஞானசார தேரரும் பேராயர் மல்கம் ரஞ்சித்தும் மதத்தால் வேறுபட்டிருந்தாலும் இனத்தால் சிங்களவர்கள் என்பதை நாம் ஒருகணம் நினைத்துப் பார்க்க வேண்டும். இவர்கள் இருவரும் ஏணைய இனத்தவர்களுக்கு ஒரே செய்தியைச் சொல்ல வருவது தெளிவாகத் தெரிகின்றது.

### தமிழர்கள் தொன்மையான மக்கள்

தமிழர்கள் இந்த நாட்டின் தொன்மையான மக்கள் என்பதை எந்த அரசாலும் மறுத்துரைக்க முடியாது. சிங்களவர்களின் மூதாதையான விஜயன் தனது தந்தையால் நாடு கடத்தப்பட்டு இந்தியாவின் வங்காள தேசத்திலிருந்து இந்த நாட்டுக்குள் நுழைந்தார். விஜயனின் சந்ததியினரே சிங்களவர்கள். பழைய வரலாறுகள் திரிவுபடுத்திக் கூறப்படுகின்றன. சிங்களவர்களே இந்த நாட்டின் அநாதியாக வாழ்ந்த இனத்தவரெனவும், தமிழர்கள் இடையில் இங்கு வந்து குடியேறியவர்களெனவும் சிங்கள வரலாறுகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் விஜயனின் வருகைக்கு முன்பே தமிழர்களால் வழிபட்டு வந்த மூன்று ஈஸ்வரர்கள் இங்கு அமைந்திருந்ததாக மூத்த தமிழ் அரசியல்வாதியொருவர் குறிப்பிட்டதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### இந்தியாவின் நிலைப்பாடு

இந்தியாவில் 80 வீதத்திற்கும் அதிகமானவர்களாக இந்துக்களாகவே காணப்படுகின்றனர். அங்கு மத்தியில் ஆட்சி புரிகின்ற பாரதீய ஜனதாக் கட்சி தீவிரமான இந்து மதக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த நாட்டைச் சூழ முஸ்ஸிம் நாடுகள் அமைந்துள்ளன. இந்தியாவில் இந்துக்களும் முஸ்ஸிம்களும் அடிக்கடி முரண்பட்டுக்கொண்டிருப்பது வாடிக்கையாகவே மாறி விட்டது. அண்டை நாடான பாகிஸ்தானில் பயிற்றுவிக்கப்பட்ட பயங்கரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவித் தாக்குதல்களை நடத்துவதும் இதில் பலர் உயிரிழப்பதும் வழமையாகி விட்டது. இந்தியாவின் தற்போதைய தலைமை அமைச்சரான நரேந்திரமோடி இந்துத்துவக் கோட்பாடுகளைக் கடுமையாகக் கடைப்பிடிக்கின்ற ஒருவர் இந்த நிலையிலும் இந்தியா ஒரு இந்து நாடாக இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. தற்போது இந்துத்துவக் கொள்கையைக் கொண்ட கட்சியொன்று மத்தியில் ஆட்சி புரிகின்ற நிலையில் இந்த அறிவிப்பை வெளியிடுவது கடினமான காரியமல்ல. ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

### ஏற்றுக்கொள்ளும் கருத்தல்ல

இன்று உலகிலேயே ஒரேயொரு இந்து நாடுதான் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே அமைந்துள்ள நேபாளம் தான் அந்த நாடு. அங்கு வாழ்கின்றவர்கள் இந்துமதத்தைச் சேர்ந்திருப்பதால் எவ்வித பிரச்சினையும் எழுவதில்லை.

ஆனால் சுமார் இரண்டு கோடி மக்கள் தொகையாகக் கொண்ட இந்த நாட்டில் சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள் என்ற மூவினத்தவர்களும் பிரதான இடத்தைப் பிடித்துள்ளனர். இஸ்லாமியர்கள் அனைவருமே இஸ்லாம் மதத்தைப் பின்பற்றி வருகின்றனர். சிங்களவர்களில் பெரும்பாலானவர்கள் பௌத்த மதத்தையும் ஏனையவர்கள் கிறிஸ்தவ மதத்தையும் பின்பற்றி வருகின்றனர். இதே போன்று தமிழர்களில் அதிக எண்ணிக்கையானவர்கள் இந்து மதத்தையும் ஏனையவர்கள் கிறிஸ்தவ மதத்தையும் பின்பற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் ஒட்டுமொத்த நாடும் பௌத்தத்தின் வழியைப் பின்பற்றுவதாகவும் சகல இனத்தவர்களும் சிங்களவர்களைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறுவதும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகத் தெரியவில்லை.

அதுமட்டுமல்லாது பௌத்த தேரர்களின் வழியைப் பின்பற்றிப் பேராயர் போதிப்பது அவர் மீது மட்டுமல்லாது கிறிஸ்தவ மதத்தின் மீறும் தவறான கருத்துக்களுக்கு இடமளித்துவிடும். ஆகவே பேராயர் அவர்கள் தமது கருத்தை மறுபரிசீலனை செய்வதே சிறந்தது.

உதயன்

# செய்திகள்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

வெள்ளிக்கிழமை 26 ஜூலை 2019



## பயங்கரவாதத்தை உருவாக்கும் அம்சங்களை அறிவதே முக்கியம்

### கிழக்கு முன்னாள் முதல்வர் நஸீர் இடித்துரைப்பு

கொழும்பு, ஜூலை 26

பயங்கரவாதக் குழுக்கள் உருவாகுவதைத் தடுக்கும் சட்டங்களை இயற்ற அமைச்சர்களைக் கொண்ட உபகுழு ஒன்றை அமைக்கும் தலைமை அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உண்மையான பயங்கரவாத நடவடிக்கைகள் எவை என்பதை சரியான முறையில் இனங்கண்டு அவற்றை முற்றாக இல்லாமல் செய்ய வேண்டியது அவசியமானதே. எனினும், நாட்டில் இன்று இன, மதவாத சக்திகள் தத்தமது பிரபலங்களுக்காகவும் பரப்புரைகளுக்காகவும் இட்டுக்கட்டி வெளியிடும் போலியான தகவல்கள் தொடர்பில் பரிசீலிப்பதும் அவசியமானது இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட். இவ்விடயம் குறித்த அவரது செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:

'சமகாலத்தில் நாட்டில் ஏற்பட்ட பாரதூரமான நிகழ்வுகளே, இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலைமையை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளன. இதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து சமூகங்களும் தமது பூரண உதவி ஒத்துழைப்புக்களை நல்கவேண்டும். அதேநேரம் பயங்கரவாதக்குழுக்கள் தோற்றம் பெறுவதற்கு உந்துசக்திகளாக இருக்கக்கூடிய விடயங்கள் எவை எவை என்பன குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

சமூகங்கள் அடக்கி ஒடுக்கப்படும்போதும் அவற்றின் மேல் வல்லாதிக்கம் திணிக்கப்படும்போதும் உண்மைகளுக்குப் புறம்பான தகவல்கள் பரப்புரைகளாக்கப்பட்டு அவை அவர்களின் இருப்புக்கும் தனித்துவத்துக்கும் குந்தகத்தை ஏற்படுத்தும் நிலைகள் தோன்றுகின்றபோதும் பயங்கரவாத நடவடிக்கைகளை நோக்கிய எண்ணங்களும் செயற்பாடுகளும் உருவாக்கம் பெறுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, பயங்கரவாதக்குழுக்கள் உருவாகுவதைத் தடுப்பதற்கு முதலில் அவை உருவாக்கம் பெறுவதற்கான காரணிகள் எவை என்பதை அறிய வேண்டும். இந்தக் காரணிகள் குறித்து எம்நாட்டை ஆண்டுவந்த அரசுகள் சரிவர அறிந்து செயற்பட்டனவா என்பதே இன்று சிறுபான்மை சமூகங்களுக்கு மத்தியிலுள்ள இருக்கின்ற கேள்வியாகும்.

காரணம் தொடர்ந்தும் சிறுபான்மைச் சமூகங்கள் இன, மதவாதங்களால் நசுக்கப்பட்டு வருகின்றமையே கண்கூடு. எனவே, அடிப்படைகளை அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதை இவ்வேளையில் வலியுறுத்த விரும்புகின்றேன்' என்றுள்ளது.

(ம-22)

## யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராக மருத்துவர் சத்தியமூர்த்தி பணியாற்றுவார்!

### அமைச்சர் ராஜித தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பணியாற்றுவர் என்று கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் அமைக்கப்பட்ட செம்பிறை மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்தை உத்தியோக பூர்வமாக மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கேள்வி:யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை நியமிப்பதில் இழுபறிகள் காணப்படுகின்றன். இது தொடர்பான நடவடிக்கை என்ன?

பதில்: யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சத்தியமூர்த்தி பணியாற்றுவார். இது தொடர்பான சில விடயங்களை வடக்கு மாகாண ஆளுநர் முன்வைத்திருந்தார். ஆனாலும் சத்தியமூர்த்தி இந்த இடத்துக்குத் தகுதியானவர் என்பதை ஆளுநர் விளங்கிக் கொண்டுள்ளார். ஆகவே சத்தியமூர்த்தி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்று விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவார்.

கேள்வி: வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட கழிவுகள் தொடர்பாக?

பதில்: இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் சுற்றுச் சூழல் சார்பான அமைச்சுக்கள், நிறுவனங்கள் கவனம் எடுத்து, இங்கு கொண்டுவரப்பட்ட கழிவுகளை ஆய்வு செய்தன. அதில் மருத்துவக் கழிவுகள் இல்லை, சுகாதாரம் சார்ந்த கழிவுகள் இல்லை. கொண்டுவரப்பட்ட கழிவுகள் தொடர்பில் இதை மட்டுமே எனது அமைச்சுச் சார்ந்து கூற முடியும்.

கேள்வி: அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாச உட்படச் சிலர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக உங்கள் கருத்து.

பதில்:பொருத்தமான ஒருவரை எமது கட்சி தேர்தலில் நிறுத்தும். அவருக்கு உங்கள் ஆதரவு கிடைத்தால் நன்று.

கேள்வி: இணுவில் பகுதியில் சிறுவர் மருத்துவமனை வேலைகள் தொடர்பாக?

பதில்: அந்தப் பகுதியில் சிறுவர் மருத்துவமனை அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டது. இடமும் கிறிஸ்தவ சபையொன்றின் ஒத்துழைப்புடன் பெறப்பட்டது. ஆனால் இன்னொரு பிரிவினர் தமக்கும் அந்த இடத்தில் உரிமை உண்டு என்ற பிரச்சினையெழுப்புகின்றனர். அதனையும் நாம் சுமுகமாகக் கையாண்டு வருகின்றோம். மருத்துவமனைக்கு இந்த ஆண்டும் நிதி ஒதுக்கப்பட்டது - என்றார்.



பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் சத்தியமூர்த்தி கொழும்பு சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கு வடக்கிலுள்ள அரசியல்வாதிகள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். போதனா மருத்துவமனையின் நிர்வாக நடவடிக்கை கொழும்பு அமைச்சின் நெறிப்படுத்தலில் உள்ளது. அதற்குப் பணிப்பாளராக உள்ளவரை மாகாண அமைச்சின் நெறிப்படுத்தலில் உள்ள நிர்வாகத்துக்கு நியமித்தால் அது தேவையற்ற சிக்கலை உருவாக்கும். மாகாணத்தின் அதிகாரங்களை கொழும்பு அரசுக்குத் தாரை வார்ப்பதாக அமையும் என்று வடக்கு அரசியல்வாதிகள் தெரிவித்து எதிர்ப்பு வெளியிடுகின்றனர். இந்த விடயம் வடக்கு ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டு சிக்கலில் உள்ளது. கொழும்பு அமைச்சு பணிப்பாளரை மாகாணத்துக்கு நியமித்தாலும் அதனை மாகாண ஆளுநரின் அனுமதியுடனேயே நடைமுறைப்படுத்த முடியும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா சில மாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

(து-7)

## ஐ.நா பிரதிநிதி – ஆளுநர் நேற்றுமுன்தினம் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 26

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சுதந்திர உரிமைக்கான ஐ.நா சமாதான சபையின் சிறப்புப் பிரதிநிதி கிளெமென்ட் நயனல் வோசிக்கும் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் என்ற ரீதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடனும் அரசுடனும் இணைந்து மாகாணத்தினுள் வசிக்கும் பொதுமக்களின் வாழ்க்கையினை மேம்படுத்த முன்னெடுக்கும் நிலம், நீர், நிதி மற்றும் நீதி தொடர்பான செயற்பாடுகள் தொடர்பில் ஐ.நா சிறப்புப் பிரதிநிதிக்கு ஆளுநர் விளக்கமளித்தார்.

காணியற்ற மக்களுக்கு காணிகளையும், குடிநீர் மற்றும் விவசாயத்துக்குத் தேவையான நீரினை வழங்குவதற்கு வடமராட்சி களப்பு திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும், வடமாகாணத்தில் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியொன்றை நிறுவுவது குறித்தும் செயற்பட்டு வருவது தொடர்பில் ஆளுநர் இதன்போது விரிவாக விளக்கமளித்தார்.

இதேவேளை இலங்கையில் ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களுக்கு பின்னர் தடைப்பட்டிருந்த பாதுகாப்பு படைகளின் வசமிருந்த பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிப்பது தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

(ம)

## பிற்போடப்பட்டுள்ளது

வடமராட்சி, ஜூலை 26

வடமராட்சி தென்மேற்கு அதிகார சபையின் இன்று நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலரும் கலாசார அதிகார சபையின் தலைவருமான ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ம-422)

## மாணவர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 26

கொமர்சல் வங்கி சுன்னாகக் கிளையில் அருணலு சேமிப்புக் கணக்கை உடைய கடந்த ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை கொமர்சல் வங்கி சுன்னாகக் கிளையில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

(ஐ)

## மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மூத்த விரிவுரையாளர் கலாநிதி செல்வம் கண்ணதாசன் பேராசிரியராக உயர்நிலை பெற்றமையைப் பாராட்டி மதிப்பளிக்கப்படவுள்ளார்.

சுழிபுரம் மேற்கு பாரதி கலை மன்ற சுப்பையா அரங்கில் நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஓய்வு பெற்ற அதிபர் பிரம்மசிறி வ.சிறிகாந்தன் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் கலாநிதி நா. சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ஐ)

## முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 26

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வண். சிறி வைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கொக்குவில் சிறி ஞான பண்டித வித்தியாசாலை அதிபர் நடராசா கந்தவனச் செல்வன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ஐ)

# அரசதலைவர் நடமாடும் சேவையால் ஏமாற்றப்பட்ட யாழ்ப்பாண மக்கள்

## தே.அ.அட்டைகளைப் பெறுவதில் அவதி

*யாழ்ப்பாணம், ஜுலை 26*

அரச தலைவர் நடமாடும் சேவைகள் கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களூடாக இடம்பெற்றிருந்தன. இந்த நடமாடும் சேவைகளில் தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு இதுவரை அவை கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சாவச்சேரி, சங்கானை, ஊர்காவற்துறை, காரைநகர், நல்லூர், நெடுந்தீவு, பருத்தித்துறைள ஆகிய பிரதேச செயலகங்களில் நடைபெற்ற 'நிலமெகவர' நடமாடும் சேவையில் விண்ணப்பித்த அடையாள அட்டை விண்ணப்பங்களுக்குரிய அடையாள அட்டைகள் இன்னும்பொதுமக்களுக்கு கிடைக்கவில்லை.
தேசிய அடையாள அட்டை தொடர்பான சேவைகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அறுவுறுத்தியிருந்தார். அடையாள அட்டைக்கு ஏற்படும் செலவுகளை தமது அமைச்சு ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வழங்கும் என்றும் அமைச்சர் அறிவித்தார். அதனால் மக்களிடமிருந்து எவ்வித பணமும் அறவிப்படாது இலவசமாகவே நடமாடும் சேவைகள் பிரதேசசெயலகங்களில் இடம்பெற்றன.
நடமாடும் சேவையை ஒழுங்குபடுத்தி நடத்திய அமைச்சின் அமைச்சர் கொடுத்த வாக்குறுதியால் மாவட்டச் செயலக அதிகாரிகளும் அதனை நம்பி பணம் பெறாது அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களைப் பெறுமாறு அறிவுறுத்தினர். இதனடிப்படையில் ஒவ்வொரு பிரதே செயலகங்களிலும், 500க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. சாவகச்சேரியில் 700 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. ஆனால் இன்று வரை அவர்களுக்குரிய அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை.
ஏனைய மாவட்டங்களில் நடைபெற்ற நிலமெகவர நடமாடும் சேவையில் விண்ணப்பித்த விண்ணப்பங்களுக்குரிய அடையாள அட்டைகள் இரண்டு மாதங்களில் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற நிலமெகவரவில் அடையாள அட்டைகளுக்குரிய கட்டணம் செலுத்தப்படாமையால் இதுவரை அவை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் அடையாள அட்டை பெறுவது இலவசம் என அறிவித்ததனால் அதற்கு பின் மற்றைய பிரதேச செயலகங்களில் நடைபெற்ற நடமாடும் சேவையும் இலவசமாகவே நடைபெற்றிருந்தன. இதனால் சாவச்சேரி, சங்கானை, ஊர்காவற்துறை, காரைநகர், நல்லூர், நெடுந்தீவு, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களிலும், நடைபெற்ற நிலமெகவர நடமாடும் சேவையில் விண்ணப்பித்த விண்ணப்பங்களுக்குரிய அடையாள அட்டைகள் இன்னும் பொதுமக்களுக்கு கிடைக்கவில்லை. ஒருவருடமாகிற நிலையில் தேசிய அடைய அட்டை கிடைக்கப்பெறாமையால் விண்ணப் பித்தவர்கள் அவதியுற்றுள்ளனர்என்றுசுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கோப்பாய், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செலகங்களின் நடமாடும் சேவைக்கு அமைச்சர் வரவில்லை அதனால் மக்களிடமிருந்தும் பொதுஅமைப்புக்களிடமிருந்தும் பணத்தைப் பெற்று அடையாள அட்டைக்கு உரிய பணத்தைச் செலுத்திவிட்டார்கள். அதனால் ஒருமாதத்திற்குள் அடையாள அட்டைகளைத் திணைக்களம் வழங்கிவிட்டது என்று பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
முதற்தடவையாக அடையாள அட்டை பெறுவதாயின் 100 ரூபாவும் , திருத்துவதாயின் 250 ரூபாவும் தொலைந்த அடையாள அட்டையைப் பெறுவதாயின் 500 ரூபாவும் பொதுமக்களிடம் அறவிட்டிருக்க வேண்டும். அல்லது பொது நிறுவனங்களிடமிருந்து அந்த தொகைக்குரிய பணத்தை பெற்று பிரதேச செயலகம் மக்கள் சார்பாக ஆட்பதிவுத் திணைக்களத்துக்குச் செலுத்தியிருக்க வேண்டும்.
ஆனால் இவை எவையும் நடைபெறாது இலவசம் என்ற பெயரில் நடமாடும் சேவைக்கு மக்கள் அழைக்கப்பட்டு ஏமாற்றப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படு கிறது.
இலவு காத்த கிளிபோல் அடையாள அட்டை வரும் என்று அதற்கு விண்ணப்பித்தவர்கள் இன்றுவரை எதிர்பார்த்துள்ளனர்.
ஆனால் பிரதேச செயலகங்கள் அது தொடர்பில் மக்களுக்கு எந்தத் தகவல்களையும் வழங்காதுள்ளன என்றும் குற்றஞ்சாட்டப்படு கிறது. தேசிய அடையாள அட்டை அவசியமெனக் கருதுவோர் பிரதேச செயலக ஆட்பதிவு திணைக்கள கிளை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பணத்தினை செலுத்தலாம் என்றும், அடையாள அட்டைக்குரிய பணத்தை ஆட்பதிவு திணைக்களத்திடம் செலுத்தி அடையாள அட்டைகளை நேரடியாகவே பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பிரதேச செயலர்கள் கூறுகின்றனர்.

(எ-21)

# வட்டுவாகல் களப்பு ஆற்றை ஆழப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு



சம்மந்தப்பட்ட திணைக்களத் துடன் பேசி முல்லைத்தீவு வட்டுவாகல் ஆற்றை ஆழப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.
வட்டுவாகல் சப்தகன்னிகள் ஆலய வளாகத்தில் அமையப்பெற்றுள்ள அறநெறிப் பாடசாலையைத் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்றமுன்தினம் நடைபெற்றது. அங்கு அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம், வட்டுவாகல் மீனவர்கள் வட்டுகாவல் கடலினை ஆழப்படுத்தித் தருமாறு கோரிக்கை மனு ஒன்றினைக் கையளித்துள்ளார்கள்.
மீனவர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய பிரச்சினை இது. 5 ஆயிரம் வரையான மீனவர்கள் இந்தக்களப்பை நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். வட்டுவாகல் ஆற்றைச் சீரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் சில காரணங்களினால் அவற்றைச் செய்யமுடியாத நிலமை காணப்படுகின்றது. எனவே வட்டுவாகல் ஆற்றை ஆழப்படுத்தும் வேலைகளை ஆரம்பிக்கும் போது யாராவது அதிகாரிகள் வந்து தமது அதிகார தன்மையைப் பயன்படுத்தி அவற்றை இடைநிறுத்த முற்பட்டால் சிலவேளை என்னால் அவற்றை செய்யமுடியாமல் போய்விட்டாலும்கூட எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் இந்த வேலை ஆரம்பிக்கப்படும் என்று மக்கள் மத்தியில் உறுதியளித்துள்ளார்.

(த-ரி3,246)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவருக்கு வேலைவாய்ப்பு

## *சில அபிவிருத்திகளுக்கும் நிதி வழங்க அமைச்சர் சஜித் பிரேமதாச உத்தரவாதம்*



முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்ட அமைச்சர் சஜித் பிரேமதாச, இரண்டுபேருக்கு வேலை வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.
முல்லைத்தீவு வட்டுவாகல் சப்த கன்னிகள் ஆலயத்தின் அறநெறிப் பாடசாலையின் கட்டடத் திறப்பு நிகழ்வுக்கு வந்த போது மக்களைச் சந்தித்துப் பேசினார்.
இதன்போது குமுழமுனையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் அமைச்சர் சஜித் பிரேமதாசவை ஓவியமாக வரைந்து கொண்டுவந்து காட்டியுள்ளார்.
இளைஞனின் திறமை தொடர்பில் அவரிடம் விசாரித்த சஜித் அவர் வேலைஇல்லாமல் இருப்பதன் காரணத்தால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வீடமைப்பு அதிகாரசபை அலுவலகத்துக்கு நேர்முகத் தேர்வுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். அவரின் பணி தொடர்பில் அதிகாரிகளுக்கும் பணித்துள்ளார்.
அத்துடன் வட்டுவாகலைச் சேர்ந்த படித்து பல்கலைக்கழக பட்டம் பெற்ற மாணவி ஒருவர் அறநெறி ஆசிரியராகப் பணியாற்றிவந்துள்ள நிலையில் தனது வேலைவாய்ப்புத் தொடர்பில் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இதனையடுத்து அவரை வீடமைப்பு அதிகாரசபையில் பணிக்கு அமர்த்துவதாகவும் அதற்கான நேர்முக தேர்வுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார். அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கும் பணித்துள்ளார்.
இதேவேளை, வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள சப்த கன்னிகள் ஆலயத்தின் அபிவிருத்திக்கு கட்டம் கட்டமாக நிதி வழங்குவதாக தேசியவீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித்பிரேமதாச உறுதியளித்துள்ளார்.
ஆலய நிர்வாகத்தினர் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இவ்வாறு நிதி வழங்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இதுமட்டுமன்றி, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலகங்கள் காணப்படுகின்றன. கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வட்டுவாகலில் தேசிய வீடமைப்பு அதிகார சபை 40 இலட்சம் ரூபா செலவில் அறநெறிக்கான கட்டடம் ஒன்றை அமைத்துள்ளது. ஏனைய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் அறநெறிக் கட்டடங்கள் கட்டித்தருவதாக உறுதி மொழியளித்துள்ளார்.
மாவட்டத்தில் இந்துக்கள், இஸ்லாமியர்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்த மக்கள் பரவலாக வாழ்கின்றார்கள். அனைத்து மதங்களையும் சார்ந்தவர்களும் எதிர்காலத்தில் பயன்பெறத்தக்க வகையில் அறநெறிக் கட்டங்களை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(த-ரி3)

# வாக்காளர் பதிவுகளை நீடிப்பதற்கு பதியவும்

பளை, ஜுலை 26
பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வசித்து இடப்பெயர்ந்து இதுவரை மீளக்குடியேறாமல் ஏனைய பிரதேசங்களில் தங்கியுள்ள குடும்பத்தினர் தமது வாக்காளர் பதிவுகளை தொடர்ந்து பிரதேசத்தில் நீடிப்பதற்கு தாம் முன்னர் வசித்த கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு வாக்காளர் படிவத்தைப் பூர்த்தி செய்து வழங்குமாறு பிரதேச செயலக செய்திப்பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த காலப்பகுதிக்குள் பதிவை மேற்கொள்ளாதவர்களின் பெயர்கள் பிரதேச வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-9)





# வவுனியாவில் வீடொன்றில் தீ பரவல்; உடமைகள் அனைத்தும் எரிந்து நாசம்

வவுனியா,ஜுலை 26
வவுனியா பறன்நட்டகல் கிராமத்தில் நேற்றுமாலை வீடொன்று தீ பிடித்து எரிந்துள்ளது.
வவுனியா ஓமந்தை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பறன்நட்டகல் பகுதியில் உள்ள தற்காலிகவீடொன்று தீப் பற்றி எரிந்துள்ளது.வீட்டில் யாரும் இல்லாத நேரம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.
வவுனியா ஓமந்தை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பறன்நட்டகல் பகுதியில் உள்ள வீடொன்றே நேற்று முன்தினம் மாலை தீப் பற்றி எரிந்துள்ளது.
தீ பரவுவதை அவதானித்த அயலவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தபோதிலும் அது சாத்தியப்படாத நிலையில் வவுனியா நகரசபையின் தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டு அவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.
இத் தீ விபத்தால் வீட்டில் உள்ள உடமைகள் அனைத்தும் சேதமடைந்துள்ளதுள்ளதுடன், குறித்த தீ விபத்தானது மின்சார ஒழுக்கினால் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
சம்பவ இடத்துக்கு சென்ற ஓமந்தைப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மின்னொழுக்கு தீ விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
இதேவேளை, சம்பவ இடத்துக்கு சென்ற மாவட்ட இடர் உதவி சேவைகள் நிலையத்தினர், கிராம அலுவலர் ஆகியோர் குறித்த வீட்டில் வசித்து வந்த குடும்பத்தினரை பிறிதொரு இடத்தில் தற்காலிகமாக தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் அவர்களின் அவசியதேவைகள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளனர்.


(ஜ-110)

# வடமராட்சியில் இராணுவ முகாம் அருகில் நூற்றுக்கணக்கில் பனை மரங்கள் தறிப்பு!

## ஒளிப்படமெடுத்தவரை மிரட்டி அனுப்பியது இராணுவம்

வடமராட்சி, ஜூலை 26

வடமராட்சி கிழக்கு பிர தேசத்துக்குட்பட்ட மண்டலாய்க்குக் கிழக்குப் பக்கமாக உள்ள இராணுவ முகாமுக்கு மிகவும் அண்மையில் பல நூற்றுக்கணக்கான பனைமரங்கள் தறிக்கப்பட்டு, வீட்டுத் தேவையான பனை மரச் சிலாகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சட்டவிரோதமான பனை மரங்கள் தறிக்கப்படுகின்றன எனக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கிராமஅலுவலர் மற்றும் பொது அமைப்பு பிரதிநிதிகள் குறித்த இடத்துக்குச் சென்று அந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளனர்.



தேவைக்கு அதிகமான பனைமரங்களை, அனுமதியின்றித் தறிக்க முடியாது என்று கூறப்பட்டபோதும், நூற்றுக்கணக்கான பனை மரங்கள் தறிக்கப்பட்டுச் சீவப்படுகிறது என்ற தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியைப் பார்வையிடுவதற்கு அந்தப் பிரிவு கிராம அலுவலர் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் சென்றிருந்தனர். எனினும் அந்த இடத்தில் பிரசன்னமாகியிருந்த இராணுவத்தினரும், இராணுவப் பொலிஸாரும், யார் உங்களை உள்ளே அனுமதித்தது எனவும் அந்த இடம் கண்ணிவெடி அகற்றப்படாத பிரதேசம் எனவும் கூறினர் என்றும், அந்த இடத்துக்கு யாரும் வரக்கூடாது என்று மிரட்டும் தொனியில் தெரிவித்தனர் என்றும் கூறப்படுகிறது.

தோல் சீவப்பட்டு வீட்டுத் தேவைகளுக்காகத் தயார்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்ட பனைமரங்களை ஒளிப் படம் எடுப்பதற்காக வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழுவின் செயலர் செல்வராசா உதயசிவம் முயற்சித்த போது இராணுவத்தினர் அவருடைய அலைபேசியைப் பறித்து மிரட்டியுள்ளனர். பின்னர் அலைபேசியில் உள்ள ஒளிப்படங்களை அழித்து, எச்சரித்து திரும்ப வழங்கினர். கண்ணிவெடி உள்ள பிரதேசம் என்ற போர்வையில் இராணுவத்தினரின் துணையுடனே ஏராளமான பனைகள் தறிக்கப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கண்ணிவெடியுள்ளபிரதேசம் என்றும் அங்கு செல்ல வேண்டாம் என்றும் பொது மக்களைத் தடுக்கும் இராணுவம் தனியொருவருக்கும், அவருடன் கூடச்செல்பவர்களுக்கும் அங்கு செல்ல அனுமதி வழங்குகின்றது. இராணுவத்தின் துணையுடன் செல்லும் நபர் சட்டவிரோதமாகப் பனைமரங்களைத் தறித்து விற்பனை செய்கிறார் என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இராணுவமுகாமுக்கு அருகில்தறித்து தோல் சீவப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ள பனைமரங்களை பிரதேச செயலகம் பொறுப்பெடுத்து அவற்றைக் கொண்டு செல்வதற்கு உரிய நடவடிக்கைகள்மேற்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-21,160)

# ஒருபுறம் பனை மான்மியம் மறுபுறம் பனைகள் அழிப்பு

## நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 26

வடக்கு மாகாணத்தின் அடையாளம், பொருளாதார வளம் பனை என்பதால் அதைப் பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்து அது தொடர்பான கண்காட்சி யாழ்ப்பாணத்தில் பெருமெடுப்பில் இடம்பெறுகின்ற அதேவேளை மறுபுறத்தில் பனைகள் அடியோடு தறிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்ற செயற்பாடுகளும் குறைவின்றி இடம்பெறுவதாக மக்கள் வேதனை தெரிவித்தனர்.

கிளிநொச்சி, மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சோரன்பற்று மற்றும் முல்லையடி கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் நடமாட்டமற்ற பகுதிகளில் ஏராளமான பனைமரங்கள் தறிக்கப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதை அவதானிக்க முடிக்கின்றது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அந்தப் பகுதிகளில் காணப்படுகின்ற அரச காணிகள், தனியார் காணிகளில் உள்ள பனை மரங்களே தறிக்கப்படுகின்றன.



பெரும் எண்ணிக்கையான பனைகள் தறிக்கப்படுகின்றன என்று தெரிவித்த அந்தப் பகுதி மக்கள், தம்மிடம் அனுமதி உண்டு என்று தெரிவித்தும், தங்களது காணிதான் என்று தெரிவித்தும் பனைகளைத் தறித்துச் செல்கின்றனர் என்றும் கூறுகின்றனர். பனைகள் கருகுவதற்கு, அல்லது பட்டுப் போவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் பின்னர் பட்ட பனை மரம் என்று கூறியும் பனைகளைத் தறித்துச் செல்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது தொடர்பாகப் பளைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கும்போதும், முறைப்பாடுகளைத் தெரிவிக்கும்போதும் அவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்க முன்வருகின்றனர் இல்லை என்றும் மக்கள் குற்றஞ்சாட்டினர். பொலிஸாருடைய அசமந்தத் தன்மை அவர்கள் பனை தறிக்கும் கும்பலுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுகிறார்களோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்ட போது கடந்த வாரமும் அந்தப் பகுதியில் பனைமரங்கள் கைப்பற்றப்பட்டன. சரியான இடம்மற்றும்நபர்களைக் குறிப்பிடும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கபடும் என்று உதயனுக்குத் தெரிவித்தார்.

பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச செயலர், அந்தப் பகுதி கிராம அலுவர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

பனை வளம் தொடர்பான பனை மான்மியம் எனும் தொனிப்பொருளில் கண்காட்சி ஒன்று யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் இடம்பெற்றுவருகிறது. பனையை அழியவிடக்கூடாது, பனை சார்ந்த தொழில்களில் ஈடுபடுபவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்றெல்லாம் அந்தக் கண்காட்சி வலிறுத்துகிறது. ஆனால் பனை வளமோ ஏதோ ஒரு வகையில் அழிக்கப்பட்டே வருகிறது. கிளிநொச்சியில் மாத்திரமல்ல யாழ்ப்பாணத்திலும் இரகசியமாக இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

எனினும் அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தனியாருடைய வளவினுள் இருந்தாலும் கூடப் பனைகளைத் தறிக்கக் கூடாது என்று கூறப்படுகிறது.

உரிய அனுமதிகளைப் பெற்று, என்ன தேவை என்பதை ஆராய்ந்தே பனை தறிப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அவ்வாறாயினும் ஒரு சில பனைகளையே தறிக்க முடியும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு இருந்தும் பெருந்தொகையான பனைகள் தறிக்கப்படுகிறன என்பது மக்கள் மத்தியில் சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளில் யார் ஈடுபட்டாலும் சட்டப்படி அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்றும்மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-21,6)

## காத்தான் குளத்தில் புதிய ஆலயம்

மன்னார்,ஜூலை 26

மன்னார் மறைமாவட்டத்தில் காத்தான்குளப் பங்கில் அமைக்கப்பட்ட புனித சூசையப்பர் ஆலயத்துக்கான பிரதிஷ்டை செய்யும் நாளை சனிக்கிழமை மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி மேதகு லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் நடைபெறவுள்ளது.

இந்தப் பகுதியில் 1650 ஆண்டுகளில் போர்த்துக்கேயர்களின் காலத்தில் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்ட போதும் இங்கு மக்களின் தொகைக்கேற்ப பிரமாண்டமான ஆலயம் ஒன்று அமைக்க வேண்டிய தேவையொன்று ஏற்பட்டுள்ளமையால் அருட்தந்தை. வசந்தகுமார் அடிகளார் பங்குத் தந்தையாக இருந்த காலத்தில் (2012 ஆம் ஆண்டு) மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை காலத்தில் இவ் ஆலயத்துக்கு அடிக்கல் நடப்பட்டு கட்டப்பட்டது.

இந்த நிலையிலேயே இந்தப் புதிய ஆலயம் காத்தான்குளம் பங்குத் தந்தை யே. அமல்ராஜ் குரூஸ் அடிகளார் தலைமையில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் பிரதிஷ்டை செய்யப்பட இருக்கின்றது. (ஜ-60)

## 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வு

வலி.தென்மேற்குப் பிரதேச மானிப்பாய் பட்டின முன்பள்ளியின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலி. தென்மேற்குப் பிரதேச சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி தம்பிராசா நாதசொரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.தென்மேற்குப் பிரதேச சபை உப தவிசாளர் ஆ.சி.கணேசவேல் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராகப் பிரதேசசெயலர் குணசிங்கம் சற்குணராசாவும், மதிப்பு விருந்தினர்களாக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர் திருமதி கே.கயல்விழி, கிராம அலுவலர் திருமதி ராஜயோகன் மோகனவாணி, வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவரும் சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளி இணைப்பாளருமானதிருமதி யோ.ஹேம நளினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-115)

## கூட்டுறவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 26

யாழ்ப்பாண மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் 97 ஆவது பன்னாட்டு கூட்டுறவு தின நிகழ்வு நாளை சனிக்கிழமை சங்க காரியாலய மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் பி.எ.சி. குணேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு ஆபிவிருத்தி உதவி ஆணையாளர் செல்வி ஏ.எஸ்.எப்.ஹஸ்ஸானா கலந்துகொள்ளவுள்ளார்.

மதிப்புறு விருந்தினராகச் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் அருந்தவநாதன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக சமூக அபிவிருத்தி அலுவலகர் திருமதி.தர்மினி ரஜிவன், யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகர் ச.பிறேமிலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ)

# திருக்கேதீச்சர அலங்கார வளைவை அதே இடத்தில் அமைக்கவேண்டும்

## சார்ள்ஸ் எம்.பி. சபையில் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஜூலை 25*

*மன்னார் திருக்கேதீச்சர ஆலய வீதி அலங்கார வளைவு முன்னர் இருந்த இடத்தில் அமைக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளு மன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.*

குறித்த வளைவு மகா சிவராத்திரி தினத்துக்காகச் சீரமைக்கப்பட்ட நிலையில், அது பிடுங்கியெறியப் பட்டது. இதனைப் பயன்படுத்தி இத்தனை ஆண்டுகளாக ஒன்றாக இருந்த ஒரே இன மக்களைக் கூறு போட தென்னிலங்கை அரசியல் சக்திகள் முயல்கின்றன.

திருக்கேதீச்சர ஆலய வளைவு மீண்டும் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் வளைவு எந்த சர்ச்சையும் இல்லாது இரு தரப்பின் சம்மதத்துடன் அமைக்கப்படுவதன் மூலம் சர்ச்சை எழாமல் தவிர்க்க முடியும். இதற்காகவே ஆயர் இல்லமும் முயற்சிக்கின்றது. இதற்கு மாறாக போர்க் காலங்களில் எல்லாம் ஒன்றாய் இருந்த சமூகத்தை தென்னிலங்கை அரசியல் தரப்புக்கள் சிலர் குறித்த விடயத்தில் மேலும் விரிசலை உண்டாக்க முற்படுகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் அப்படிக்கூறுகின்றாரெனினும், குறித்த அலங்கார வளைவை அமைக்க மன்னார் பிரதேச சபை அனுமதி வழங்கியபோதும் மன்னார் ஆயரே அதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்ட தரப்பினருக்கு அழுத்தம் கொடுத்துக் கூறியுள்ளார். அதனாலேயே அலங்கார வளைவு அமைப்பதற்கு பிரதேச சபை வழங்கிய அனுமதி மறுக்கப்பட்டது.

திருக்கேதீச்சர அலங்கார வளைவு சிவராத்திரிக்கு முதல்நாள் கத்தோலிக்க பாதிரியார் முன்னிலையில் கத்தோலிக்கர்களால் அடித்து உடைக்கப்பட்டது. அதனால் இரு மதத்தவருக்கும் இடையில் முரண் நிலை ஏற்பட்டது. பொலிஸார் தலையிட்டு முரண் நிலையைக் கட்டுப்படுத்தியிருந்தனரெனினும், அலங்கார வளைவு விடயம் அமைக்க இன்னும் தடை போடுவதிலேயே மன்னார் ஆயர் உள்ளிட்ட கத்தோலிக்கத் தரப்பினர் தீவிரமாக உள்ளனர் என்று விமர்சிக்கப்படுகிறதாக குறிப்பிடப்படுகிறது. (த-105)

### லிகோரியார் ஆலய நவநாள் வழிபாடு

சாவகச்சேரி, ஜூலை 26

யாழ்ப்பாணம் சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய நவநாள் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை திருநாள் கருணை வழிபாடும், திருப்பலிப் பூஜையும் இடம்பெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாட்பாடல் பரிபூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

ஆலயப் பங்கு குரு அருட்பணி ரெக்ஸ் சௌந்தர ராசா அடிகள் தலைமையில் நவநாள் வழிபாடுகள் இடம்பெறுமெனவும் திருவிழாக் காலத்தில் மறை உரைகளை அருட்பணி யேசுபாலன் அடிகள் நிகழ்த்துவார் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஜ-9)

*நிதி நிறுவன 11 கோடி ரூபா முறைகேடு வழக்கில்*

# சந்தேகநபரான பெண் அலுவலர் விசாரணைகளில் தலையிடுகிறார்

## லட்சம் ரூபா பணம் கைமாற்றினார் என்றும் எவ்.சி.ஐ.டி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிதி நிறுவனம் ஒன்று தனிநபர் ஒருவருக்கு சுமார் 11 கோடி ரூபா முற்பணம் வழங்கி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டு வழக்கில் மூன்றாவது சந்தேகநபரும் அந்த நிறுவனத்தின் அலுவலருமான பெண் விசாரணைகளில் தலையீடு செய்கின்றார். அவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் அவரது கணக்கிலிருந்த பல மில்லியன் ரூபா பணம் உறவினர்களின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்று வழக்கு விசாரணைகளை முன்னெடுக்கும் பெரும் நிதி மோசடிகள் விசாரணைப் பிரிவினர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

மூன்றாவது சந்தேகநபர் விசாரணைகளில் தலையீடு செய்தால் அவருக்கு வழங்கப்பட்ட பிணை நிராகரிக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்று எச்சரித்த மன்று, முதலாவது சந்தேகநபரான நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளைமுகாமையாளர் மற்றும் 5ஆவது சந்தேகநபரான வர்த்தகருக்கும் இந்த மோசடியுடன் நேரடித் தொடர்பு உள்ளது என்று சுட்டிக்காட்டியது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளைமுகாமையாளர், அலுவலர் மற்றும் பணத்தைப் பெற்றுக்கொண்ட வர்த்தகர் ஆகிய மூவரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். மூன்றாம் நான்காம் சந்தேகநபர்களான பெண் அலுவலர்கள் இருவரும் மன்றில் முன்னிலையாகினர்.

நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர், அலுவலர் மற்றும் பணத்தைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர் ஆகிய மூவர் சார்பில் முறையே சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் சமர்ப்பித்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

எனினும், இந்த மோசடி தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதனாலும் மேலும் பலர் கைது செய்யப்படவேண்டி உள்ளதாலும் சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்க பெரும் நிதி மோசடிகள் விசாரணைப் பிரிவு பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்தனர்.

அதனால் சந்தேகநபர்களின் பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் மூவரினதும் விளக்கமறியலையும் 14 நாள்களுக்கு நீடித்து உத்தரவிட்டார்.

**பின்னணி**

யாழ்ப்பாணம் நகரில் நீண்டகாலமாக இயங்கி வரும் நிதி நிறுவனம் மாதகலைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு சுமார் 10 கோடி ரூபா பணம் மீற்றர் வட்டிக் கணக்கில் மோசடியாக வழங்கப்பட்டது. அதனை நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர், அடகுப் பிரிவு அலுவலர்கள் இணைந்து தங்க நகை அடகு மீதான முற்பணம் என கணக்குக் காட்டியுள்ளனர்.

எனினும் நிதி நிறுவனத்தின் கணக்காய்வுப் பிரிவு மேற்கொண்ட விசாரணையில் வர்த்தகருக்கு வழங்கப்பட்ட முற்பணத்துக்கு உரிய நகைகள் அடகுப் பிரிவிடம் இருக்கவில்லை.

அது தொடர்பில் கணக்காய்வுப் பிரிவால், நிதி நிறுவன முகாமைத்துவத்துக்கு அறிக்கையிடப்பட்டது.

சுமார் 6 மாதங்கள் இந்தப் பணம் தனிநபர் ஒருவருக்கு எந்தப் பொறுப்பும் பெறப்படாமல் மோசடியாக வட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது என்று கணக்காய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

அதுதொடர்பில் உரிய பணம் மற்றும் வட்டி அடங்கலாக சுமார் 11 கோடி ரூபா பணத்தை வர்த்தகரிடமிருந்து மீள அறவீடு செய்யுமாறு யாழ்ப்பாணக் கிளை முகாமையாளருக்கு நிதி நிறுவனத்தின் முகாமைத்துவம் கால அவகாசம் வழங்கியிருந்தது.

எனினும் உரிய காலத்துக்குள் பணம் மற்றும் வட்டியை மீள அறவீடு செய்வதற்குகிளைமுகாமையாளர் தவறிவிட்டதால், அவருக்கு எதிராக கொழும்பு பெரும் நிதி மோசடிகள் பொலிஸ் விசாரணைப் பிரிவுக்கு நிதி நிறுவனத்தின் முகாமைத்துவம் முறைப்பாடு வழங்கியது.

அதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பெரும் நிதி மோசடிகள் பொலிஸ் விசாரணைப் பிரிவு, யாழ்ப்பாணக் கிளை முகாமையாளரைக் கைது செய்தது. முகாமையாளரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த மாதம் முற்படுத்தியிருந்தனர். (து-37)



# தரம் 5 மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு



யாழ்ப்பாணம், ஜூலை 26

நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை வாலிப முன்னணி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் வட்டுக் கோட்டைத் தொகுதித் தலைவருமான ஈ. சரவணபவன் அறக்கட்டளை அமைப்பினுடாகவும் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரபல ஆசிரியர்கள் கருத்தரங்கைக் கொண்டு நடத்தியிருந்தனர். சங்கானைக் கோட்டத்தைச் சேர்ந்த 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர். வளவாளர்களாக் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கு பொன்னடை போர்த்தி மதிப்பளிக்கப் பட்டிருந்தது. (எ-21)

*அத்துமீறிப் புகுந்து மீன்பிடி:*

# இந்திய மீனவர் நால்வர் நெடுந்தீவில் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூலை 26



இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் நால்வர் படகுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். இந்தியாவின் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினத்திலிருந்து மீன்பிடிக்க புறப்பட்ட நான்கு மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மருத்துவ பரிசோதனையின் பின்னர் யாழ்ப்பாண நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

### பொதுக் கூட்டம்

கொடிகாமம், ஜூலை 26

யாழ்பாணம் மந்துவில் றோ.க.த.க பாடசாலை பழைய மாணவர்களுக்கான சிறப்பு பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வித்தியாலய முதன்மை மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு அதிபர் ந.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் பரிசளிப்பு நிகழ்வு ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடல் இடம் பெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-159)

# போர்க் காலத்தில் சட்டத்தை மீறியும் குடியேற்றங்களைச்செய்ததுரெலோ

## இடம்பெயர்ந்த மக்களுக்காக என்கிறார் முன்னாள் எம்.பி

**போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதிகளில் வவுனியா மாவட்டத்தில்தமிழீழ விடுதலைக்கழகம் மற்றும் தமிழீழ விடுதலை இயக்கம் என்பவற்றினால் பல குடியேற்றக்கிராமங்களை உருவாக்கியுள்ளோம் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோ நோதாரலிங்கம் தெரிவித்தார்.**

வவுனியா தாஸ்நகரில் விபுலானந்த முன்பள்ளி நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

ஒரு காலத்திலே வீடிழந்து, நிலமிழந்து இடம்பெயர்ந்து ஏதிலிகளாக இருந்த மக்களை ஏதோ ஒரு வகையிலே தற்காலிகமாகவேனும் மீளக் குடியமர்த்த வேண்டும் என்ற உயரிய சிந்தனை யோடு அன்றைய காலங்களிலே குறிப்பாக போர்மிகமோசமாகநடந்து கொண்டிருந்த காலப் பகுதியிலே தமிழீழ விடுதலை இயக்கத்தினாலும் எங்களாலும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினாலும் வவுனியா மாவட்டத்திலே பல்வேறு குடியேற்றத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

அப்போது அரச அதிகாரிகளால் சட்டத்துக்குட்பட்ட வகையிலேதான் குடியேற்றங்கள் அமையக்கூடிய சூழ்நிலை இருந்தாலும் கூட ஏராளமான இடம்பெயர்ந்த மக்களை இந்தப் போர் முடியும் வரைக்கும், சமாதானம் நிலவும் வரைக்கும் தற்காலிகமாகவேனும் நாங்கள் குடியேற்றம் செய்ய வேண்டும். அதுவரைக்கும் அவர்களுக்கான உதவிகளை செய்து கொடுக்க வேண்டும் என்ற நோக்கோடு நான் நினைக்கிறேன் வவுனியா மாவட்டத்திலே இருபதுக்கும் மேற்பட்ட குடியேற்றக் கிராமங்களை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம்.

அவர்களுக்கு சட்டத்திற்குப் புறம்பான வகையில் என்றாலும் சரி நாங்கள் அவர்களைக் குடியேற்றி அவர்களுக்கான வசதிகளை எங்களுடைய அப்போதைய போராட்ட இயக்கங்களாக இருந்தாலும் சரி எங்களால் முடிந்த வரைக்கும் அவர்களுக்கான வசதிகளையும், வாய்ப்புக்களையும் வழங்கியிருந்தோம். அன்று நாங்கள் இதுபோன்ற கிராமங்களை உருவாக்கியிருக்காமல் விட்டிருந்தால் இன்றும் கூட அதே முகாம்களிலோ அல்லது வெவ்வேறு இடங்களிலோ கஷ்டமானமிகவும்துன்பமான நிலையில் தான் வாழ்ந்து கொண்டிருந்திருப்பார்கள் என்பது எமக்கு தெரியும்.- என்றார்.

(எ-21)

### வாள் வைத்திருந்தனரென

# கிளிநொச்சியில் இருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 26

வாள் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பளைப்பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இருவரும் கைது செய்யப்பட்டனர். கோவில் தேவைக்காகக் கொண்டு சென்றோம் என்று ஆரம்ப விசாரணையில் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இருவரையும் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தவுள்ளோம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(த-6)

# போதையில் சாரத்தியம் 50 ஆயிரம் ரூபா தண்டம்

### மற்றொருவரின் சாரதி அனுமதிப் பத்திரம் ரத்து

போதையில், சாரதி அனுமதிப்பத்திரமின்றி உந்துருளி செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

இவருக்கு முற்குற்றம் இருந்த காரணத்தால் 30 ஆயிரம் ரூபா தண்டமும் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாததால் 20 ஆயிரம் ரூபா தண்டமுமாக மொத்தமாக 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, போதையில் உந்துருளி செலுத்திய நபருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிமன்று, சாரதி அனுமதிப்பத்திரத்தை மூன்று மாதங்களுக்குத் தடுத்து வைக்குமாறும் தடை விதித்தது.

(த-159)



## ஈருருளி அன்பளிப்பு

தென்மராட்சி, ஜூலை 26

பெற்றோரை இழந்து பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த கொடிகாமம் அரசினர் வித்தியாலய மாணவனுக்கு ஈருருளி வழங்கி வைக்கப்பட்டது. தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தால் நேற்றுமுன்தினம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. வித்தியாலய அதிபர் கழகத்திடம் விடுத்து வேண்டுகோளையடுத்து கழகத்தினர் ஈருருளியை வித்தியாலயத்தில் வைத்து மாணவனிடம் கையளித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் கழகத் தலைவர் லயன் கா.ஸ்ரீமோகன், செயலர் லயன் இ.கந்தையா, மாவட்டத் தலைவர் த.இரவீந்திரன் மற்றும் கழக உறுப்பினர்கள் வித்தியாலய அதிபர், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

(ஐ-9)

# ஒட்டுசுட்டானில் உள்ள நீர்ப்பாசன வேலை திட்டங்களுக்கு ரூ. 46 மில்லியன்ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட குளங்களுடைய நீர்ப்பாசன வேலைத் திட்டங்களுக்காக 46 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கமநலசேவைகள்திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலைய அதிகாரப் பரப்புக்குக் கீழ் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலக நிதி ஒதுக்கீட்டின் கீழ் பெரிய இத்திமடு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பெரிய இத்திமடு கமக்காக அமைப்பின் கீழான பெரிய இத்திமடுக்குளம் 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் சீரமைப்பு வேலைகள் இடம்பெறுவதுடன் அதே கிராம அலுவலர் பிரிவின் கீழ் கோடாலிக்கல்லு கமக்கார அமைப்பின் கீழான அலைசிந்தியா குளம் 6.2 மில்லியன் ரூபா பெறுமதியில் கணியச்சிட்டை தயாரிக்கப்பட்டு கூறுவிலை கோரலுக்காக கமநல அபிவிருத்தித் திணைக்களம் கொழும்பு தலைமைக்காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தண்டுவான் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தண்டுவான் கமக்கார அமைப்பின் கீழ் வெளிக்கோணமடுக்குளம் 3.8 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் சீரமைப்பு வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

கமக்கார நம்பிக்கை நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் கமக்கார அமைப்பின் கீழ் பிரப்புவெட்டுவான்குளம் 4 மில்லியன் ரூபாவிலும் தண்டுவான் கமக்கார அமைப்புக்குட்பட்ட கோணமடுக்குள வாய்க்கால் 3 மில்லியன் ரூபாவிலும் கோடாலிக்கல்லு கமக்கார அமைப்புக்குட்பட்ட கோடாலிக்கல்லுக் குளம் 8.3 மில்லியன் ரூபாவிலும் கணியச்சிட்டைகள் தயாரிக்கப்பட்டு கூறுவிலை கோரலுக்காக திணைக்கள அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சு நிதி ஒதுக்கீட்டின் கீழ் பழம்பாசி கிராம அலுவலர் பிரிவின் கீழான பழம்பாசி கமக்கார அமைப்புக்குட்பட்ட தவசிக்குள சீரமைப்பானது 5 மில்லியன் ரூபாவினும் பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பண்டாரவன்னி கமக்காகர அமைப்பின் கீழழன காஞ்சூர மோட்டை குளமானது 3.6 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் பெரியஇத்திமடு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கோடாலிக்கல்லு கமக்கார அமைப்பின் கீழான குஞ்சுக்கோடாலிக்கல்லு குள வாய்க்காலானது ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கத்திலும் ஒதியமலை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஒதியமலை கமக்கார அமைப்பின் கீழான ஒதியமலை குள வாய்க்காலானது 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கத்திலும் தண்டுவான் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அலைக்கல்லுப்போட்ட குள கமக்கார அமைப்பின் கீழான அலைகல்லுப்போட்டகுள அபிவிருத்தி வேலையானது 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கத்திலும் சீரமைப்பு வேலைகள்தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி அலுவலர் ம. சற்குணநேசன் தெரிவித்தார்.

(21)



புத்தக விற்பனை நிலையத்தில் தீ

# 7 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசம்

மன்னார்,ஜூலை 26

புத்தக விற்பனை நிலையம் ஒன்று முழுமையாக எரிந்ததில் சுமார் 7 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

மன்னார் புதிய பேருந்து தரிப்பிட பகுதியில் அமைந்துள்ள புத்தக நிலையமே நேற்றுவியாழக்கிழமை காலை 5 மணியளவில் தீப்பற்றி எரிந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது;

வழமை போல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு குறித்த விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மூடப்பட்டிருந்த குறித்த விற்பனை நிலையத்தினுள் இருந்து நேற்று அதிகாலை தீ மற்றும் புகை வெளிவருவதை அவதானித்தவர்கள் விற்பனை நிலைய உரிமையாளருக்கு தகவல் வழங்கினர்.

உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்ற உரிமையாளர் மற்றும் வர்த்தகர்கள் இணைந்து தீயை அனைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு, மன்னார் பொலிஸாருக்கும், மன்னார் நகர சபைக்கும் தெரியப்படுத்தினர்.

இந்த நிலையில் மன்னார் நகர சபை மற்றும் இராணுவத்தினர் தீயை அணைக்கும் நடவக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் இரண்டு மணித்தியால போராட்டத்தின் பின் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.எனினும் அனைத்து பொருள்களுமே எரிந்து சாம்பலாகியுள்ளன.

மின் ஒழுக்கா?அல்லது திட்டமிட்ட சதியாக என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர்.

இது இவ்வாறு இருக்க மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்ட திடீர் தீ விபத்துக்களை தொடர்ந்து மாவட்டத்துக்கு அவசரமாக தீ அணைப்பு வாகனம் தேவை என்பதனை நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அமைச்சர்கள்,தலைமை அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டு சென்றார்.

இந்த நிலையில் வடக்குக்கு பயணம் செய்திருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக மன்னார் மாவட்டத்துக்கு தீ அனைப்பு வாகனம் வழங்குவதாக உறுதி மொழி வழங்கினார்.

ஆனால் மாதங்கள் பல கடந்த போதும் தலைமை அமைச்சரின் உறுதி மொழி இது வரை நிறைவேற்றப்படவில்லை எனவும், தீ அனைப்பு வாகனம் இருந்திருந்தால் குறித்த தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விற்பனை நிலையத்தில் இருந்த பொருள்களை பாதுகாத்திருக்க முடியும் என வர்த்தகர்கள் கவலை தெரிவித்தனர்.

(ஐ-56)



# வரணி பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பு

கொடிகாமம்,ஜூலை 26

தென்மராட்சி வரணி பிரதேசத்தில் கிராம எழுச்சித்திட்டத்தினூடாக பாடசாலைகள் மற்றும் வீதிகளின் சீரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

வரணி நாவற்காடு கரம்பை அ.மி.த.க பாடசாலையின் மைதானத்துக்கானமதில் அமைப்பதற்கு 0.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் வரணி பிரதேசத்தின் பல வீதிகளும் சீரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வரணி தெற்கு வீதிக்கு ஒரு மில்லியன் ரூபாவும், கரம்பைக்குறிச்சி சமுர்த்தி வங்கி வீதிக்கு 1.5 மில்லியன் ரூபாவும், வரணி இயற்றாலை தும்புருவில் வீதிக்கு 2 மில்லியன் ரூபாவும், நாவற்காடு குடலைபீறி வீதிக்கு 1.5 மில்லியன் ரூபாவும், நாவற்காடு இரகணி வீதிக்கு 1.2 மில்லியன் ரூபாவும் குடமியன் ஆதிசிவன் வீதிக்கு 1.5 மில்லியன் ரூபாவும் முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதிகளின் சீரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஐ-159)

## புனித அன்னம்மாள் ஆலயத் திருவிழா

கொழும்புத்துறை,ஜூலை26
யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்குத் திருச்செபமாலையுடன் நற்கருணைப் பெருவிழா நடைபெறும்.
மறுநாள் ஞாயிற்றுக்கிழமைகாலை6.30மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம் பெறவுள்ளதாகப் பங்குத் தந்தை அருட்பணி யோ. மவுலிஸ் அடிகள் தெரிவித்துள்ளார். (ஜ-135)



## ஆழ்துளை கிணறு அமைத்து அன்பளிப்பு

கிளிநொச்சி,ஜூலை 26
கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவருக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.
வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினரால் லண்டனில் புலம்பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவு ஒருவரின் நிதிப் பங்களிப்பில் இந்த ஆழ்துளைக் கிணறு அண்மையில் அமைத்து வழங்கப்பட்டது. (ஜ)



பக்கச்சார்பாகச் செயற்படும்

# தொல்லியல் திணைக்களத்தை அரசு உடன் கலைக்கவேண்டும்

சிவசக்தி ஆனந்தன் எம்.பி கோரிக்கை

வவுனியா, ஜூலை 26
பக்கச்சார்பான தொல்லியல் திணைக்களத்தை அரசு உடன் கலைக்க வேண்டும் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இந்துக்களின் ஆலயங்கள் மீது தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:
இலங்கையின் தொல்லியல்துறையின் முக்கிய சபையில் இருக்கக்கூடிய 33 பேரில் ஒருவர்கூட தமிழர்கள் இல்லை. அனைவரும் சிங்களவர்களாக இருக்கின்றனர்.
ஆகவே இந்த தொல்லியல் திணைக்களம் பௌத்த மேலாதிக்கத்துக்கு இடம் கொடுப்பதாகவும் அதற்கு சார்பாகவுமே செயற்படுகின்றது.
ஆகவே அரசு உடனடியாக இந்தத் தொல்லியல் திணைக்களத்தைக் கலைக்க வேண்டும். அல்லது தொல்லியல் திணைக்களத்தில் தமிழர்களையும் உள்வாங்கி நடுநிலையான தமிழர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் பௌத்தர்களுக்குப் பொதுவான ஒரு திணைக்களமாகச் செயற்படவேண்டும்.
ஆனால்இலங்கையில்முழுமையாகச் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை இந்தத் திணைக்களம் கொண்டுள்ளமையால் இந்துக்களினதும் தமிழர்களினதும் ஆலயங்களின் தொல்லியலை இல்லாதொழிக்கும் செயற்பாட்டையே முன்னெடுக்கின்றது.
எனவே ஐக்கிய நாடுகள் சபை தமிழர்களின் தொல்லியலையும், ஆலயங்களையும் பாதுகாப்பதற்குத் தலையிட வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கின்றது.

**கஜேந்திர்குமார் சிறுபிள்ளையே**

ஈ.பி.ஆர்.எல்.எப். கூட்டமைப்பாகச் செயற்படுவதற்கோ கூட்டமைப்புப் பற்றி கதைப்பதற்கோ அருகதையில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் அண்மையில் கூறியிருக்கின்றார்.
40 வருடங்களைக் கடந்த இந்தப் போராட்டத்தில் அவர் சிறுபிள்ளையாக இருந்தமையால் அரசியல் மற்றும் போராட்ட வரலாறுகள் அவருக்குத் தெரியாது. திம்பு பேச்சில் நான்கு கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து வைத்த கோரிக்கைகள் தொடர்பாகவும் அல்லது திம்பு மாநாட்டில் எவ்வாறு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது என்பது தொடர்பான வரலாற்றை அவர் கற்றுக்கொள்ள வேண்டும்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் எங்களைப்போன்றவர்களும் சிவராமைப் போன்றவர்களினதும் பங்களிப்பு என்ன என்பதை அவர் தெரிந்துகொள்ளவேண்டும்.
கஜேந்திரகுமார் இந்த அரசியலுக்கு வந்தமை தற்செயலான விபத்து. ஆகவே ஈழ விடுதலைப்போராட்டம் சம்பந்தமாகவோ ஜனநாயக ரீதியிலான போராட்டம் சம்பந்தமாகவோ இவர் சிறுபிள்ளைத்தனமாகக் கதைத்துக்கொண்டிருப்பதற்கு மக்கள் பதிலளிப்பார்கள்.
இன்னும் தங்களிடம் தான் கொள்கை இருக்கின்றது என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் நாடாளுமன்றத் தேர்தலைத் தவிர வேறு ஒன்றிலும் போட்டியிட மாட்டோம் என்றவர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு யாழ்ப்பாண மாநகர சபையில் தங்கள் ஒருவரை மேயராக்குவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேரம் பேசியதும் எங்களுக்குத் தெரியும். அதேபோல் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் மாகாணசபை முறைமையை ஆரம்பப் புள்ளியாகக் கூட எடுக்கமாட்டோம் என்று தெரிவித்தவர்கள் இன்று மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர்.
திருக்கோவில், பொத்துவிலில் உள்ளூராட்சிமன்றங்களில்உள்ளஅவர்களின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் தவிசாளர் தெரிவில் ஆதரவு தெரிவித்துள்ளனர்.
இற்றைவரைக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஒற்றையாட்சியாப்பை வைத்துக்கொண்டு தமிழ் மக்களுக்கு ஒரு நாடு இரு தேசம் என்கின்ற கொள்கைகளைப் பேசுகின்றனர். இது அவர்களின் கொள்கைக்கு முன்னுக்குப்பின் முரணானது.
இந்தநிலையில்தான் திம்புவில் இருந்துகூட்டமைப்புஉருவாக்கம்வரையும் ஒரு ஐக்கியப்பட்ட கூட்டமைப்பை உருவாக்குவதற்கு நாங்கள் எடுத்த முயற்சிகள் தெரியாமல் தற்போது கூட்டமைப்பைப் பற்றிப் பேசுவதற்கு எங்களுக்கு அருகதையில்லை என்று கூறுகின்ற சிறுபிள்ளை கஜேந்திரகுமார் ஈழ வரலாற்றை முதலில் கற்க வேண்டும் - என்றார். (த-110)

## முருங்கைக்காயின் விலையில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை 26
யாழ்ப்பாணக் குடாநாட்டில் கறிமுருங்கைக்காய்களின் விலை திடீரென சரிந்துள்ளன.
கடந்த வாரத்தில் கிலோ 200ரூபாவுக்கு மேல் விற்கப்பட்ட முருங்கைக்காய் தற்போது கிலோ 100 ரூபாவாக சரிந்து காணப்படுகின்றது. தற்போதைய வறட்சி வெப்பமான காலநிலையால் முருங்கை மரங்களில் அதிகளவான காய்கள் காய்த்துள்ளன.
இதன் காரணமாக அவை அதிகளவில் சந்தைகளுக்கு வந்தும் சேர்வதாக மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.
அதனைவிட வன்னிப்பிரதேசத்தில் இருந்தும் பெருமளவு முருங்கைக்காய்கய் விற்பனைக்காக யாழ்ப்பாணம் எடுத்தும் வரப்படுகின்றன.
திருநெல்வேலி, சுன்னாகம்,மருதனார்மடம், சாவகச்சேரி, கொடிகாமம், சங்கானை போன்ற மரக்கறி சந்தைகளுக்கு போதியளவு முருங்கைக்காய்கள் விற்பனைக்காக எடுத்துவரப்படுகின்றன. (ஜ-17)

## கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 26
நீர்வேலி கந்த சுவாமி கோவிலின் ஆடிக் கார்த்திகை உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். இன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு அபிசேக பூசை வழிபாடுகள் மற்றும் மாவிளக்கு ஏற்றுதல் என்பன இடம்பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ-17)

8 லட்சத்து 48ஆயிரத்து 168 சதுரமீற்றர் பரப்பளவில்

# 19ஆயிரத்து 64 வெடிப்பொருள்கள் 3 வருடங்களில் அகற்றப்பட்டுள்ளன

ஸார்ப் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26
வடக்கு மாகாணத்தில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் கண்ணிவெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனம், 3 வருடங்களில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 8 லட்சத்து 48ஆயிரத்து168 சதுர மீற்றர் பரப்பளவில் அபாயகரமான 19ஆயிரத்து 64 வெடிப்பொருள்களை அகற்றி அழித்துள்ளது.
2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2019 ஜூலை மாதம் 21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இவற்றை அழித்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்தது.



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் இவை அகற்றப்பட்டுள்ளன என்று ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.
தொடர்ந்து இந்த நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலையின் பல பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)



## பயங்கரவாதம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு

மன்னார், ஜூலை 26
நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரவாதம், அடிப்படைவாதம் மற்றும் தீவரவாத செயற்பாடுகளின் போது இளைஞர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இன,மத கலாசார ரீதியான பிரிவினைகள் மற்றும் முரண்பாடுகளை இளைஞர்கள் மத்தியில் தீர்த்துக் கொள்வது தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் மன்னாரில் நடைபெற்றது.
மன்னார் வாழ்வுதயத்தில் மன்னார் மாவட்ட இளைஞர் கழக சம்மேளன பிரதிநிதி ஜோசப் நயன் தலைமையில், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது. நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டு இலங்கை முழுவதும் உள்ள 25 மாவட்டங்களிலும் இந்த செயலமர்வு நடத்தப்படுகின்றது.
கடந்த செவ்வாய்க்கிழமை மன்னாரில் நடந்த செயலமர்வுக்கு முதன்மை விருந்தினராக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மன்னார் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ரீ.பூலோகராஜா கலந்து கொண்டார். இலங்கை இளைஞர் கழக சம்மேளன உப தலைவர் ஜசோதரன், மடு இளைஞர் சேவை அதிகாரி ராகவேந்தர், மன்னார் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேசுராஜ் லோகு எனப் பலர் கலந்து கொண்டனர்.
இந்தச் செயலமர்வு மூலம் இளைஞர் மத்தியில் சேகரிக்கப்படும் கருத்துக்களை அடுத்த மாதம் தேசிய ரீதியில் இடம் பெறவுள்ள இளைஞர் தினத்தில் சிறப்பு அறிக்கையாக தயாரிக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.(எ-56)

## கதிர் கற்கை வளாகக் கட்டடத் திறப்பு நிகழ்வு

முல்லைத்தீவு,ஜூலை 26
முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் அமைந்துள்ள கதிர் கற்கை வளாக புதிய கட்டடத் திறப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.
சுவிஸ் புளியங்கூடல் மாணவர் வளாகம் மற்றும், சுவிஸ் றொமான்சோன் வாழ் அதன் நண்பர்களின் அனுசரணையில் அமைக்கப்பட்ட, புதிய கட்டடமே திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் ந.விஜயரட்ணம், சிவசிறீ கா.இரகுநாதக்குருக்கள், ஆசிரியர் ந.பரமேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி. லோகேஸ்வரன், உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-222)

# முறையான அழைப்பு வராததால் போகவில்லை

## கன்னியா விடயம் தொடர்பாக சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 26



அமைச்சர் மனோகணேசனின் ஏற்பாட்டில் கன்னியாவெந்நீரூற்று விவகாரம் தொடர்பில் அரசதலைவருடன் கதைக்க எமக்கு முறைப்படியான அழைப்புக் கிடைக்கவில்லை என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அண்மையில் நடந்த நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வழமையாக அரசதலைவருடனான சந்திப்புக்கள் அவருடைய செயலர்கள் அல்லது உதவியாளர்களால் முறைப்படி அறிவிக்கப்படும். எந்தச் சந்திப்புக்களையும் நாம் ஒதுக்கி விடவில்லை. இப்படி ஒரு சந்திப்பு இருக்குமென்பது காலை வரை தெரியாது. காலையில் அலைபேசியைச் சீர்செய்த போது முதல்நாள் இரவு ஒரு தகவல் வந்திருந்தது தெரிந்தது. தொடர்பாடலில் ஏற்பட்ட தவறே நாம் அரசதலைவருடனான சந்திப்பில் கலந்து கொள்ளாமைக்குக் காரணம்.

**வேட்பாளர் தெரிவுகள்**

அரசதலைவர் தேர்தலில் யார் போட்டியிடப் போகிறார்கள் என்பதற்கான சீரான தகவல்கள் இதுவரை இல்லை. மொட்டுக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றாக கேட்கப் போகின்றார்களா அல்லது தனித்தனியாகக் கேட்கப் போகின்றார்களா என்பது ஒரு விடயம். ஐக்கிய தேசியக் கட்சியில் யார் கேட்கப் போகின்றார்கள்? ஜே.வி.பியும் கேட்கிறதா இல்லையா என்ற ஒரு விடயமும் இருக்கிறது. முஸ்லிம் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து கேட்பதாகவும் ஒரு தகவல் உண்டு. ஆகவே யார் கேட்கப் போகின்றார்கள் என்ற தீர்மானம் வரும்வரை எதனையும் சொல்லிவிட முடியாது. இவர்கள் எப்படிச் செயற்படப் போகின்றார்கள் என்பதை வைத்துத் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தீர்மானங்களை எடுக்கும்.

**போதை ஒழிப்பின் உண்மையை அறியவேண்டும்**

அரசதலைவர் கொண்டுவந்த போதை ஒழிப்பு நல்லதொரு விடயம். போதை ஒழிப்புக் குற்றத்துக்கு உள்ளானவர்கள் உண்மையிலேயே அவ்வளவு போதைப் பொருள்களையும் தமது கைகளில் வைத்திருக்கும் போது பிடிபட்டார்களா இல்லையா என்பது சந்தேகத்துக்குரியது. ஏனெனில் கடந்த காலத்தில் எந்தவித குற்றமும் செய்யாது பிடிபட்ட பல தமிழர்கள் மீது சோடிக்கப்பட்ட வழக்குகள் மூலம் இன்றும் குற்றங்களிலே சிக்க வைக்கப்பட்டுள்ளார்கள். அதனால் அரசியல் கைதி களாக விடுதலையின்றி இருக்கிறார்கள்.

**தூக்குத் தண்டனை நடைமுறைக்கு வரவேண்டும்**

மக்களுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தி இனிவரும் காலங்களில் போதைப் பொருள் வைத்திருந்து கைது செய்யப்பட்டு பொலிசில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படும் என்று தெளிவுபடுத்தி அதனை நடைமுறைப் படுத்தலாம் என்று தெரிவித்தார். (து)

# லக்ஸ்மன் கதிர்காமர் கொலை: ஜேர்மனியில் குற்றச்சாட்டு பதிவு

கொழும்பு, ஜூலை 26

**இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த லக்ஸ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக ஜேர்மனியில் கைது செய்யப்பட்ட புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினருக்கு எதிராக ஜேர்மனியில் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்ட ஜி.நவனீதன் (வயது - 40) என்பவருக்கு எதிராகவே இவ்வாறு குற்றச்சாட்டுப் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் 2002 முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையில் கடமையாற்றியுள்ளதுடன், லக்ஸ்மன் கதிர்காமரைக் கொலை செய்வதற்கான தவல்களை வழங்கினார் என்று தெரிவித்தே ஜேர்மனியில் அவருக்கு எதிராக இந்தக் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த லக்ஸ்மன் கதிர்காமர் 2005 ஓகஸ்ட் 13ஆம் திகதி கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். (எ)

## டிரக் விபத்தில் 11 சிப்பாய்கள் காயம்

கொழும்பு, ஜூலை 26

அம்பாந்தோட்டை சூரியவெள பகுதியில் இராணுவத்தின் ட்ரக் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 11 இராணுவத்தினர் காயமடைந்து சூரியவெவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சூரியவெவ ரன்முத்துவெவ கமநல சேவைகள் மத்திய நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் அநுராதபுரம் சாலியபுர இராணுவ முகாமிற்குச் சொந்தமான ட்ரக் ஒன்று சாரதியின் கட்டுபாட்டையிழந்து விபத்தில் சிக்கியது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

ட்ரக் வாகனத்தில் சாரதி உட்பட 14 இராணுவத்தினர் பயணித்துள்ள நிலையில் 11 இராணுவத்தினர் காயமடைந்து சூரியவெவ மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பான லேதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பயங்கரவாதத்தை தடுக்க உடனடியாகக் கட்டமைப்பு

நாட்டின் மக்கள் பயங்கரவாதிகளாவதைத் தடுக்கும் நோக்காகக் கொண்டும் எதிர்காலத்தில் பயங்கரவாதக் குழுக்கள் உருவாகுவதைத் தடுப்பதற்காகவும் புதிய உடனடி நடவடிக்கையை அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையாகியுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதம் ஊக்குவிக்கப்படுவதைத் தடுத்தல் மற்றும் பெயரிடப்படும் வெளிநாட்டில் இருந்து பயங்கரவாதத்துக்குத் துணைபோதல் ஆதரவளித்தல் மற்றும் உயிரியல் செய்திகளின் தரவுகளைக் கட்டுப்படுத்தல்போன்றதுறைதொடர்பில் கவனம் செலுத்தித் தலைமை அமைச்சரால் அமைச்சரவைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பேச்சுநடத்தியபின்னர் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளில் இது தொடர்பாக உள்ள சட்டங்கள் குறித்து மதிப்பீடு செய்து அமைச்சரவைக்கு விடயங்களை சமர்ப்பிப்பதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தலைமையிலான அமைச்சரவைத் துணைக்குழுவொன்றை நியமிப்பதற்காக அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# அபிவிருத்தி மாயைக்குள் கூட்டமைப்பு சிக்கிவிட்டது

## *பிரபா கணேசன் இப்படிக் கூறுகிறார்*

வவுனியா, ஜூலை 26

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கிராம எழுச்சித் திட்டத்தைப் பெற்றுக் கொண்டு எமது மக்களுக்கான அரசியல் அமைப்பு மாற்றத்தையும் அரசியல் தீர்வையும் பெற்றுக் கொடுக்காமல் வெறும் அபிவிருத்தி மாயைக்குள் சிக்கிக் கொண்டுள்ளார்கள். இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சரும், ஜனநாயக மக்கள் காங்கிரசின் தலைவருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி அரசை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மூன்று முறை காப்பாற்றியிருக்கிறார்கள். இந்த மூன்று முறையும் ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் காப்பாற்றியதன் ஊடாக 2015 ஆம் ஆண்டு அவர்கள் எமது மக்களுக்கு வழங்கிய அரசமைப்பு மாற்றம், கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வு, வடக்கு - கிழக்கு இணைப்பு, காணாமல் போனவர்களுக்குத் தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவிடயங்களை நிறைவேற்றியிருப்பார்களேயானால் அவர்களின் அரசியலைப் பாராட்டலாம். மாறாக இந்த மூன்று முறை ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் காப்பாற்றிவிட்டு இப்பொழுது இன்னும் 6 மாதங்களில் பொதுத் தேர்தல் நெருங்கும் நிலையில் கிராம எழுச்சித் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் 200 மில்லியன் நிதி வேலைத் திட்டங்களுக்காகப் பெற்றுள்ளார்கள்.

**கிராம எழுச்சித் திட்ட வீதிச் சீரமைப்புக்கள் மோசம்**

கிராம எழுச்சித் திட்டத்தின் ஊடாக மோசமான முறையில் பாதைகள் சீரமைக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல பல கையூட்டு மற்றும் ஊழல்கள் இடம்பெறுகின்றன என்றும் அறியக் கூடியதாக இருக்கிறது.

அபிவிருத்தியும், உரிமைப் போராட்டமும் தண்டவாளத்தைப் போன்று இரண்டும் சமச்சீராகச் செல்ல வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அபிவிருத்தி தேவையில்லை. உரிமை தான் தேவை என்ற பாதையில் சென்று கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தடம்புரண்டு வெறும் அபிவிருத்தி மாயைக்குள் சிக்கிக் கொண்டு அடுத்த தேர்தலில் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கான வேலைகளைப் பார்க்கின்றனர். இதன் மூலம் அவர்கள் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களுக்கு குறிப்பாக வன்னி மாவட்டத் தமிழ் மக்களுக்குப் பெரும் துரோகம் செய்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது - என்றார். (து)

## மதூஷின் சகா கைது

கொழும்பு, ஜூலை 26

மாக்கந்துரே மதூஷ் மற்றும் கஞ்சிப்பான இம்ரான் ஆகியோரின் நெருங்கிய சகா ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அழுத்கம அருணலு பகுதியில் கொழும்பு குற்றப்பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

தர்காநகரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய லந்துவாஹந்தி சஞ்சீவ புஸ்பகுமார என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். திட்டமிட்ட குற்றங்களைச் செய்து வந்த சந்தேக நபர்களான மாக்கந்துரே மதூஷ் மற்றும் அவரது சகாவான கஞ்சிப்பானை இம்ரான் ஆகியோருடன் தொடர்பினைப்பேணியது மட்டுமன்றி அவர்களின் குற்றச் செயல்களிலும் சந்தேக நபர் தொடர்பு கொண்டிருந்துள்ளார்.

அதேவேளை தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களால் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்ட கொலைகளுக்கும் இவர் உதவிகள் வழங்கியுள்ளதாகவும், அவர்களுடன் இணைந்து சதித் திட்டம் தீட்டியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றப் பிரிவினர் மேற்கொண்டு

# பிரச்சினைகள் இருப்பின் மைத்திரியுடன் பேசுங்கள்

## *பேராயரை அழைக்கின்றார் தயாசிறி ஜயசேகர*

கொழும்பு, ஜூலை 26

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கத்தோலிக்க மக்களுக்கு எதிராக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை தாக்குதல் குறித்து மிகவும் வேதனைப்படுகின்றோம். சம்பவத்தின் பின்னர் நாட்டின் தலைவர் என்ற வகையில் அரச தலைவர் செய்யக் கூடிய அனைத்து விடயங்களை யும் செய்துள்ளார். ஆனால் பேராயர் வேதனைப்பட்டுகண்ணீர்விடும் அளவிற்கு விடயங்கள் காணப்படுவதாயின் அரச தலைவரைச்சந்தித்துபேசித் தீர்வு காண்பதே சிறந்தது. இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் அண்மையில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற பின்னர் அரச தலைவர், நாட்டின் தலைவர் என்ற வகையில் செய்ய கூடிய அனைத்து விடயங்களையும் செய்துள்ளார். புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்தி அனைவரையும் கைது செய்து பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளார். இன்னும் கைதுகள் இடம்பெறுகின்றன . மூன்று மாதத்தில் மறு படியும் எவ்விதமான சம்பவமும் இடம்பெறவில்லை.

வேறு பிரச்சினைகள் இருந்தாலும் அரச தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாட முடியும். கத்தோலிக்க மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து வேதனையடைகின்றோம். வத்திகானுக்குச் சென்ற பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கண்ணீர் விட்டழுதார். அவர் வேதனைப்படுகின்ற அளவிற்கு விடயங்கள் இருக்கின்றன.

அவரை நாங்கள் கௌரவத்துடன் மதிக்கின்றோம். எனவே அரச தலைவரைச் சந்தித்துப் பேச வேண்டும் என்றே கூறுகின்றோம்- என்றார். (எ)

# கழிவுக் கொள்கலன்களை திருப்பி அனுப்புமாறு மைத்திரி உத்தரவு

கொழும்பு, ஜூலை 26

பிரிட்டனில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ள கழிவுகள் அடங்கிய 130 கொள்கலன்களையும் திருப்பி அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சுற்றாடல் அமைச்சர் என்ற வகையில் அரச தலைவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறிஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி இதன்போது பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பிரிட்டனில் இருந்து 2017ஆம் ஆண்டில் இருந்து 2487 மெற்றிக்தொன் கழிவுகள் 12 தடவைகளில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இவை 130 கொள்கலன்களில் அடைக்கப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், அதனைக் கொண்டு வந்தோர் தொடர்பாக இதுவரை சரியான தகவல்கள் வெளியிடப்படவில்லை. 2013.07.11 ஆம் திகதி நிதியமைச்சால் வெளியிடப்பட்ட அரசிதழுக்கு இணங்க நாட்டுக்குள் எதனையும் கொண்டுவரலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த அரசிதழில் அப்போதைய நிதியமைச்சரான மகிந்த ராஜபக்சவே கையொப்பமிட்டுள்ளார். இது நாட்டின் கைத்தொழில் துறையை பாதிப்படையச் செய்வதுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கும் வழிவகுத்துள்ளது. என்றார். (எ)

# சாய்ந்தமருது வெடிப் பொருள்கள்; தகவல் வழங்கியவருக்கு 50 லட்சம்



யாழ்ப்பாணம், ஜூலை 26

சாய்ந்தமருது பிரதேசத்தில் கைப்பற்றப்பட்ட வெடிப் பொருள்கள் தொடர்பில் தகவல் வழங்கியவருக்கு அரச தலைவரால் 50 லட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

அரச தலைவர் செயலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலின் பின்னர் அம்பாறை சாய்ந்தமருது பிரதேசத்தில் கைப்பற்றப்பட்ட வெடிப் பொருள்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய வாகன சாரதி ஒருவருக்கே இந்த நிதி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பதில் கடமை பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவும் நிகழ்வில் பங்குபற்றினார் என்று அரச தலைவர் ஊடகம் தெரிவித்துள்ளது. (ஐ-7)

# சுதந்திர நுழைவிசைவு வழங்குவதற்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 26

இலங்கைக்குவருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கான சுதந்திர (ஒன் அரைவல் விசா) நுழைவிசைவு வழங்கும் நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தாய்லாந்து, பிரித்தானியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான சுற்றுலா நுழைவிசைவு வழங்கும் உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையால் முன்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களால் ஏற்பட்ட பாதுகாப்பு நிலைமையைக் கவனத்தில் கொண்டு சுதந்திர அடிப்படையில் நுழைவிசைவு வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது.

நாட்டின் நிலமை வழமைக்குத் திரும்பியுள்ளதால் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் மேற்கத்தேய நாடுகள் உள்ளிட்ட டென்மார்க், சுவிட்ஸர்லாந்து, நோர்வே, பின்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வருகை தருவோருக்கு சுதந்திர சுற்றுலா நுழைவிசைவை வழங்கும் உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சுற்றுலா அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# சிறப்பான கொள்கைகளை கொண்டோருக்கே ஆதரவு!

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

எந்த ராஜபக்ச அரச தலைவர் வேட்பாளர் என்பது முக்கியமல்ல. நாட்டின் எதிர்கால நலன் கருதி யார் சிறந்த கொள்கைத் திட்டங்களுடன் தேர்தலில் போட்டியிடுகின்றார்களோ அவர்களுக்கே ஆதரவளிக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் நாட்டிற்கானசிறந்தவேலைத் திட்டங்களுடன் எமது வேட்பாளரை அறிவிப்போம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை நீக்க வேண்டும். இந்த முறைமை தொடருமேயானால் இனிவரும் காலங்களில் யார் அரச தலைவரானாலும், தலைமை அமைச்சருக்கும் அவருக்கும் இடையில் எப்போதும் முரண்பாடுகள் ஏற்படும். - என்றார். (எ)

# கன்னியாவில் அநீதி இழைத்திருந்தால் பொலிஸ் அதிகாரி மீதும் நடவடிக்கை!

## மகிந்த அமரவீர கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 26

கன்னியா வெந்நீரூற்று பகுதியில் பொலிஸாரால் தவறு செய்யப்பட்டிருந்தால் அதுதொடர்பில் அரச தலைவருக்குத் தெரியப்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். பிரபாகரன் மேற்கொண்ட அழிவுகளை இந்த பிரச்சினையுடன் சமப்படுத்த முடியாது.

இவ்வாறு எதிர்க்கட்சிகளின் பிரதமகொறடா மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கம்பெனிகள் திருத்தச் சட்டமூல மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கன்னியா வெந்நீரூற்று பகுதியில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் சம்பவத்தில் பொலிஸாரால் யாருக்காவது அநீதி ஏற்பட்டிருந்தால் அதுதொடர்பில் விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் அரச தலைவருக்கு இது தொடர்பில் அறிவுறுத்துவேன்.

அரசியல் வாதிகள் இதில் தலையிட்டதாலேயே இந்த பிரச்சினை உக்கிரமடைந்தது. முக்கியமாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு இதில் தலையிட்டமை பொருத்தமற்றது. ஒருபக்க சார்பாக செயற்பட்டதால்தான் மற்ற தரப்பு சந்தேகப்பட்டு பிரச்சினை ஏற்பட்டது என்கிறார்.

இதன்போது ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், தமிழ் தேசிய கூட்டமைப்பு யாரும் அதில் தலையிடவில்லை. மாறாக பௌத்த துறவிகள் சிலரே அங்கு வந்து இல்லாத பிரச்சினையை நிலைநாட்ட முயற்சித்தார்கள் - என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மகிந்த அமரவீர, பொலிஸாரால் தவறு ஏற்பட்டிருந்தால் அதுதொடர்பில் அரச தலைவருக்குத் தெரியப்படுத்தி அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். பிரபாகரன் இருந்தால் இவ்வாறான விடயங்கள் இருந்திருக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்திருந்தார். ஆனால் பிரபாகரன் இருந்த காலத்தில் இதை விடப் பெரிய விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. பிரபாகரன் செய்த அழிவுகளை இத னுடன் சம்பந்தப்படுத்த முடியாது.- என்றார். (எ)

# பல்கலைக் கழகச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய அனுமதி

கொழும்பு, ஜூலை 26

மட்டக்களப்பு பல்லைக்கழக வளாகம் தொடர்பான சர்ச்சையையடுத்து தனியார் பல்கலைக்கழகங்களை ஒழுங்குப்படுத்துவதற்காக பல்கலைக்கழகச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க 1978ஆம் ஆண்டு பல்கலைக்கழக திருத்தச்சட்டத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். இந்தச் சட்டத்தின் முன்மொழியப்பட்ட திருத்தத்தின்படி, ஒவ்வொரு பட்டப்படிப்பு வழங்கும் பல்கலைக்கழகங்கள் இனம், மதம், பாலினம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது தகுதியை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அதன் வருடாந்த கணக்குகளையும், பெறப்பட்ட அனைத்து நன்கொடைகளையும் அறிக்கையிட்டு வெளிப்படுத்த வேண்டும்.

மட்டக்களப்பு பல்கலைக்கழக வளாகம் 100 மில்லியன் அமெரிக்க டொலரை சவுதி அரேபியாவிலுள்ள சட்டவிரோத அமைப்பொன்றிடமிருந்து பெறப்பட்டமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (எ)

# ‘சைட்டம்’ மருத்துவமனை இன்னும் அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை

## கணக்கியல் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

மாலபே நெவில் பெர்ணான்டோ மருத்துவமனை இதுவரையில் அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை எனச் சுகாதார அமைச்சின் நிதி மற்றும் கணக்கியல் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த சுவர்ண திலக தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கிய அவர், 2019 ஆம் ஆண்டில் இதுவரையில் இந்த மருத்துவமனையின் நடவடிக்கைகளுக்காக 182 மில்லியன் ரூபா அரசால் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான அரச தலைவர் ஆணைக்குழுவில், நெவில் பெர்ணான்டோ மருத்துவமனைக்காக அரசால் செலவிடப்பட்ட பணம் தொடர்பில் நேற்றுமுன்தினம் விசாரணைகள் இடம்பெற்றன.

அதன்போது மருத்துவமனையின் நடவடிக்கைகளுக்காகவும் ஊழியர்கள் 39 பேரின் சம்பளத்துக்காகவும் பணம் செலவிடப்படுகின்றது என்று சுகாதார அமைச்சின் நிதி மற்றும் கணக்கியல் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (எ)

## போதையில் சாரத்தியம் 5,042பேர் கைது

கொழும்பு, ஜூலை 26
மதுபோதையில் வாகனம் செலுத்திய 201 சாரதிகள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மதுபோதையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்கான சிறப்பு நடவடிக்கை கடந்த 5ஆம் திகதி ஆரம்பமாகியது. அதன்படி குறித்த தினத்திலிருந்து இதுவரை மதுபோதையில் வாகனம் செலுத்திய 5 ஆயிரத்து 42 வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## புத்தர் சிலை உடைப்பு: சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 26
மாவனெல்லயில் புத்தர் சிலை உடைக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 15 சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த 15 சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மாவனெல்ல உள்ளிட்ட பிரதேசங்களில் ஒரே இரவில் நான்கு இடங்களில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்பில் 15 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்ப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ)

# உயிர்த்த ஞாயிறு தினத்தன்று 25 குண்டுகளை வெடிக்கத் திட்டம்

### குற்றப்புலனாய்வு பிரிவு பணிப்பாளர் தெரிவுக் குழு முன்னிலையில் சாட்சியம்

கொழும்பு, ஜூலை 26
உயிர்த்த ஞாயிறு தினத்தில் 25 தாக்குதல்களை நடத்த திட்டம் வகுக்கப்பட்டது. எனினும் புலனாய்வு தகவல்கள் மூலமாக அவை முறியடிக்கப்பட்டுள்ளன. தாஜ் சமுத்திரா ஹோட்டலில் குண்டுதாரியொருவர் 2, 3 தட்டவைகள் குண்டை வெடிக்க வைப்பதற்காக முயற்சிப்பது தொடர்பான பாதுகாப்புக் கமராப் பதிவுகள் இருக்கின்றன. அந்த குண்டு தொழில்நுட்ப கோளாறு காரணமாக வெடிக்காது போயிருக்கலாம். அதன்பின்னர் அந்த நபர் தெஹிவளையில் விடுதி அறைக்குள் அந்த கோளாறை பரிசோதிக்க முயற்சித்த போது அது வெடித்திருக்கலாம்.

இவ்வாறு குற்றப்புலனாய்வு பிரிவு பணிப்பாளர் ஷானி அபேசேகர நேற்று முன்தினம் நாடாளுமன்ற தெரிவுக் குழு முன் சாட்சியமளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஆராயும் சிறப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சாட்சியமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: சம்பவ தினத்தன்று தாஜ் சமுத்திரா விடுதியில் முக்கியமானவர்கள் யாரேனும் இருந்தனர் என்று நாங்கள் அறியவில்லை.

2018 டிசெம்பர் மாதத்தில் மாவனெல்லையில் புத்தர் சிலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக நாங்கள் விசாரணைகளை முன்னெடுத்து வந்தோம். இந்தச் சம்பவம் தொடர்பாக 2 பேர் தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்தன. இவர்கள் தொடர்பாக தேடிச் செல்லும்போது தொலைபேசி இலக்கங்களை அடிப்படையாக கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அந்த தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ் செய்தி ஒன்று வந்தது. அது சாஹீட் என்பவரால் அனுப்பப்பட்டிருந்தது. அவரின் விலாசத்தை தேடி சென்று அவரை கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 4பேரை கைதுசெய்ய முடிந்தது. பெருமளவு பொருள்களையும் மீட்டோம். 105 கிலோ வெடி பொருள்களும், வெடிக்க வைக்கும் கருவிகள் உள்ளிட்டவையும் மீட்கப்பட்டன. இவர்களிடம் விசாரணை நடத்தும் போது ஸஹ்ரான் என்பவர் அதில் தொடர்பு பட்டிருப்பது தெரியவந்தது.

ஸஹ்ரானை தேடி பல பிரதேசங்களில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தோம். அந்தப் பொருள்களை கொண்டு செல்ல உதவிய வாகனத்தையும் மீட்டோம். ஸஹ்ரான் தொடர்பாக பல இடங்களுக்குச் சென்று சாட்சியங்களை பதிவு செய்து வந்தோம். நாங்கள் அநேகமாக தொலைபேசி இலக்கங்களை அடிப்படையாக கொண்டு விசாரணை நடத்திய போதும் அவர்கள் 'தீரிமா' என்ற செயலியை பயன்படுத்தியதால் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாது இருந்தது. என்றாலும் இவர்கள் வெளிநாட்டுக்கு செல்ல முடியாதவாறு மாவனெல்லை நீதிமன்றத்தின் தடையுத்தரவையும் பெற்றுக்கொண்டோம்.

கைது செய்யப்பட்ட 4 பேரில் இருவரை அந்த சம்பவத்துடன் தொடர்பு இல்லாமையால் விடுவிக்க நடவடிக்கையெடுத்தோம். நன்றாகத் தேடிப் பார்த்தே அவர்களை விடுவிக்க நடவடிக்கையெடுத்தோம். அவர்களுக்கு தங்கள் விலாசத்தை மாற்ற முடியாது. ஒவ்வொரு மாதமும் குற்றப்புலனாய்வுப் பிரிவில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனைகளுடனேயே அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் இவ்வாறாக விடுவிக்கப்பட்டவர்களில் இருவரே சங்ரில்லா விடுதியில் குண்டை வெடிக்க வைத்தனர் என்று தெரிவிக்கின்றனர். ஆனால் அவர்கள் அல்ல. காரணம் அவர்கள் குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கையெழுத்திட்டுள்ளனர். கடந்த மாதங்களிலும் அவர்கள் கையெழுத்திட்டுள்ளனர். இந்த மாத இறுதியிலும் அவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கையெழுத்திடுவர். அவர்களுக்கு எதிராகப் போதுமான சாட்சிகள் இல்லாமையால் நிபந்தனைகளுடன்தான் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குண்டு வெடிப்புப் சம்பவத்துடன் தொடர்புடைய சகலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பாக 80வீதம் விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. ஸஹ்ரானின் குழுவில் பலர் உயிரிழந்துள்ளனர். மற்றையவர்கள் எங்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றனர். 69 பேர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைதாகியுள்ளனர். பல்வேறு திட்டங்களை அவர்கள் மேற் கொண்டிருந்தனர். ஆனால் வனாத்துவில்லு சம்பவத்தின் பின்னர் அவர்களின் திட்டங்கள் குழம்பியுள்ளன. இந்த அமைப்பின் ஸஹ்ரானின் குழுவினர் இறந்தனர். இன்னும் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுணதீவுக் கொலை சம்பவம் முழுமையாக புலிகளின் செயல் என்றே புலனாய்வு துறை உள்ளிட்ட சகல துறையினரும் கூறினார்கள். மாவனெல்லயில் துப்பாக்கிசூடு நடத்தியவர்களும் இவர்கள் என்பது பின்னர் கண்டறியப்பட்டது. வெளிநாட்டில் இருந்து கைது செய்யப்பட்ட நபர்கள் மூலமாக பல பொருள்கள் கைப்பற்றப்பட்டன. வெடிபொருள் உள்ளிட்ட ஆயுதங்கள் அதிகமானவை கண்டறியப்பட்டன. அவை கண்டறியப்படாதிருந்தால் 25 குண்டுகள் வெடித்திருக்கும். இரசாயான பகுப்பாய்வு மூலம் அவை அமோனியம் நைற்றேற்று என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யூரியாவுடன் நைற்றேற் கலக்கப்பட்டுள்ளது. அது இங்கேயே செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டவை அல்ல. நாங்கள் தாஜ் சமுத்திரா விடுதியின் பாதுகாப்புக் கமராக் காணொலிகளை பார்த்தோம். அதில் அந்த நபர் இரண்டு மூன்று தடவைகள் முயற்சிக்கின்றார். அது கட்டுப்பாட்டில் வெடிக்கவில்லை. பின்னர் அந்த குண்டுடன் பள்ளிக்கு செல்கின்றார். அதன்பின்னரே தெஹிவளை பகுதியில் அது வெடிக்கின்றது. தாஜ் சமுத்திரா விடுதியில் அது வெடிக்காது போனமைக்கு காரணங்கள் இருக்கலாம். அதாவது தொழில்நுட்ப ரீதியில் பிரச்சினைகள் ஏற்பட்டமையால் அது வெடிக்காது போயிருக்கலாம். அவர் தெஹிவளையில் ஹோட்டல் அறையில் அந்த கோளாறு தொடர்பாக ஆராய போகும் போதே அது வெடித்துள்ளது. ஆனால் கூறப்படுவதை போன்று தாஜ்சமுத்திரா விடுதியில் சிறப்புப் பிரமுகர்கள் இருந்ததாக தெரியாது. உண்மையில் என்ன நடந்தது என்பதனை ஆராய வேறு வழியில்லை. ஆனால் அவர் வெடிக்க வைக்க முயற்சித்தமை காணொலியில் உறுதியாகியுள்ளது.

இந்த விடயத்தில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பாக எங்கள் மீது சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். எங்களுக்கு மருத்துவ விடயங்கள் தொடர்பாக தெரியாது. எவ்வாறாயினும் 143 முறைப்பாடுகளிலேயே பிள்ளைகள் இல்லையென தெரிவித்துள்ளனர். ஆனபோதும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆராயாது எங்களால் ஒன்றும் செய்ய முடியாது- என்றார். (எ)

## ரூ.50 கொடுப்பனவை வலியுறுத்தி ஹட்டனில் நேற்றுமுன்தினம் போராட்டம்

கொழும்பு, ஜூலை 26
பெருந்தோட்டத் தொழிலாளர்களது நாளாந்த வேதனத்துடன் 50 ரூபா மேலதிகக் கொடுப்பனவை இணைக்குமாறு வலியுறுத்தி ஹட்டனில் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது. ஹட்டன் நகரில் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக பிற்பகல் 3 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது.



இந்த போராட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்கள், பொது மக்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அழுத்தத்துக்கு அமைவாக, 50 ரூபா நாளாந்த கொடுப்பனவை வழங்குவதற்கு அரசு இணங்கியுதுடன், அதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைத்திருந்தது. ஆனால் இந்த விடயத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தடையாக இருப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம)

## வவுனியாவை விட்டுச் செல்ல அங்குள்ள ஏதிலிகள் விருப்பம்

### 20 ஏதிலிகள் நீர்கொழும்பு திரும்பினர்

வவுனியா, ஜூலை 26
வவுனியாவில் தங்க வைக்கப்பட்டுள்ள ஏதிலிகளில் சிலர் அங்கிருந்து வெளியேறுவதற்கு விரும்பம் தெரிவித்துள்ளனர் என்று வவுனியா பூந்தோட்டம் மறுவாழ்வு நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு ஏதிலிகளில் ஒரு தொகுதியினரே அங்கிருந்து நீர்கொழும்புக்குத் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து வெளிநாடுகளில் இருந்து ஏதிலிகளாக இலங்கையில் தங்கியிருந்த முஸ்லிம் ஏதிலிகளை வடக்கு மாகாணத்துக்கு கொண்டு வந்து குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த நடவடிக்கைக்கு வடக்கிலிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது. எனினும் யாழ்ப்பாண சகவாழ்வுக்கான மக்கள் ஒன்றியமும், மற்றும் சில பொது அமைப்புகளும் இணைந்து முயற்சியைத் தொடர்ந்தனர். அதனடிப்படையில் வவுனியா பூந்தோட்டம் மறுவாழ்வு நிலையத்தில் 113 பேர் தங்கவைக்கப்பட்டனர். அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஏதிலிகளைச் சென்று சந்திப்பதற்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு கடும் பாதுகாப்பிற்குள் இருந்த ஏதிலிகளில் 20பேர் தமது சுயவிருப்பின் காரமணாக அண்மையில் நீர்கொழும்புக்குத் திரும்பியிருந்தனர். தற்போது மீண்டும் 15 பேர் நீர்கொழும்பிற்கு தமது சுயவிருப்பில் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று பூந்தோட்டம் மறுவாழ்வு நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (எ-21)

# மாணவர் ஆலோசனைக்கான ஆசிரியரை இணைக்க ஏற்பாடு

*கொழும்பு, ஜூலை 26*

*இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின்படி ஆசிரியர் சேவையின் 3-1 (அ) வகுப்புக்காக மாணவர் ஆலோசனைக்கான ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.*

கல்வி அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயேஇந்தவிடயம்குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் உள்ளதாவது:

மாணவர் ஆலோசனைசைய பாடசாலை மட்டத்தில் செயற்திறனுடன் முன்னெடுத்து செல்வதற்கான காலத்தின் தேவையை அறிந்து அதற்காக கல்வி கட்டமைப்பில் சிறப்புத் தகைமையுடன் கூடிய பட்டதாரிகளில் புதிய ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கு தேவையான ஒழுங்கு விதிகளை செய்யுமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் ,கல்வி அமைச்சின் செயலருக்கு வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் , கடந்த வருடம் நவம்பர் 25 ஆம் திகதியன்று அதற்கான போட்டி பரீட்சை நடத்தப்பட்டது.

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைவாக இந்த ஆசிரியர் இணைப்பு இடம்பெறவுள்ளது. எனினும் மாகாண பாடசாலைகளுக்கானமாணவர்ஆலோசனை ஆசிரியர் நியமனத்திற்கு சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்கள் மாத்திரமே உடன்பட்டுள்ளன.

அதன்படி தேசிய பாடசாலைகளில் 232 வெற்றிடங்களும் (சிங்கள மொழி 184 மற்றும் தமிழ் மொழி 48) வட மேல் மாகாண பாடசாலைகளில் 341 வெற்றிடங்களும் (சிங்கள மொழி 274 மற்றும் தமிழ் மொழி 67) சப்ரகமுவ மாகாண பாடசாலைகளில் 235 வெற்றிடங்களும் (சிங்கள மொழி 182 மற்றும்தமிழ் மொழி53)உள்ளன. குறித்த வெற்றிடங்களுக்காக மாணவர் 'ஆலோசனை ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்த நியமனத்துக்கான நேர்முக பரீட்சை 2019.05.31 முதல் 2019.06.10 ஆம் திகதி வரை கல்வி அமைச்சில் நடத்தப்பட்டது. எழுத்து மூல பரீட்சை மற்றும் செயற்பாட்டு பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில் எடுத்துக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் திறமைகள் உடையோர் குறித்த நியமனத்திற்காக இணைத்துக்கொள்ளப்படுவர். என்றுள்ளது. (எ)

## பதில் செயலருக்கு எதிராக தெரிவுக்குழு அமையுங்கள்

*ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றில் வலியுறுத்து*

கொழும்பு, ஜூலை 26

ஐக்கிய நாடுகளின் சிறப்புத் தூதுவரை சந்தித்து நீதிமன்றில் இடம்பெற்றுவரும் வழக்கு விசாரணை தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் என்று தெரிவித்து அயலுறவுத்துறை அமைச்சின் மேலதிக பதில் செயலரால் சட்டமா அதிபர், கொழும்பு மேல்நீதிமன்ற நீதியரசர் மற்றும் நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைத்து விசாரணை நடத்தவேண்டும் என்று ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டாகச் சபாநாயகரை கேட்டுக்கொண்டனர்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது சபாநாயகரின் அறிவிப்பு செய்யும்போது,

"ஐக்கிய நாடுகளின் விசேட தூதுவர் கிரமட் நயனல்வோசியை சந்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அயலுறவுத்துறை அமைச்சின் மேலதிக பதில் செயலர் அஹமத் ஏ.ஜவாட்டால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் தினேஷ் குணவர்த்தன மற்றும் சிலர் தெரிவித்த விடயம் தொடர்பாக நான் தேடிப்பார்த்த போது, அந்த விடயம் உண்மை என்பது தெரிய வந்தது.

அதையடுத்து அயலுறவுத்துறை அமைச்சின் செயலர் மற்றும் நீதிமற்றும் சிறைச்சாலைகள் அமைச்சரை அறிவுறுத்தி இந்த சந்திப்பு இடம்பெறாமல் தடுக்க நட வடிக்கை எடுத்தேன்.

நீதிமன்ற சுயாதீனத்தன்மையை பாதுகாக்கும்வகையில் எதிர்காலத்திலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம். அயலுறவுத்துறை அமைச்சின் செயலர் என்னைச் சந்தித்து இதுதொடர்பாகதெரிவித்தார். அதேபோல் முதன்மை நீதியரசர்கள் வெளிநாட்டு தூதுவர்களுடன் சிநேகபூர்வ சந்திப்புக்களை மேற்கொள்வது கடந்த காலங்களிலும் இடம்பெற்றிருக்கின்றது.

இதுதொடர்பாக நீதி அமைச்சர், நீதி அமைச்சின் செயலர் மற்றும் அயலுறவுத்துறை அமைச்சின் செயலர் ஆகியோர் இன்று (நேற்றுமுன்தினம்) என்னை சந்தித்து தெளிவுபடுத்தினர். இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினேன்"-என்றார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, "நீதிமன்ற சுயாதீனத்தை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுத்தமைக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கின்றோம். **அயலுறவுத்துறை செயலரினால் அனுப்பப்பட்ட கடிதம் பாரதூரமானது என்பதால்** தான் உடனடியாக செயற்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நீதித்துறை யின் சுயாதீனத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளதாக அயலுறவுத்துறை செயலர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

அவரின் இந்த தவறுக்கு மன்னிப்புவழங்கிஇதனைமுடித்து விடமுடியாது. அதனால் அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று கொண்டுவந்து விசாரணை நடத்த அனுமதி வழங்க வேண்டும். அல்லது தவறு செய்த செயலரை வேறு திணைக்களம் ஒன்றுக்கு இடம் மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்" - என்றார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அஜித் பி பெரேரா, இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் உடனடியாக தலையிட்டு தீர்த்து வைத்தமைக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கின்றோம். கடந்த காலங்களில் நாடாளுமன்றத்துக்கு தலைமை வகித்தவர்கள் ரப்பர் சீலாக மாத்திரமே செயற்பட்டு வந்துள்ளனர். விசாரிக்கப்பட்டு வரும் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் இவ்வாறான கலந்துரையாடல்கள் மேற்கொள்வதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இது உயர் அதிகாரிகள் தான்தோன்றித்தனமாக எடுக்கும் தீர்மானங்களாகும். இது அரச கொள்கையல்ல. அதனால் எதிர்காலத்திலும் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறாமல் தடுக்க நீண்டகால நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான மகிந்த அமரவீர அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தார்.

"இந்த விடயத்தை சாதாரண விடயமாக கருதமுடியாது. சுயாதீன நீதிமன்றமொன்றை நடத்திச்செல்லுமாறு தெரிவிப்பதும் இவர்களாகும். அத்துடன் அயலுறவுத்துறை அமைச்சின் மேலதிக செயலாளருக்கு இவ்வாறு அறிவிப்பொன்றை செய்வதற்கு யார் அதிகாரம் வழங்கியது என்பதை தேடிப்பார்க்க வேண்டும்.

அதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைத்து இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்"- என்றார்.

சபாநாயகர் கருஜயசூரிய பதிலளிக்கையில், "இது தொடர்பாக அயலுறவுத்துறை செயலர் மற்றும் நீதி அமைச்சின் செயலருக்கு தெரிவித்த ஆலோசனையின் பிரகாரம் எந்த நீதிபதியும் ஐக்கிய நாடுகளின் சிறப்புத் தூதுவரை சந்திக்கவில்லை என்பதை பொறுப்புடன் தெரிவிக்கின்றேன். இதுதொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைத்து விசாரணை நடத்துவது தொடர்பாக கட்சி தலைவர் கூட்டத்தின்போது தீர்மானித்துக் கொள்ளலாம்" - என்றார். (எ)

## அயலுறவுத்துறை அமைச்சின் மீதான குற்றச்சாட்டை நிராகரித்த மாரப்பன

கொழும்பு, ஜூலை 26

சுதந்திரமாக ஒன்று கூடுவதற்கான உரிமைகள் தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளரை தலைமை நீதியரசர் உள்ளிட்ட நீதிபதிகள் குழு சந்திக்க ஏற்பாடாகியிருந்தமை தொடர்பாக நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட வினாக்கள் தொடர்பாக அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெளிவுபடுத்தியுள்ளார்.

அயலுறவுத்துறை அமைச்சர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர்களால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. அந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஐ.நா. சிறப்பு அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் வருகைகளின் ஒரு பகுதியாக, சிறப்புச் அறிக்கையாளரின் வருகையும் இலங்கை அரசின் அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மாதிரியான வருகைகளை வரவேற்கும் நோக்கம், ஐ.நா. உள்ளடங்கலான பன்னாட்டு சமூகத்துடன் இலங்கை வெளிப்படையான உறவுகளை பேணுவதற்காகவே ஆகும்.

ஒரு சிறப்பு அறிக்கையாளர் இலங்கைக்கு வருவது இது முதல் தடவையல்ல, 8 ஜனவரி 2015 இலிருந்து இது மாதிரியான 8 பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறப்பு அறிக்கையாளரின் வருகை தொடர்பாக, நீதி அமைச்சின் செயலருக்கு வெளிநாட்டு அமைச்சால் அனுப்பப்பட்ட கடிதத்தில்உள்ள பிரச்சினைகள் ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் தொடர்பாகப் பொலிஸ் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதி கள் கோடிட்டுக் காட்டினர்.

இந்தப் பின்னணியிலேயே, அயலுறவுத்துறை அமைச்சின் பதில் செயலர், நீதி அமைச்சின் செயலர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு இந்த சந்திப்பு தொடர்பாக குறிப்பி ட் டார். இதன் நோக்கம், குறிப்பிட்ட சந்திப்பில் சிறப்புச் செய்தியாளர் பிரச்சினைகளை எழுப்பக்கூடிய விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு எச்சரிக்கை விடுப்பதாகும்.

தலைமை நீதிபதி மற்றும் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதிகளுடனான சந்திப்புக்கான முன்பதிவுகள் வழங்கப்பட வேண்டுமென்பது, அயலுறவுத்துறை அமைச்சின் பதில் செயலரின் கடிதத்தில் எந்த இடத்திலும் பரிந்துரைக்கப்படவில்லை.

அதேபோலவே, அயலுறவுத்துறை அமைச்சின் கடிதத்தில் எவ்வாறான விடயங்கள் பற்றிக் கலந்தாலோசிக்கப்படும் என்பதும் குறிப்பிடப்படவில்லை, ஆனால், சில வழக்கு விசாரணைகள் பற்றிக் கலந்தாலோசிக்கப்படக்கூடும் என்றே சம்பந்தப்பட்ட அமைச்சுகள் எச்சரிக்கப்பட்டிருந்தன - என்றுள்ளது.

அதேவேளை, இந்தச் சந்திப்பின்போது தற்போது மேல் நீதிமன்ற வழக்கு விசாரணையில் இருந்துவரும் ரொஷான் சானக கொலை வழக்கு, வெலிக்கடை சிறைச்சாலை கலவரம் மற்றும் ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூட்டு வழக்கு போன்றவை தொடர்பான விவரங்களை முதன்மை நீதியரசர் மற்றும் நீதிபதிகளிடம் இருந்து சிறப்பு அறிக்கையாளர் பெற்றுக்கொள்ள முயலக்கூடும் எனச்செய்திகள் வெளியாகியிருந்தன. (எ)

## பதில் செயலரை பதவிநீக்கப் பணிப்பு

கொழும்பு, ஜூலை 26

தலைமை நீதியரசர் மற்றும் மேல்நீதிமன்ற நீதிபதிகளை, ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் சந்திப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு நீதியமைச்சின் செயலருக்கு அறிவுறுத்தலை அனுப்பிய அயலுறவுத்துறைஅமைச்சின் பதில் செயலர் அகமட் ஜவாட்டை பதவியில் இருந்து நீக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்கிழமை மாலை, சுதந்திரமாக ஒன்று கூடுவதற்கான உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ற் நயாலெட்சோசி வூல், **இலங்கை நீதிபதிகளைச் சந்திக்கவிருந்த நிலையில், அதனை தடுக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் எதிர்க்கட்சியினர்** கோரினர். அதற்கமைய, அந்தச் சந்திப்பை நிறுத்துவதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்தநிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அயலுறவுத்துறை செயலர் ரவிநாத ஆரியசிங்கவுக்கு பிறப்பித்துள்ள உத்தரவில், அயலுறவுத்துறை செயலர் பதில் செயலராகவும், மேலதிக செயலராகவும் உள்ள அகமட் ஜவாட்டை அந்தப் பதவியில் இருந்து நீக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை, சபாநாயகர் கரு ஜெயசூரியவும், அயலுறவுத்துறை மேலதிக செயலர் அகமட் ஜவாட்டை அழைத்து, எதிர்க்கட்சியினரின் கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார். (எ)

### ஒருங்கிணைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம்.ஜூலை 26

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிற்கான பிரதேசமட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

### பயிற்சிப் பட்டறை

கொடிகாமம், ஜூலை 26

யாழ்ப்பாணம், கைதடி நாவற்குழி அ. த.க பாடசாலை மாணவர்களுக்கான சுற்றாடல்சார் செயற்பாட்டு பயிற்சிப் பட்டறை அண்மையில் இடம்பெற்றது. அதிபர் எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ம.ரவீந்திரன் கலந்து கொண்டார். (ஐ-159)

### ஜோன்சனுக்கு ரணில் வாழ்த்து

கொழும்பு, ஜூலை 26

பிரிட்டனின்புதியதலைமை அமைச்சராகப் பதவி யேற்றுள்ள பொரிஸ் ஜோன்சனுக்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில், பிரிட்டனும் இலங்கையும் வரலாற்று சிறப்பு மிக்க உறவுகளை கொண்டுள்ளது.

பொரிஸ் ஜோன்சனின் தலைமையின் கீழ் இரு நாட்டின் உறவுகளை வலுப்படுத்த இலங்கை ஆர்வமாக இருக்கின்றது. பிரிட்டன் இலங்கைக்கு பல துறைகளில் ஒத்து ழைப்பு வழங்குகின்றது. ஒரு வலுவான பொருளாதாரப் பங்காளியாக இருந்து வருகிறது என்று குறிப்பிட் டுள்ளார். (எ)

## இனியும்...

புதிய அரசமைப்பை வழங்குவதாகக் கூறி மக்கள் ஆணையைப் பெற்ற இந்த அரசும் தமிழர்களை ஏமாற்றி தோல்வியடைந்த அரசாக ஆகிவிடக் கூடாதெனத் தெரிவித்து சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை இரா.சம்பந்தன் சபையில் நேற்று முன்வைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். பண்டா - செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்களை மேற்கோள் காட்டியும், இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளின் வரலாறுகளையும் சபையில் அவர் விவரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்தும் இன்னும் தமிழருக்கு ஓர் அரசியல் தீர்வு இல்லை. தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர். பன்னாட்டுச் சமூகம் ஒரு பார்வையாளராக மட்டும் இருந்துவிட முடியாது. பன்னாட்டுச் சமூகம் அரசியல், இராஜதந்திர, பொருளாதார ரீதியாக இலங்கை அரசுக்கு அழுத்தத்தை வழங்க வேண்டும்.

விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க உதவியது பன்னாட்டுச் சமூகம். இதனால் பாதிக்கப்பட்டது தமிழ் மக்களே. தமிழருக்குப் பாரதூரமான அநீதி இழைக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்திற்கு முன்னர் தமிழர்கள் பிரிவினையை விரும்பியிருக்கவில்லை. நாட்டைப் பல வழிகளில் பிரிப்பது நாட்டுக்கோ அல்லது தமிழருக்கோ நன்மையில்லை. அதுதான் சமஷ்டிக் கட்சியின் கொள்கை.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வே தமிழர்களின் விருப்பமாகும். நாடு சக்திமிக்க ஒன்றாக மாற வேண்டுமானால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

சமூக, கலாசார உரிமைகளைக் கொண்டுள்ள தமிழ் மக்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமையை உங்களால் மறுக்க முடியுமா? 1956ஆம் ஆண்டில் இருந்து வடக்கு, கிழக்கு மக்கள் மாற்றத்திற்கு வாக்களித்தனர். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. இந்த அரசு பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

சிங்கள - பௌத்த மயமாக்கல் வடக்கு கிழக்கில் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதால்தான் தமிழர் பிரச்சினை தீர்வு தாமதமாகின்றதா என்று தமிழ் மக்களும் நாங்களும் அச்சம் கொண்டுள்ளோம். இது சூட்சுமமாக முன்னெடுக்கப்படுகின்றது.

எல்.எல்.ஆர்.சி. அறிக்கையின் சிபாரிசுகளை நிறைவேற்றுங்கள். பன்னாட்டுச் சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசமைப்பை வைத்துக் கொண்டு நீங்கள் ஆட்சி செய்தால் அது தவறு. அப்படிச் செய்தால் நீங்கள் தோல்வியடைந்த அரசாக செல்லுபடியற்ற அரசாக ஆகிவிடுவீர்கள். எனவே, உச்சபட்ச அதிகாரப்பகிர்வு தமிழர்களுக்கு வழங்கப்படவேண்டும். எமது மக்களை நீங்கள் தொடர்ந்து ஏமாற்ற முடியாது' - என்றார். (ம-22)

## முழு...

தில் இதேபோன்று ஒரு மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் அமைக்கப்படவுள்ளது. மேல் மாகாணத்துக்கு அடுத்ததாக அதிகளவு நிதியை வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கி வருகின்றோம்.

நான் கொழும்பில் இருந்தாலும் வடக்கு- கிழக்கில் உள்ள மக்களுக்குத் தேவையான மருத்துவ, சுகாதார சேவைகளைச் செய்து வருகின்றேன். சுகாதாரமும் கல்வியும் எமது நாட்டில் முக்கியமானவை. அவற்றை வளர்த்தெடுப்பதற்கு நாம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றோம். ராகம பிரதேசத்தில் காணப்படும் மீள்வாழ்வு சிகிச்சை மையத்தை விட அதிநவீன உபகரணங்களுடன் இங்கு அமைக்கப்பட்ட சிகிச்சை பிரிவு சிறப்பாக உள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் அமைய வேண்டும் என்பதே எனது நோக்கம். மருத்துவத் துறையில் சிங்கப்பூர் சிறந்த நிலையில் உள்ளது. அதற்கு அவர்களின் அரசியல் நிலைமைகளும் காரணம். ஆனால் இங்கு அரசியல் நிலைமை அவ்வாறு இல்லை. வெகு விரைவில் 60 மில்லியன் யூரோ செலவில் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இன்னும் ஒருசில வருடங்களில் மருத்துவம் மற்றும் சுகாதார சேவைகளை முழுமையாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய இடமாக வடக்கு மாகாணம் இருக்கும்.

**சிங்கப்பூரில் பயிற்சி**

நாட்டில் உள்ள மீள்வாழ்வு சிகிச்சை வழங்கும் மருத்துவர்களுக்கு சிங்கப்பூரில் ஒருவார பயிற்சி வழங்கப்படும். இந்தச் செயற்பாடு தொடர்ச்சியாகக் கட்டம் கட்டமாக நடைபெறும். வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆளுமை உள்ள அமைச்சர். அபிவிருத்திக்கு நிதிபெற்று இங்கு சேவை செய்ய வேண்டும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்மொழிந்து 10 மில்லியன் யூரோ நிதியில் திட்டங்களைச் செய்தார் - என்றார்.

குவைத் நாட்டு மக்களின் சுமார் 530 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்தில் உடல் இயக்கம் சார்ந்த பல்வேறு வகையான சிகிச்சை முறைகள் வழங்கப்படவுள்ளன. குவைத் பிரதிநிதிகள் கட்டட உரிமத்தை அமைச்சரிடம் நேற்று உத்தியோக பூர்வமாக ஒப்படைத்தனர். அத்துடன் சிச்சை நிலையம் நினைவாக கேக் வெட்டும் நிகழ்வும் நடைபெற்றது.

நிகழ்வில் குவைத் செம்பிறைச் சங்கத் தலைவர் மருத்துவர் ஹிலால் முசேட் அல் செயர், இலங்கைக்கான குவைத் நாட்டுத் தூதுவர் கலாவ் பூ தாயர், யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இம்மனுவல் ஆனல்ட் மற்றும் அமைச்சின் செயலர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவமனை ஊழியர்கள், அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (த-7)

## ஷாபி...

குருணாகல் நீதிமன்ற நீதிவான் சம்பத் ஹேவாவசத்தால் இரண்டரை இலட்சம் ரூபா பணப் பிணையிலும், 25 இலட்சம் ரூபா பெறுமதியான நான்கு சரீரப் பிணைகளிலும் அவர் விடுவிக்கப்பட்டார்.

நேற்று அவர் குருணாகல் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது நீதிமன்ற வளாகத்தில் அவருக்கு எதிரான குழுவினர் பெருமளவில் குழுமியிருந்தனர். குருணாகல் நகரிலும் அவருக்குப் பிணை வழங்கக்கூடாது என ஆர்ப்பாட்டமும் நடந்தது. இதையடுத்து நீதிமன்ற வளாகத்திலும் குருணாகல் நகரிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. மாலை 5.45 மணிக்குப் பிணை தொடர்பான முடிவை நீதிவான் அறிவிப்பார் என்று இருந்தது. ஆனால், அது ஒரு மணி நேரத்துக்கும் மேல் தாமதமானது.

மருத்துவர் ஷாபியின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் பிணை கோரி நின்றபோதும் எதிராளிகள் சார்பில் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், ஷாபியை பிணையில் விடுவிக்க அரச சட்டவாதிகள் எதிர்ப்பை வெளியிடவில்லை. மருத்துவர் ஷாபி, கடந்த மே மாதம் 24ஆம் திகதி இரவு மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

பயங்கரவாதக் குழுவிடம் பணம் பெற்று அந்தக் குழுவின் நோக்கங்களை நிறைவேற்றியமை, அந்த நிதியூடாக சொத்துக்களைக் கொள்வனவு செய்தமை, சிசேரியன் அறுவைச் சிகிச்சை என்ற போர்வையில் சிங்களப் பெண்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் தனித்தனியாக தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். எனினும், குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படாமையால் வைத்தியர் ஷாபி நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம-22)

## தெரிவுக்குழு...

அடுத்த மாதம் இறுதியில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், இதற்கான இறுதிக்கட்ட சாட்சியங்கள் பதிவு செய்யும் நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## குடாநாட்டில்...

நகரப் பகுதியிலும், மானிப்பாய், பருத்தித்துறை உள்ளிட்ட சில பகுதிகளிலும் நேற்று இரவு 8.30 மணி தொடக்கம் 11 மணிவரை கடும் மழை பெய்தது. (ம)

## அலகரை...

விசனம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தின் இரவு இடம்பெற்றது.



கடந்த வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு கொமர்சல் வங்கியின் சங்கானைக் கிளையில் நேற்று இடம்பெற்றது. சுமார் 20 மாணவர்கள் குறித்த வங்கிக் கிளையினரால் மதிப்பளிக்கப்பட்டனர். கிளை முகாமையாளர் ஈஸ்வரநாதன் மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சுந்தரசிவம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். சங்கானை பிரதேச செயலர் பிரேமினி பொன்னம்பலம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம)

திருவிழாவின் போது காவடிஆட்டம் மற்றும் இரவு நிகழ்வாக மாலைக்கு வாதாடிய மைந்தன் காத்தவராயன் சிந்துநடைக்கூத்து என்பன நடைபெறவிருந்தன. இந்த நிலையில் அந்தக் கும்பல் அட்டூழியம் செய்துவிட்டுச் சென்றுள்ளது. பறை அடித்தவர்கள் மீதும் ஆலய வளாகத்தில் இருந்த கடைக் காரர்கள் மீதும் அந்தக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தும் அவர்கள் வரவேயில்லை. அந்தக் கும்பலுக்கும் பொலிஸாருக்கும் தொடர்புள்ளதா என்றும் அங்குள்ளவர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர். நூற்றுக்கணக்கான மக்கள் திருவிழாவுக்கு வந்த நிலையில் குறித்த குழுவினரின் தரங்கெட்ட செயலால் பக்தர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர் என்று பக்தர்கள் தெரிவித்தனர். (த-ரி3)

## வைரவர்...

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மாவிளந்தையடி ஞான வைரவர் கோவிலே நேற்றுமுன்தினம் இரவு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயம் பல வருடங்கள் தொன்மையானது. பரம்பரை பரம்பரையாக ஒரு குடும்பம் ஆதரித்து வந்தது. அந்தக் குடும்பத்தில் இறுதியாக ஆதரித்து வந்தவர் 1983ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டை விட்டு வெளியேறிச் செல்லும்போது ஆலயத்தில் அனைவரும் வழிபாடுகளை மேற்கொள்ள வழியமைத்துக் கொடுத்தார். அயலவர்கள் பலரும் வைரவரை வழிபட்டு வந்தனர். இந்த நிலையில் 2017ஆம் ஆண்டு கால பகுதியில், ஆலயத்துக்கு அருகில் வசிப்போர், புலம்பெயர் தேசத்தில் வசிப்போர் என்று பலரின் நிதிப் பங்களிப்புடன் ஆலயம் மறுசீரமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. இந்த நிலையிலேயே ஆலயம் இடித்தழிக்கப்பட்டு விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை ஆலயம் இடிக்கப்பட்டமை தொடர்பில் இந்து சமய பெரியவர்கள், அமைப்புக்கள் உள்ளிட்டவற்றுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தன் வந்து பார்த்து எமக்கு ஆறுதல் கூறிச் சென்றுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசாவிடம் ஆலயத்துக்கு நிதியுதவி கோரியிருந்தோம். அவரும் நிதி ஒதுக்கி இருந்தார். அந்த நிதியில் ஆலயத்தை மேலும் சில சீரமைப்பு வேலைகளை செய்யவிருந்த நிலையில் ஆலயம் இடித்தழிக்கப்பட்டுள்ளது என்று அயலவர்கள் மேலும் தெரிவித்தனர். (த-37)

## கூட்டமைப்பின்...

அடைக்கலநாதன் தெரிவித்தார்.

'எங்களுக்கு அரசியல் தீர்வே முக்கியம். அதனால்தான் அரசுக்கு ஆதரவை வழங்கி வருகின்றோம்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பை வழங்குவதாகக் கூறி மக்கள் ஆணையைப் பெற்ற இந்த அரசும் தமிழர்களை ஏமாற்றி தோல்வியடைந்த அரசாக ஆகிவிடக் கூடாதெனத் தெரிவித்து சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் நேற்று முன்வைத்தார். அதன்பின்னர் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசியல் தீர்வை இரண்டு வருடங்களில் தருவதாகத் கூறி எங்களை ஏமாற்றிவிட நினைக்காதீர்கள். தமிழருக்கு அரசியல் தீர்வு ஒன்று தேவை என்பதாலும் அது கிடைக்கும் என்பதாலும் நம்பி நாங்கள் எம்மீதான விமர்சனங்களையும் தாண்டி உங்களுக்கு ஆதரவை வழங்கி வருகின்றோம். அதற்காக நாங்கள் அரசின் அடிவருடிகள் அல்லர். வெறும் கம்பெரலியவை (கிராம எழுச்சியை) வைத்து நாங்கள் அரசியல் நடத்தவில்லை என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். அது ஒரு சிறு நிகழ்வுதான். எங்களுக்கு அரசியல் தீர்வே முக்கியம்' - என்றார். (ம-22)

## சிங்களவர்கள்...

என எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதிய அரசமைப்புத் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக தெரிவித்த அரசு இன்னும் எதனையும் செய்யவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பு இங்கு தெரிவிக்கின்றது. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசின் பங்காளியாகவே இருந்து வருகின்றது. இதனை வாக்களித்த மக்களுக்கு மறைக்கவே அரசுக்கு எதிராக சபையில் கதைக்கின்றனர். அத்துடன் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டாலும் எதிர்க்கட்சி தலைவருக்கு கிடைக்கும் அனைத்து வரப்பிரசாதங்களும் அரசால் அவருக்கு வழங்கப்படுகின்றன - என்றார். (ம)

## குளவி...

சேர்ந்த ஐயாத்துரை அருந்தவராஜா (வயது--63) என்ற முதியவரே உயிரிழந்தார்.

ஊரெழு பர்வவர்த்தனி அம்மன் ஆலயத்தில் வருடாந்தத் திருவிழாவின் மூன்றாம் திருவிழா நேற்று நடைபெற்றது. மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்த குளவிக் கூடு கலைந்ததால் அங்கு கூடியிருந்த பக்தர்கள் நாலா திசையும் ஓடினர். குழவி மூவருக்கு மேல் பட்டோருக்கு கொட்டியது.

முதியவர் ஒருவர் குழவி கொட்டியதால் துடிதுடித்து உயிரிழந்தார். மேலும் ஒரு இளைஞனை மோட்டார் சைக்கிளில் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றருக்கு குளவி துரத்திச் சென்றது என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். (ம-106,37)

see more news in
NEWUTHAYAN.COM

# சிரியாவில் ரஷ்யா தாக்குதல் பொதுமக்கள் 20 பேர் சாவு

டமஸ்காஸ், ஜூலை 26

சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் அரசபடைகள் மற்றும்ரஷ்யப்படைகள்நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 20 பேர் சாவடைந்தனர்.



சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் கான் ஷெக் குன் நகருக்கு அருகில் ரஷ்யப் படைகள் இந்தத் தாக்குதலை நடத்தினசாவடைந்தவர்களில் பலர் குழந்தைகள். மேலும் இட்லிப் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் ரஷ்யப் படைகள் தாக்குதலை நடத்தி வருகின்றன.

கடந்தஏப்ரல்மாதம்முதல், ஆயுததாரிகளின் வசம் உள்ள கடைசிப் பகுதியான இட்லிப் மாகாணத்தை மீட்பதற்குச் சிரியஅரசபடைகள்கடுமையானதாக்குதலை நடத்தி வருகின்றன. இந்தத் தாக்குதலில்இதுவரை700க்கும்மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே ரஷ்யப் படைகள்நடத்தியதாக்குதலில்20பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத்தாக்குதலுக்குஅமெரிக்காகண்டனம்தெரிவித்துள்ளது. உடனடியாகச் சிரியாவில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா அழைப்பு விடுத்த நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

**சிரியப் போர்**

சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும், ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கும்இடையே கடந்தஆறுஆண்டுகளாகஉள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதில் ஆசாத்துக்கு ரஷ்யா ஆதரவு அளிக்கிறது. ஐ.எஸ். அமைப்பின்கட்டுப்பாட்டில்இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரச கூட்டுப்படைகளால்மீட்கப்பட்டுவிட்டன. சிரியாவின் வடகிழக்குப் பகுதியான இட்லிப் மாகாணம் மட்டும் ஆயுததாரிகளின் வசம் உள்ளது. அதை மீட்பதற்காக அரச படைகள் ரஷ்யாவுடன் இணைந்து போரிட்டுவருகின்றன.




## ஏவுகணைகளை ஏவியது வடகொரியா

### தெரிவிக்கிறது தென்கொரியா

சியோல், ஜூலை 26

குறுந்தூர ஏவுகணைகள் இரண்டைவடகொரியஏவியதாகத் தென்கொரிய இராணுவத் தலைமை அதிகாரி தெரிவித்தார். வடகொரியா-அமெரிக்காவுடனானஅணு ஆயுதம் தொடர்பான பேச்சுக்கள் இரண்டாவது முன்றயாகவும்தோல்வியடைந்தபின்னர்இடம்பெற்றமுதலாவது ஏவுகணைப் பரிசோதனை இது எனக் குறித்த தென்கொரிய அதிகாரி தகவல் வெளியிட்டார்.

இந்த ஏவுகணை நடவடிக்கை அமெரிக்க- வடகொரிய - தென்கொரிய நாடுகளுக்கிடையே ஏற்படக் கூடிய நல்லுறவைப் பாதிப்பதுடன் இராணுவ அச்சுறுத்தலாகவே இதைஎண்ணவேண்டியுள்ளது" எனவும்அவர்மேலும் தெரிவித்தார்.

வடகொரியாவின்கடற்கரைநகரமானவொன்சன் இலிருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணைகள் அண்ணளவாக 430 கிலோமீற்றர் தூரம் பயணித்ததாகத் தென்கொரியாவின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. இந்த ஏவுகணைத் தொடர்பான விவரங்களை தென்கொரிய அதிபரின் உத்தியோகபூர்வமான வாசஸ்தளமான 'நீல இல்லம்' முன்னரே அறிந்திருந்ததாக தென்கொரிய தேசிய செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது. அமெரிக்க அதிபரின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகை இது தொடர்பான எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

## ஆப்கானில் குண்டுவெடிப்பு 10 பேர் பரிதாபச் சாவு!

காபுல், ஜூலை 26

ஆப்கானிஸ்தானின் தலைநகர்காபூலில்நடந்த மூன்று குண்டுவெடிப்புகளில் 10 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அங்கு நடைபெறவுள்ள அதிபர் தேர்தலையொட்டிய பரப்புரைகள் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்குத் தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். ஆப்கானிஸ்தானில் அரசபடைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருவதும், அரச படைகளுக்கு ஆதரவாக அங்குஅமெரிக்கப்படைமுகாமிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## 'பிரெக்ஸிட்' நிறைவேற்றப்படும்

### பிரிட்டனின் புதிய தலைமை அமைச்சர் தெரிவிப்பு

லண்டன், ஜூலை 26

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்துபிரிட்டன்வெளியேறுவதான 'பிரெக்ஸிட்' ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் என்று பிரிட்டனின் புதிய தலைமை அமைச்சராகப் பதவியேற்றுள்ள போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.

பிரிட்டனின்புதியதலைமை அமைச்சராகப் போரிஸ் ஜோன்சன் நேற்று வியாழக்கிழமை பதவி ஏற்றார். பதவிஏற்றதைத்தொடர்ந்து பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர்மேலும்தெரிவித்ததாவது:

'இன்னும் 3 மாதங்களுக்குள் 'பிரெக்ஸிட்' ஒப்பந்தம் நிறைவேற்றப்படும். இது குறித்து எதிர்மறைக் கருத்தைத் தெரிவிப்பவர்கள், சந்தேகிப்பவர்களின் கூற்றைத் தவறு என்று நிரூபிப்பேன்- என்றார். பிரெக்ஸிட் ஒப்பந்தம்குறித்துப்போரிஸ் ஜோன்சனின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சிலர் அவரது மகிழுந்தை வழி மறித்தனர்.



**பின்னணி**

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து 2019ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் வெளியேறுவதற்குப் பிரிட்டன் முடிவு செய்தது. இந்த விவகாரத்தை 'பிரெக்ஸிட்' என்றுஅழைத்தனர். 'பிரெக்ஸிட்'தொடர்பாகஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரசா மே ஏற்படுத்திய ஒப்பந்தத்தைஅந்தநாட்டுநாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கவில்லை. நாடாளுமன்றத்தில்பிரெக்ஸிட்ஒப்பந்தத் தீர்மானம் மூன்று முறை தோல்வி அடைந்தது.

இந்த நிலையில்தெரசா மே பதவி துறந்தார். இதனைத் தொடர்ந்து தலைமை அமைச்சர்பதவிக்கானதேர்தல் நடைபெற்றது. இதில் போரிஸ்ஜோன்சன்வெற்றி பெற்றார்.

## இந்தியாவில் விண்கல் கண்டுபிடிப்பு!

இந்தியாவின்பிஹாரில்விண்கல்என்றுசந்தேகப்படத்தக்க கல்ஒன்றுவிழுந்துள்ளமைகண்டுபிடிக்கப்பட்டது. காந்தப் பண்புகளைக் கொண்ட 10 கிலோ எடை கொண்ட அந்தக் கல் பிஹார் மாநிலத்தில் உள்ள மதுபாணி மாவட்டத்தில் விழுந்துள்ளது.குறித்தகல்லைபாட்னாஅருங்காட்சியகத்தில் வைக்குமாறு அந்த மாநிலத்தின் முதல்வர் நிதிஷ் குமார் உத்தரவிட்டார்.

ஜூலை மாதம் 22ஆம் திகதியன்று லாகாஹி பொலிஸ் நிலைய எல்லைக்குள் அமைந்துள்ள மஹாதேவா கிராமத்தில் வயல்வெளிப் பகுதியில் பெரும் சத்தத்துடன் மிகவேகமாக வந்து விழுந்து தரைக்குள் இந்த விண்கல் புதைந்ததை அருகிலுள்ள வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் பார்த்ததாகக் கூறினர். விண்கல் விழுந்த நிலத்தில் 5 அடி ஆழத்தில் பள்ளம் வெட்டியே குறித்த விண்கல்லைத் தோண்டி எடுத்தனர்.

இந்த விண்கல் முதலில் மாவட்டக் கருவூலத்தில் வைக்கப்பட்டது. பின்னர்மாவட்ட ஆட்சியாளரின்உத்தரவின்பேரில் மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கு மாற்றப்பட்டது. முதல்வர் நிதிஷ் குமாரிடம் இதுகுறித்து தெரிவிக்கப்பட்ட பின்னர் அதைப் பாட்னா அருங்காட்சியகத்தில் வைக்குமாறு அவர் கூறினார்.

# அமெரிக்காவுடன் பேசப்போவதில்லை

## ஈரான் பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு

தெஹ்ரான், ஜூலை 26

எந்தக்காரணத்தைக்கொண்டும்அமெரிக்காவுடன் பேச்சுக்களில் ஈடுபடப் போவதில்லை எனக் கூறியது ஈரான்.

ஈரானின்ஆன்மிகத்தலைவரான அயோத்துலா அலி கொமேனியின் பாதுகாப்பு ஆலோசகரே இவ்வாறு தெரிவித்தார்.


கடந்த புதன்கிழமை அந்த நாட்டு ஊடகங்களுக்குஅளித்துள்ளசெய்தியில் இதைஅவர் கூறினார்.

ஈரான்அதிபர்ஹசன்ரவுகாணிபன்னாட்டு ஊடகங்களுக்கு வழங்கிய தகவலில் "நாங்கள் பேச்சுக்களுக்குத் தயாராகவுள்ளோமே தவிர நிபந்தனைகளுக்கு உட்பட மாட்டோம். அதை அமெரிக்கா, நாங்கள் சரணடைவதாகநினைக்கக்கூடாது"-என்றார்.

இது குறித்து அமெரிக்காவின் வெள்ளை மாளிகை விடுத்துள்ள அறிக்கையில் "ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிப்பதன் நோக்கம் ஈரானைச்சமாதானப் பேச்சுக்கு வரும்படி அழுத்தத்தைக் கொடுப்பதற்கே -என்றது.

இந்த நிலையிலேயே ஈரானின் பாதுகாப்பு ஆலோசகர்மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

வளை குடாவில் எண்ணெய்க் கப்பல்கள் தொடர்பான விடயங்கள் உக்கிரமடைந்துள்ள நிலையிலேயே ஈரானின் பாதுகாப்பு ஆலோசகரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.



# சிறையிலிருந்து வெளியேறினார் நளினி!

புதுடெல்லி, ஜூலை 26
இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர்ராஜீவ்காந்திகொலைவழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நளினி சிறை விடுப்பில் விடு விக்கப்பட்டார். அவரது மகளின் திருமண ஏற்பாட்டுக்காக நேற்று வியா ழக்கிழமையன்றுகாலைஅவருக்குச்சிறைவிடுப்பு அளிக்கப்பட்டது.



ராஜீவ்காந்திகொலைவழக்குத்தொடர்பாகவேலூர்பெண்கள்தனிச்சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார் நளினி. அவரது கணவர் முருகன் வேலூர் மத்திய சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார். இந்தத் தம்பதியின் 26 வயதுமகளானஹரித்ராலண்டனில் வசித்து வருகிறார்.

ஹரித்ராவுக்குத் திருமணம் நடக்கவிருப்பதால், அந்த ஏற்பாடுகளுக்காகத் தன்னை 6 மாதங்கள் சிறைவிடுப்பில் அனுப்பும்படி கோரி நளினி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

அந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு ஒரு மாதம் மாத்திரம் சிறை விடுப்பு அளிப்பதற்கு உத்தரவிட்டது. நீதிமன்ற உத்தரவுப்படி கடந்த திங்கள் கிழமைக்குள் அவர் விடுவிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், பாதுகாப்புக் காரணங்களாலும்அவர்தங்குவதற்கு சரியான இடம் கிடைக்காததாலும் நளினியை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இந்த நிலையில், அவர் நேற்று வியாழக்கிழமை காலை ஒன்பதரை மணியளவில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். சத்துவாச்சாரியில் உள்ள திராவிட இயக்கத் தமிழர் பேரவையின்துணைப்பொதுச்செயலாளர் சிங்கராயர்வீட்டில்இந்தஒருமாதகாலமும் தங்கியிருப்பார். ஊடகங்களிடம் பேசக்கூடாது, பொலிஸாரின் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் நளினிக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டுள்ள நளினி, சாந்தன், முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரையும் முன்கூட்டியே விடுவிக்க முடிவெடுத்ததமிழகஅரசுஅதைஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்க, அந்த உத்தரவுக்கு ஆளுநர் இன்னும் ஒப்புதல் அளிக்காத நிலையில் இந்த விடுவிவிப்பு நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





பிரான்ஸைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளரான வ்பிராங்கி சபாடா என்பவர் தனிநபர் பறக்கும் வகையிலான பறக்கும் ஊர்தியைத் தயாரித்து அதில் பறந்தார். பிரான்சின் சங்கட்டேவிலிருந்துபிரித்தானியாவரை ஆங்கிலக் கால்வாயைக் கடந்து பறந்தார் அவர்.

# எங்களுக்கு அச்சுறுத்தல் என்றால் பிரிட்டனின் தனிப்படைக்குத் தடை

## ஈரான் தெரிவிப்பு

தெஹ்ரான், ஜூலை 26
வளைகுடாவில் பயணிக்கும் கப்பல்களின் பாதுகாப்புக்காக மேற்குலக நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகள் எங்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்தால் எந்த நாட்டுக் கப்பலும் வளைகுடா ஊடாகப் பயணிப்பதைஈரான்அனுமதிக்காது எனத் தெரிவித்தார் ஈரானின் புரட்சிகர இராணுவத்தின் மூத்த அதிகாரியான ஹொசேன் டெய்கன். போர் ஏற்பட்டால் அமெரிக்காவால் ஆதரவு வழங்கப்படும் சகல மத்திய கிழக்கு நாடுகளும் ஈரானின் தாக்குதலுக்கு ஆளாகும் எனவும் அவர் மேலும் கூறினார். டெய்கனின் இந்தப்பேச்சுஅமெரிக்க- ஈரான் இடையிலான சமாதான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாகிவிட்டதுஎனஅரசியல்ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.



**பின்னணி**

வளைகுடாப் பகுதியில் பயணிக்கின்ற கப்பல்களின் பாதுகாப்புக்காகத் தனிப்படையை உருவாக்கவுள்ளதாகப் பிரிட்டன்தெரிவித்தது. உருவாக்கப்படவுள்ள கூட்டுப் படையில் இணையுமாறு பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு அது அழைப்புவிடுத்தது. அமெரிக்காவை இந்தக் கூட்டுப் படையில் இணைத்துக்கொள்வதற்குப்பிரிட்டன் விரும்பவில்லை. இந்த நிலையில்தான்ஈரான்இவ்வாறுதெரிவித்தது.



## இன்றைய நாள்

**மேடம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் சொந்த விஷயம் பேச வேண்டாம். தொழிலில் உள்ள அனுகூலத் தன்மைகளை பாதுகாப்பது நல்லது. சேமிப்பு பணம் திடீர் செலவால் கரையும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**இடபம்:** வசீகரத் தன்மையுடன் பேசுவீர்கள். எதிர்ப்பாளர் இடம் தெரியாமல் விலகுவர். தொழில் வியாபாரம் செழித்து வளர தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கூடும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** முக்கிய பணி நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். தொழில் நடைமுறை சீராக நண்பர்களின் உதவி கிடைக்கும். பணவரவு சுமாராக இருக்கும். பணியாளர் பாதுகாப்பு விதிகளை தவறாமல் பின்பற்றவும்.

**சிம்மம்:** தெய்வ நம்பிக்கையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார நடைமுறை சராசரி அளவில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் செய்வீர்கள்.

**கன்னி:** மனதில் பெருமித எண்ணம் மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாக இருக்கும். வருமானம் உயரும். பிள்ளைகளின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்:** நண்பர், உறவினர் பாராட்டும் வகையில் நடப்பீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்பு கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். நீண்ட நாள் காணாமல் தேடிய பொருள் புதிய முயற்சியால் கைவந்து சேரும்.

**விருச்சிகம்:** புதியவரை நண்பராக ஏற்பதில் கூடுதல் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். பணி யாளர்கள் பணிச் சுமையால் அவதிப்படுவர்.

**தனுசு:** சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து செயல்படுவது நல்லது. உணவுப்பொருள்தரம்அறிந்து உண்பது நன்மை தரும். உபரி பணவரவால் சேமிப்பீர்கள்.

**மகரம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி வளரும்.

**கும்பம்:** உங்களின் எதார்த்த பேச்சு சிலருக்கு சிரமம் தரலாம். தொழில் சார்ந்த இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவால் கரையும்.

**மீனம்:** சமூகத்தில் மதிப்பு மரியாதை உயரும். தொழில் வியாபார வளர்ச்சிக்கான சூழ்நிலை உருவாகும். நிலுவைப் பணம் வசூலாகும். அரசியல்வாதிகளுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 26
சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக்கழகம் அருட்சகோதரன் கில்லறி ஜோசப் அவர்களின் 100 ஆவது பிறந்தநாளைமுன்னிட்டும், கில்லறி விளையாட்டுக்கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இன்று வெள்ளிக்கிழமை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பனங்கட்டுகொட்டுசென். ஜேசப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நானாட்டான் றீகன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி கிராஞ்சி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ். கால்பநதாடட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்றவுள்ளது.
மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்னேஸ்வர் விளையாட்டுக் கழக அணியை ஊரெழு றோயல் விளையாட்டுக் அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஜூலை 26
வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகம் தூய அன்னம்மாள் ஆலய திருவிழாவை முன்னிட்டு நடத்தும் அமதி கொண்சால்வேஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 11பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.
இதில் தேவன்பிட்டி ஜோசப்வாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிகுடா இளந்தளிர் விளையாட்டு கழக அணி மோதவுள்ளது. மற்றுமோர் ஆட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம் பெறும் ஆட்டத்தில் ஈகிள்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக்கழக அணி மேதவுள்ளது. முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பள்ளிக்குடா இளந்தளிர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஜூலை 26
இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அப்புத்துரை தம்பிராஜா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 5 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.
மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து லம்போதரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பைஸ்ரார் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்துமாவத்தைவிளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.50 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கண்ணகி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 6.10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 6.50 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வானவில் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அறிவொளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். தோமஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூவோரியஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8.10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈவினை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஏ.எல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஜூலை 26
கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழகத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியான தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றது.
இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (28)



2019ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டியில் ஓர் அங்கமான காரத்தே போட்டியில் பங்கு பற்றி பதக்கங்கள் பெற்ற சக்குறா சோட்டோக்கான் காரத்தே சங்கத்தின மாணவர்கள் மதிப்பளிக்கப்படும் நிகழ்வு கடந்த வாரம் முதன்மை பயிற்சி ஆசிரியர் சென்சே சி.விஜயராஜ் தலைமையில் இடம்பெற்றது.

## மாவட்ட மட்ட போட்டிகள் சில நாளை

கிளிநொச்சி மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தல், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல், 5ஆயிரம், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம், 5ஆயிரம், 10 ஆயிரம் மீற்றர் வேக நடை போட்டிகள் நாளை சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. ஏனைய போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

## சைக்கிள் ஓட்டமும் சவாரிப் போட்டியும்



யாழ்ப்பாணம், ஜூலை 26
கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் தேசிய ரீதியிலான ஈருளி ஓட்டப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளது.
இதேவேளை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணிக்கு வடக்கு மாகாண ரீதியிலான மாட்டு வண்டி சவாரிப் போட்டி கைதடி உரியன் மாட்டு வண்டி சவாரித்திடலில் இடம் பெறவுள்ளது. (23)

## போட்டி முடிவுகள்

உதயசூரியன் விளையாட்டுக் கழகம் வடமராட்சி கிழக்கு வீரர்களை உள்ளடக்கி நடத்தும் உதயசூரியன் சூப்பர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் ரங்கோ எவ்.சி அணி வெற்றி பெற்றது. நேற்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் ரங்கோ எவ்.சி. அணியை எதிர்த்து டேன்சறஸ் போய்ஸ் எவ்.சி. அணி மோதியது. இதில் ரங்கோ எவ்.சி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மற்றுமொரு ஆட்டத்தில் ரைகர் எவ்.சி. அணியை எதிர்த்து கில்லர் எவ்.சி அணி மோதியது. இதில் ரைகர் எவ்.சி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

*** *** ***

யாழ்ப்பாணம் ஜூலை 26
யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
நேற்று வியாழக்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் மாலை 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலை ஒளி விளையாட்டுக்கழக அணி மோதியது இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 2: 0 என்ற கோல் கணக்கில் பெற்றது.
மற்றுமொரு ஆட்டம் மாலை 5 மணிக்கு இடம் பெற்றது. இதில் ஒலிம்பிக் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணியந்தோட்டம் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் பெற்றது. (23)



ஆவரங்கால் இந்து இளைஞர் வி. க.



ஆவரங்கால் மத்திய வி. க.

## இந்துஇளைஞர் – ஆவரங்கால் மத்திய கரப்பந்தாட்ட இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 26
கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.
இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இறுதியாட்ட நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார். (23)

# மீண்டும் பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளராக ஹதுருசிங்க?



பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளராக இலங்கை அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளர் சண்டிக ஹதுருசிங்க மீண்டும் நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதனை பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் நஜ்முல் ஹசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
இலங்கை- பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரின் பின்னர் ஹதுருசிங்க பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளராகலாம்.

பங்களாதேஷ் அணிக்கு ஹத்துருசிங்க முன்னர் பயிற்சியாளராக செயற்பட்டவேளை அவருக்கு முழுமையான ஆதரவை வழங்கியவரான நஜ்முல் ஹசன் தற்போது ஹத்துருசிங்கவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முடியாதநிலை காணப்படுகின்றது. ஏனெனில் ஒருநாள் தொடர் ஆரம்பமாகவுள்ளதால் ஹத்துருசிங்கவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு எங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.
இந்தியத் துணைக் கண்டத்தில் பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட அனுபவமுள்ள ஒருவரையே பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை எதிர்பார்க்கின்றது. நாங்கள் தலைமைப் பயிற்றுவிப்பாளர், வேகப்பந்து வீச்சு பயிற்றுவிப்பாளர் உட்பட பல பயிற்றுவிப்பாளர்களை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.
இந்தத் தொடர் முடிவடைந்ததும் புதிய பயிற்றுவிப்பாளராக தெரிவு செய்யப்படக்கூடியவர்களில் ஹத்துருசிங்கவும் ஒருவராக காணப்படுவார் - என்றார்.



*ஆஷஸ் தொடரில்*

# இங். வீரர் பென்ஸ்டோக்ஸ் அச்சுறுத்தலாக இருப்பார்

*ரிக்கி பொண்டிங் ஆருடம்*

உலகக் கிண்ணத்தில் அதிரடி காட்டிய இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸ் ஆரம்பமாகவுள்ள ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு பெரிய அச்சுறுத்தலாக இருப்பார் என்று ஆஸ்திரேலியாவின் முன்னாள் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
பென்ஸ்டோக்ஸ் தற்போது ஆடும் விதம் நிறைய முதிர்ச்சியை வெளிப்படுத்துகிறது. அவர் எப்போதும் ஒரு அவசரத்தில் இருப்பார், ஆனால் தற்போது அவரிடத்தில் நிதானம் பிறந்துள்ளது.
அவரது ஆளுமையைப் பார்க்கும் போது வலிமையான ஒரு வீரராகவும் கொஞ்சம் ஈகோ அதிகமுள்ளவராகவும் தெரிகிறது. இளம் வீரராக இவை அவசியமான சில குணாம்சங்களாகும்.
ஆனால் உலகக் கிண்ண இறுதிப் போட்டியின் போது அவர் சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப தன் ஆட்டத்தை மாற்றிய விதம் அவரிடம் முதிர்ச்சியைக் காட்டுகிறது. மேலும் தன் ஆட்டத்தை அவர் புரிந்து கொள்வதாகவும், அணிக்குத் தேவையானதை புரிந்து கொண்டதாகவும் எனக்குத் தெரிந்தது.
அவருடைய இந்த மாற்றம்தான் ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு பெரிய அச்சுறுத்தலாகப் போகிறது என்று நினைக்கிறேன். அவர் இங்கிலாந்து அணியின் உண்மையான இருதயத் துடிப்பாக இருக்கிறார்.
இங்கிலாந்து எப்போது பிரச்சினைகளைச் சந்தித்தாலும் அவர்களுக்கு ஏதாவது ஒன்று தேவைப்படுகிறது, இப்படிப்பட்ட வீரர்கள் அவர்களுக்குக் கிடைக்கிறார்கள். தொடரை வெல்ல வேண்டுமெனில் பென்ஸ்டோக்ஸை பிரகாசிக்க விடாமல் தடுக்க வேண்டும் - என்றார்.

# இமாம் உல் ஹக் மீது இளம்பெண்கள் முறைப்பாடு

பாகிஸ்தான் அணியின் இளம் கிரிக்கெட் வீரர் இமாம் உல் ஹக் காதலித்து ஏமாற்றியதாக பல இளம்பெண்கள் அவர் மீது முறைப்பாடு செய்துள்ளனர்.
பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர் இன்சமாம் உல் ஹக்கின் உறவினரும், பாகிஸ்தான் அணியின் இளம் கிரிக்கெட் வீரருமான இமாம் உல் ஹக் தங்களைக் காதலித்து ஏமாற்றியதாக 8 பெண்கள் கூறியுள்ளனர்.
இது தொடர்பான தகவலை அமாம் என்ற ருவிற்றர் பயனாளர் ஒருவர் தனது ருவிற்றர் பக்கத்தில், அந்தப் பெண்கள் இமாம் உல் ஹக்கிடம் நடத்திய உரையாடலை வெளியிட்டிருக்கிறார். அவர் வெளியிட்டுள்ள உரையாடலில் இமாம் உல் ஹக் அந்தப் பெண்களிடம் காதலிப்பதைப் போல் பேசி, அவர்களின் புகைப்படங்களையும் கேட்டுள்ளார். பின்னர் நான் காதலிக்கிறேன். ஆனால், என்னால் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று இமாம் கூறிய பதில்களும் அதில் உள்ளன.
இதனைத் தொடர்ந்து சமூக வலைத்தளங்களில் இமானுக்கு எதிராக பலரும் விமர்சனங்களைத் தெரிவித்துள்ளனர்.



# இந்திய களத்தடுப்பு பயிற்சியாளராக ஜான்ட்டி ரோட்ஸ் விண்ணப்பம்


இந்திய அணிக்கான தலைமைப் பயிற்சியாளர் உள்ளிட்ட தேர்வுகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் உலகின் தலைசிறந்த களத்தடுப்பாளராகக் கொண்டாடப்படும் தென்னாபிரிக்காவின் ஜான்ட்டி ரோட்ஸ் இந்திய களத்தடுப்பு பயிற்சியாளராக விண்ணப்பித்துள்ளதாக தெரிய வருகின்றது.
இவர் மும்பை இந்தியன்ஸ் அணியில் களத்தடுப்பு பயிற்சியாளராக ஓரளவுக்கு சோம்பேறியாக நகரும் ரோகித் சர்மாவின் பிடியெடுப்புக்களை முன்னேற்றியுள்ளார்.
தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு



மகேல ஜெயவர்தனே, டாம் மூடி ஆகியோரும் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. கபில்தேவ் குழுவினர் தலைமைப் பயிற்சியாளரைத் தெரிவு செய்வர்.

# சச்சினின் காணொலிப் பதிவால் கேலிக்குள்ளான நடுவர் தர்மசேன

வழமைக்கு மாறான ஆட்டமிழப்பு முறையைக் காண்பிக்கும் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ள இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் ரசிகர்களின் கருத்தை சமூக வலைத்தளத்தில் கோரினார்.
அவர் வெளியிட்டுள்ள காணொலியில் பந்து ஸ்டம்பில் பட்ட பின்னர் பெயில்ஸ் மேலெழும்பிய பின்னர் கீழே விழாமல் மீண்டும் வந்து விக்கெட்டில் சரியாக நிற்கின்றது. நடுவர் குறிப்பிட்ட துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழக்கவில்லை என அறிவிக்கின்றார்.
நண்பர் ஒருவர் இந்த காணொலியை எனக்கு அனுப்பியிருந்தார் இது முற்றிலும் வழமைக்கு மாறானதாக காணப்படுகின்றது என தெரிவித்துள்ள சச்சின் நீங்கள் நடுவராகயிருந்தால் என்ன தீர்ப்பை வழங்குவீர்கள் என்று ரசிகர்களிடத்தில் கேட்டார்.
இதற்கு பல்வேறு சுவாரஸ்யமான பதில்கள் கிடைத்தன. அவற்றில்;
துடுப்பாட்டர் வீரர் பெயிலில் விடுதலையானார் என இரசிகர் ஒருவர் கருத்து பதிவுசெய்துள்ளார்.
பெயில்ஸ் விக்கெட்டிலிருந்து வெளியே பறந்ததால் துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்துள்ளார் என நடுவர்கள் அறிவிக்கவேண்டும் எனவும் இரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.



வீரர் ஆட்டமிழந்துவிட்டார் ஆனால் விதிமுறைகளின் அடிப்படையில் அவர் ஆட்டமிழக்கவில்லை என சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.
இதேவேளை. சிலர் இலங்கை நடுவர் குமார் தர்மசேனவை தங்கள் பதிவுகளுக்கு இழுத்து அவரை கேலி செய்தனர்.
குமார்தர்மசேனவுக்கு இவ்வாறான சூழ்நிலையை எப்படி கையாளவேண்டும் என்பது தெரிந்திருக்கும் என இரசிகர் ஒருவர் பதிவு செய்துள்ளார்.
தர்மசேன இந்த சூழ்நிலையில் நடுவராகயிருந்தால் நிச்சயம் துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்துவிட்டார் என தீர்ப்பை வழங்கியிருப்பார் என இரசிகர் ஒருவர் தெரிவித்தார்.

# காயத்திலிருந்து மீண்டார் ஆஸி. வீரர் பேட்டின்சன்

ஆஸ்திரேலிய டெஸ்ட் வேகப்பந்து வீச்சு என்றாலே கம்மின்ஸ், ஸ்டார்க், ஹசில்வுட் என்ற மூவர் கூட்டணியின் ஆதிக்கம்தான் நினைவுக்கு வரும் ஆனால் இந்த மூவர் கூட்டணியில் தற்போது உள் நுழைந்தார் ஜேம்ஸ் பேட்டின்சன் என்ற இன்னொரு வேகப்பந்து வீச்சாளர். அவர் காயத்திலிருந்து மீண்டு போராடி அணியில் இடம்பெற முன்னுரிமை கோரியுள்ளார்.

ஆஷஸ் தொடருக்கு முன்பாக கவுண்ட்டி கிரிக்கெட்டை விடவும் ஆக்ரோஷமான முறையில் சவுத்தாம்ப்டனில் ஆஸ்திரேலிய அணி தங்களுக்குள்ளேயே இரு அணிகளாகப் பிரிந்து டெஸ்ட் போட்டி போல் ஆடி பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது டியூக் பந்துகளில் ஜேம்ஸ் பேட்டின்சன் அசத்தினார், அவரது பந்து வீச்சுக்கு ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களாலேயே ஆட முடியவில்லை. இது குறித்து கம்மின்ஸ் தெரிவிக்கையில்;

பேட்டின்சன் மற்றவர்களை விட ஒரு படிமேலே இருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக சில ஆண்டுகள் அவரால் ஆட முடியவில்லை. அவர் தன்னம்பிக்கையுடன் உள்ளார், அவரது தினத்தில் எந்த அணியையும் ஊதிவிடுவார். எனவே முதல் டெஸ்ட் போட்டிக்கு பேட்டின்சன் அணியில் இடம்பிடித்தால் ஸ்டார்க் வழி விட வேண்டும் அல்லது ஹசில்வுட் வழிவிட வேண்டும் - என்றார்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.07.2019 | வெற்றி வாரம் 2568 | வர்ணம் கபிலம்.
கடகம்
வெற்றி இலக்கங்கள் 02 06 08 53
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,654,650/=
26.07.2019ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1589 | சீட்டிழுப்பு திகதி 25.07.2019
வெற்றி இலக்கங்கள் 16 27 36 56 T
அடுத்த திங்கட் கிழமைக்கான ஜக்பொட் ரூ.34, 718, 468/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 680
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.07.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 73,270,445/-
வெற்றி இலக்கங்கள் 05 20 31 37 R

இலவச ஆங்கில, சிங்கள வகுப்பு
4 மணித்தியாலம்
இலகு வழி கற்பித்தல் முறை
28.07.2019 ஞாயிறு 9 a.m to 1p.m (சிங்களம்)
29.07.2019 திங்கள் 9 a.m to 1p.m (ஆங்கிலம்)
முற்பதிவினை மேற்கொண்டு பங்குபற்றவும்
ELAS Sir Pon Ramanathan Rd, Thirunalveli Jaffna.
பல்கலை எதிரில்
021 221 2410, 076 697 3040, 076 223 5678

பெயர் மாற்றம்
நாகலிங்கம் சண்முகரத்தினம் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை நாகலிங்கம் ரவி என மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் ரவி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.
- ரவி -

CCTV பொருத்துதல்
கண்காணிப்புத் துறையில் அனுபவம் வாய்ந்த எமது நிறுவனத்தின் ஊடாக
உங்களின் அவசர தேவைக்கேற்ப கண்காணிப்புக் கமராக்களை விரைவாகவும் மலிவாகவும்
வட மாகாணம் முழுவதிலும் ஒரே நாளில் பொருத்தித் தரப்படும்
எங்களைத் தேடவும் www.facebook.com/VconItPark/
V-CON IT PARK
இல. 603, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(நாச்சிமார் கோவில் அருகாமை)
077 3767 899 021 221 1818

வாடகைக்கு
நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு ஏற்ற வீட்டின் பகுதி (அனெக்ஸ்) தனியான பாதையுடன் குறுகிய கால வாடகைக்குண்டு.
071 513 0100

வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்
இல.113, பலாலி வீதியில் அமைந்துள்ள (இலுப்பையடிச் சந்திக்கும் கந்தர்மடச் சந்திக்கும் இடையில்) வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
077 925 2370 (CS/26919) (11,17)

SLAS (Op/ Ltd) கருத்தரங்கு
அநேக பரீட்சார்த்திகளின் வேண்டுகோளுக்கிணங்க 27.07.2019 சனிக்கிழமை நாவலர் கல்வி நிறுவனத்தில் நடைபெறவிருந்த வகுப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளது.
ஆரம்ப வகுப்புக்கள் 03.08.2019
சனி 9 am - 3.30 pm
P. கமல்தாசன் மற்றும் வளவாளர்கள்
R.C. அமல்ராஜ் SLAS
K. தெய்வேந்திரம் SLAS
A. சுபாகரன் SLEAS
A.K. கீர்த்திராஜன் MA
K. குமணன் SLPS
5 பாடம் 4 பாடம்
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 111 6739, 076 166 1986

SLAS Open/ Limited
போட்டிப்பரீட்சைக்கான தொடர்வகுப்புக்கள்
உங்கள் வசதிக்கேற்ப மூன்று பிரிவுகளாக இவ்வாரம் ஆரம்பம்.
பிரிவு I பிரதி சனி 9.00→3.30
பிரிவு II பிரதி ஞாயிறு 9.00→3.30
பிரிவு III பிரதி திங்கள், செவ், வியா, வெள்ளி பி.ப 5.00→7.00
* வழமையான விரிவுரையாளருடன் துறைசார்வளவாளர்களினால்
தொடர்புகளுக்கு 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

A/L தமிழ்
இறுதிக் கருத்தரங்கு
A.K.கீர்த்திராஜன்
காலம் : 28.07.2019 ஞாயிற்றுக்கிழமை
9.00 - 3.00 வரை
இடம்: NEC, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 977 9700

வேலையாள்கள் தேவை
ஜீவன் ஸ்ரூடியோ (Printing Show Rooom)
➤ வரவேற்பாளர்கள் - சம்பளம் (20,000/= - 30,000/=)
➤ பக்கவடிவமைப்பாளர்கள் - (Photoshop,Corel Draw) (20,000 /= - 40,000 /= )
➤ உதவியாளர்கள்- (Wedding Card, Bag making)
முன்னனுபம் உள்ளவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும்
No305, Clock Tower Road, Jaffna
077 978 5717



# இங்கிலாந்து அணி முன்னிலையில்

அயர்லாந்து அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. நேற்றுமுன்தினம் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 85 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. உலகக் கிண்ணப் போட்டியின் பின்னர் கிண்ணம் வென்று தனது முதலாவது டெஸ்ட் போட்டியை அயர்லாந்து அணியுடன் ஆடிய இங்கிலாந்து அணிக்கு அயர்லாந்து அணி அதிர்ச்சியைக் கொடுத்தது. இங்கிலாந்து அணி தனது சொந்த மண்ணில் அதுவும் 2019 உலகச் சம்பியன் அணி 23.4 பந்துப் பரிமாற்றங்களில் 85 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து சுருண்டது. இதில் அறிமுக டெஸ்ட்டில் களமிறங்கிய அதிரடி ஒரு நாள் வீரர் ஜேசன் ரோய் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் முர்டாக் 13 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், அடைர் 3 இலக்குகளையும், ரான்கின் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதுவரை இங்கிலாந்து அணி தங்கள் சொந்த மண்ணில் இவ்வாறான குறைந்த ஓட்டங்களில் மடிந்தது இல்லை. 1995ம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக 30 பந்துப்பரிமாற்றங்களில் 89 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அந்தப்போட்டியில் இங்கிலாந்து இன்னிங்ஸ் தோல்வி தழுவியது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணியில் பட்லர், பென்ஸ்டோக்ஸ், அண்டர்சன் உள்ளிட்ட முக்கிய வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு பர்ன்ஸ், ராய், ரூட், டென்லி, பேர்ஸ்டோ, மொயின் அலி, கிறிஸ் வோக்ஸ், சாம் கரண், பிராட், லீச், ஸ்டோன் ஆகியோருடனே களமிறங்கியது.

பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்து அணி 207 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து 122 ஓட்டங்களால் முன்னிலையிலிருந்தது. இதில் பல்பிர்னி அரைச் சதம் கடந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

பதிலுக்கு நேற்று இரண்டாம் நாளுக்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லீச் தனது பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் அவர் தனது சதத்தை தவற விட்டு 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் இணைந்த ரோய் அதிரடியை வெளிப்படுத்தினார். அவர் 72 ஓட்டங்கள் அடித்து பவிலியன் திரும்பினார். அணி 77.4 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்ற போது மழை குறுக்கிட்டதால் போட்டி இடைநிறுத்தப்பட்டது. இரண்டாம் நாள் நிலவரப்படி இங்கிலாந்து அணி 181 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது.

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
P. உமாசங்கர் & வளவாளர்கள்
SLAS (open / Limited)
S. அன்ரன் பெரேரா
28.07.2019 ஞாயிறு
மு.ப.9.00 - பி.ப.4.30
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
076 166 1986, 077 741 7142

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26 .07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.